கிழக்கில் மீன்பாடும் தேனாடாம்
மட்டக்களப்பின் ஆரையம்பதியைப்
பிறப்பிடமாகக் கொண்டவர்
ரவிவர்மன்.
1983களுக்குப் பின்னான
வடக்கு கிழக்கு தமிழ் சமூகத்தின் அரசியல்.
அதனால் ஏற்பட்ட அவலங்கள்.
எதிர்கொண்ட நிகழ்வுகள்.
போர்க்கால வாழ்வு
என்பனவெல்லாம்
இவரது படைப்பிலக்கியத்திற்கான
கருவாக கொள்ளப்பட்டிருக்கின்றன.

படைப்பிலக்கியம்
வரலாறாக பதிவுபெற வேண்டும்.
மானுட விழிப்புக்கு உந்து சக்தியாக
மாற வேண்டுமென்ற சிந்தனை கொண்டவர்
ரவிவர்மன்.
அவர் ஒரு பத்திரிகையாளராக இருப்பது
அவருக்கு நிறைய உதவுகிறது.

ஈழத்து நூன்

நெடுங்காலத்தின் பின்னொருநாள்

பி. ரவிவர்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்காலத்தின் பின்னொருநாள்

பி.ரவிவர்மன்

நிகரி
வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்காலத்தின் பின்னொரு நாள், சிறுகதைத் தொகுப்பு, பி.ரவிவர்மன், பதிப்புரிமை: ஆசிரியருக்கு, முதல்பதிப்பு: செப்.10.2004, கணிப்பொறி வடிவமைப்பு: சி.பிரசாந், அட்டை வடிவமைப்பு: சுரேன். பக்கங்கள்: XII+96, அச்சாக்கம்: ஈ-குவாலிற்றி கிராபிக்ஸ், 315, ஜம்பெற்றா வீதி, கொழும்பு-13. வெளியீடு: நிகரி, 24, 6/9, இனிசியம் றோட், தெஹிவளை. விலை: ரூபாய் 175

Nedun kaalathin pinnoru naal (Collection of Short Stories) P.Ravivarman ©, First Edition: Sep. 10th, 2004, Pages: XII+96 Type setting: S.Prasanth, Cover design: Suren, Printing: E-Kwality Graphics, 315, Jampettah Street, Colombo-13. Publishers: Nihari Publishers, 24, 6/9, Initium Road, Dehiwela. Price: Rs 175

தமிழீழ விடுதலைப் போராட்ட வாழ்வியலுக்குள்
தமது இன்னுயிரை ஈர்த்த
அனைத்து மனிதர்களுக்கும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

ஈழத்து இலக்கியப் போக்கில் 90களில் ஏற்பட்ட மாற்றம் ஒரு வகையில் இதற்கு முந்தியதும் பிந்தியதுமான காலப் பகுதிகளுடன் ஒப்பிடுகையில் விசேட முக்கியத்துவம் வாய்ந்தது என்று நினைக்கின்றேன். எண்பதுகள் முழுவதுமே மிகவும் தீவிரமான அரசியல் மாற்றங்களை உள்வாங்கிய காலப்பகுதியாக அமைந்திருந்தது. 1983 கலவரத்தைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெருமளவில் இளைஞர்கள் திரண்டெழுந்தது, ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் அவர்கள் இறங்கியது, பாரிய சுற்றி வளைப்புக்களும் தேடுதலும் கண்மண் தெரியாத தாக்குதல்களும், இனப் படுகொலைகளும், கைதுகளும் மலிந்த அரச அடக்குமுறை மிகத் தீவிரமான வடிவத்தைப் பெற்றது என்று நம்பமுடியாத பல்வேறு மாற்றங்கள் நிறைந்த பேரழிவுகளை இந்தக் காலம் பதிவு செய்வதாக அமைந்தது. ஆயுதப் போராட்டத்தின் தீவிர வளர்ச்சி, இந்திய, இலங்கை அரசுகளுக்கிடையிலான முரண், இலங்கை - இந்திய ஒப்பந்தம், இயக்கங்களுக்கிடையிலான மோதல், இயக்கங்களுக்கு எதிரான மாணவர் போராட்டம், இந்தியப்படை வருகை, இந்தியப் படையுடனான யுத்தம், பெருமளவில் மக்கள் அகதிகளாகியமை, மாகாணசபை உருவாக்கம் என்று இந்தக் காலம் பல புயல்வேக மாற்றங்களை உள்வாங்கி இருந்தது.

ஆயினும் இவை ஏற்படுத்திய சமூக நெருக்கடிகள், அரசியல் மற்றும் சுய இலக்கியத் தளங்களின் மீதான இவற்றின் தாக்கங்கள் தொடர்பான பிரதிபலிப்புகள் வெளிவரத் தொடங்கிய காலமாக 90களையே கொள்ள வேண்டும். ஈழத்திலும், புலம்பெயர்ந்தும் வாழ்ந்த பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் விடுதலைப் போராட்ட அனுபவங்களைப் பற்றியும் அரசியல் போக்குக் குறித்தும் பேசத் தொடங்கிய காலமென்று இதனைச் சொல்லலாம். இலங்கையில் சரிநிகர் பத்திரிகை கொழும்பிலிருந்து வெளிவரத் தொடங்கிய அதேவேளை புலம்பெயர் நாடுகளில் பத்துக்கும் மேற்பட்ட பத்திரிகைகள் வெவ்வேறு இடங்களிலிருந்து வெளியாகின. அனேகமாக அவை எல்லாவற்றினதும் பெருமளவிலான உள்ளடக்கமாக இருந்ததெல்லாம் தேசிய விடுதலைப் போராட்டம் பற்றிய அரசியல் கருத்துக்களாகவும் அப்போராட்டத்தின் காரணமாக ஏற்பட்ட அனுபவங்களை பல்வேறு இலக்கிய வடிவங்களில் வெளிப்படுத்துவதாகவுமே அமைந்தன.

ஒரு புறம் தேசிய விடுதலைப் போராட்டம் சம்பந்தமான, விடுதலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கங்கள் தொடர்பான, அவற்றின் அரசியற் செயற்பாடுகள் தொடர்பான தீவிர விவாதங்கள் எழுந்தன. கேள்விகளுக்கு அப்பாற்பட்டது எதுவுமில்லையென்ற நோக்கத்துடன் எல்லாவிதமான கேள்விகளும் எழுப்பப்பட்டன. கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன. அரசியல் நிலைப்பாடு, ஜனநாயக மறுப்பு, தேசியத்தின் நியாயம், தேசிய விடுதலைப் போராட்டத்தில் செயல்நெறி, பயங்கரவாதம், சித்திரவதை என்று அவை எல்லா அம்சங்களையிட்டும் கேள்வி எழுப்புவனவாக இருந்தன. இக்காலகட்டத்தில் இவ்வாறு அரசியல் தளத்தில் விவாதம் நடக்கும் அதேவேளை மறுபுறத்தில் இலக்கியத் தளத்திலும் போராட்ட கால அனுபவங்களை வெளிப்படுத்துகின்ற, கேள்வி எழுப்புகின்ற படைப்புகளும் வெளிவரத் தொடங்கின. கோபம், வேகம், நம்பிக்கை, விரக்தி, தேடல், எள்ளல் என்று பல்வேறு உணர்வுத் தளங்களில் இப்படைப்புக்கள் வெளியாகின. எழுதுவதற்கான தளங்களும் தாராளமாகவே கிடைத்தன. விடுதலை இயக்கங்ககளில் இருந்து அரசியல் முரண்பாடு, ஜனநாயக மறுப்பினைச் சகிக்க முடியாமை, நாட்டில் வாழ முடியாத நிலை ஏற்பட்டமை என்ற பல்வேறு காரணங்களுக்காக விலகி நாட்டை விட்டு அல்லது ஊரைவிட்டு இடம்பெயர்ந்த பல இளைஞர்கள் எழுத்துத்துறைக்குள் வந்தனர். தேசிய விடுதலைப் போராட்டத்தை தாம் சரியெனக் கருதிய அரசியற் போக்கில் தொடர்ந்து கொண்டு செல்ல முடியாமல் போய்விட்ட வெப்பிசாரம் முதல், தாம் தனிப்பட்ட முறையில் ஒதுங்கினாலும் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக இருக்க வேண்டுமென்ற உணர்வு வரையான பல்வேறு உணர்வுத்தளங்களை கொண்டவர்களும் இந்த எழுத்துத்துறைக்குள் வந்தவர்களில் அடங்குவர். போராட்டத்தின் போது தனிப்பட்ட முறையிலும் வேறு விதமாகவும் பெற்ற கசப்பான அனுபவங்களால் ஏற்பட்ட விரக்தியின் காரணமாக முற்று முழுதாக போராட்டத்தை வெறுக்கின்ற மனோநிலைக்கும், அரசியல் நிலைப்பாட்டிற்கும் வந்து சேர்ந்த இளைஞர்களும் கூட எழுத்துத் துறைக்கு வந்து சேர்ந்தனர். மொத்தத்தில் 90களின் எழுத்துக்கள் அனைத்தும் உணர்வுமயமானவையாக அனுபவச் செறிவும், சூடும் நிறைந்த பல்வேறு விதமான கருத்துக்கள், கேள்விகள் மற்றும் சிந்தனைகளைக் கொண்டவையாக அமைந்திருந்தன.

80கள் வரையில் சுதந்திரமான எழுத்திற்கும் கருத்து வெளிப்பாட்டிற்கும் நிலவிவந்த தடைகளை புலப்பெயர்வு உடைத்தது. இது "மடைதிறந்த வெள்ளமாக" கருத்துக்கள் வெளிவருவதற்கு மேலும் உந்துதலாகவும் வாய்ப்பாகவும் அமைந்தது. இக்காலகட்டத்தில் வெளிவந்த எழுத்துக்களில் குறிப்பாக படைப்பிலக்கியத் துறையினை எடுத்துக் கொண்டால் தீவிரம், உணர்வு, உணர்ச்சி மற்றும் சொல்லிவிட வேண்டுமென்கின்ற வேகம், துடிப்பு

என்பவை அதிகமாகக் காணப்படுவதை அவதானிக்க முடியும். இந்தத் துறையில் ஈடுபட்ட பெரும்பாலானோர் இலக்கியத் துறைக்கு அல்லது எழுத்துத் துறைக்கு ஏற்கெனவே அறிமுகமான, அத்துறையில் நல்ல பயிற்சி பெற்றவர்கள் அல்லர். அவர்களது ஆர்வமும் துடிப்பும் செயற்படக் கிடைத்த ஒரே தளம் அதுவாக இருந்ததன் காரணமாக இலக்கியத்துறையை நோக்கி நகர்ந்தவர்கள். இதனால் இப்படைப்பாளிகளின் ஆரம்பப் படைப்புக்களின் மொழிச் செழுமை, இலக்கியவடிவு பற்றிய பிரக்ஞை, செப்பலிடலின் முக்கியத்துவம் என்பவை மிகவும் அரிதாகவே காணப்பட்டன. ஆயினும் கால முக்கியத்துவமும், இத்தகைய எழுத்துக்களின் அரசியல் முக்கியத்துவமும் காரணமாக அவற்றிற்கு நல்ல வரவேற்பு இருந்தது. கூடவே பொய்மையையும் பட்டும்படாததுமான போக்கையும் அல்லது எதிர்ப்பையும் மட்டுமே எழுத்துக்களில் படித்து சலித்துப் போன தமிழ் வாசகர்களுக்கு மூன்றாவதான ஒரு குரல் உண்மையில் அது எவ்வளவுதான் இலக்கியச் செழுமை குறைந்ததாக இருப்பினும் கூட வரவேற்புக்குரிய ஒன்றாகவே இருந்தது. பெருமளவிலான கவிதைகள், கதைகள், கட்டுரைகள் இக்காலப்பகுதிகளில் வெளிவந்தன. இவற்றில் பல பின்னர் நூல்களாகவும் வெளிவரத் தொடங்கின. ஆனால் காலம் எல்லோருக்கும் நிதானத்தை வழங்கியது. படைப்புக்களில் செம்மைப்படுத்தலின் முக்கியத்துவம் புதிய நூற்றாண்டின் தொடக்கத்துடன் ஓரளவுக்கு உணரப்படத் தொடங்கியது. இப்போதெல்லாம் மிகவும் கவனமாகவும் நிதானமாகவும் செம்மைப்படுத்திய வடிவில் நூல்களை வெளியிடும் போக்கு வளர்ந்து வரத் தொடங்கியுள்ளது. 90களில் வெளிவந்த சஞ்சிகைகள் ஏறக்குறைய எல்லாமே நின்று போக, புதிதாக ஒன்றிரண்டு சஞ்சிகைகள் வெளிவருகின்றன. இரண்டாயிரமாமாண்டின் முதற் பத்தாண்டுகள் போர்க்கால அனுபவத்தின் மிகவும் சிறப்பான படைப்புக்கள் வெளிவரும் காலமாக அமையுமென்று எதிர்பார்ப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

ரவிவர்மன் 90களின் ஆரம்பத்தில் பேனா பிடிக்கத் தொடங்கிய, நாம் மேற்குறிப்பிட்ட அரசியற் போராட்ட அனுபவங்களுடன் எழுத்துத்துறைக்கு வந்த ஒரு இளைஞர். இயல்பாகவே அந்தக் காலத்தில் வந்த அவர் போன்ற இளைஞர்களுக்குரிய கோபம், இலட்சியம், தீவிரம், விரக்தி, சத்தியாவேசம் எல்லாமே வெளிப்படையாகத் தெரிகிற இயல்பு அவரிடமும் இருந்தது. சரிநிகர் பத்திரிகையில் அவர் செய்தியாளராக எழுதத் தொடங்கிய போதும், பிறகு அவர் சொற்ப காலத்திற்கு சரிநிகர் பத்திரிகையின் முழுநேரப் பத்திரிகையாளராகச் செயற்படத் தொடங்கிய போதுமான காலங்களில் அவருடன் நெருங்கிப் பழகுவதற்கான வாய்ப்பு எனக்கு அதிகமாக இருந்தது. சிறுகதை, கவிதை ஆகிய ஆக்க இலக்கிய வடிவங்களில் ஈடுபாடும் ஆர்வமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பிலக்கியங்களை தேடித் தேடி வாசிக்கும் துடிப்பும் நாட்டில் நடந்து வரும் மாற்றங்கள் குறித்து தீவிரமான உணர்வுகளை வெளிப்படுத்தும் இயல்பும் அவரிடம் இருந்தன. சரிநிகரிலும் பல்வேறு பத்திரிகைகள் சிலவற்றிலும் அவரது கவிதைகளும் சிறுகதைகளும் வெளியாகின. இத்தொகுப்பில் உள்ள அவரது கதைகளில் அனேகமானவைகளை நான் ஏற்கெனவே படித்திருந்த போதிலும் தொகுப்புக்கான முன்னுரையை நான் எழுத வேண்டும் என்று அவர் கேட்ட போது மீண்டும் படிக்கக் கிடைத்தன.

சரிநிகரில் அவர் செய்திக் கட்டுரைகள் எழுதி வந்த காலத்தில் அவரது எழுத்து சம்பந்தமாக அவருடன் நான் பேசியிருக்கிறேன். சரிநிகர் இரு வாரங்களுக்கு ஒரு முறை வெளிவரும் பத்திரிகையாக இருந்தமையால் செய்திகளைப் பொறுத்தவரை அவை வெறும் தகவல்களாக அல்லாமல் செய்திக்கட்டுரைகள் அல்லாது பின்னணித் தகவல்கள் நிறைந்த விபர அறிக்கைகளாக அமைய வேண்டும் என்ற கருத்தை நாம் கொண்டிருந்தோம்.

ரவிவர்மனிடம் செய்திகளை பின்னணித் தகவல்களுடன் மட்டுமல்லாமல், அந்த செய்திக்குரிய உணர்வுகளையும் கலந்து எழுதும் ஆற்றல் இருந்தது. ஒரு பத்திரிகையாளரின் கடமை வெறுமனே தகவல்களை வாசகர்களுக்கு அறிவித்து விட்டு ஒதுங்கி விடுவதல்ல. பின்னணித் தகவல்கள், கள நிலைமைகள் அங்கு நிலவும் சமூகச்சூழல்கள் என்பவற்றைப் பற்றிய பின்புலத்துடன் தகவல்கள் வெளிப்படுத்தப்படாத போது அவை அர்த்தமிழந்து விடுகின்றன.

தமிழின் முதல் மாற்றுப் பத்திரிகை என்ற முத்திரையுடன் வெளிவந்த சரிநிகர் நிச்சயமாக இந்த கடப்பாட்டைக் கொண்ட பத்திரிகையாளர்களாக தனது பத்திரிகையாளர்கள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தது. ரவிவர்மனிடம் சித்திரிப்பு திறன், நிகழ்வுகளைக் காட்சிப் படிமங்களாக வாசகர் முன்னிறுத்தும் ஆற்றல், தகவல்களைப் பின்னணி உணர்வுகள் வெளிப்படும் விதத்தில் வெளிப்படுத்தும் ஈடுபாடு என்பவை இயல்பாகவே இருந்தன. சிறுகதையாளருக்குரிய கூர்மையான அவதானிப்பும், இலக்கிய நுண்ணுணர்வும், தகவல் பற்றிய அர்ப்பணிப்புடன் கூடிய தேடலும், மக்கள் நலன் சார்ந்து நிற்கும் நிலைப்பாடும் உள்ள போதே ஒரு பத்திரிகையாளர் வெற்றிகரமாக மக்களின் மனதில் பிடிப்பை ஏற்படுத்தக்கூடிய விதத்திலான செய்தியறிக்கை யாளராக இருக்க முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை சரிநிகருக்கு இருந்தது. ரவிவர்மன் அந்தத்துறையில் செயற்படுவதற்கும் வெற்றி பெறுவதற்குமான ஆற்றலை தன்னகத்தே கொண்டிருந்தார்.

ஒரு நல்ல சிறுகதையாளரால் ஒரு நல்ல செய்தியாளராக இருக்க முடியும் - அவரிடம் சமூகவியல் சார்ந்த சரியான பார்வை இருக்குமானால் - ஒரு நல்ல செய்தியாளரால் சிறுகதையாளராக முடியும். - அவரிடம் கலை நேர்த்தியில் தேர்ச்சி பெறும் ஆர்வமும் கற்பனை வளமும் இருக்குமாயின்.

ரவிவர்மனிடம் அவை இருந்தன. அவர் சிறுகதைகள் எழுதத் தொடங்கினார்.

இத்தொகுப்பில் உள்ள கதைகளில் அவர் கிட்டத்தட்ட ஒரு பத்தாண்டு கால அரசியல் மாற்றங்களோடு ஒட்டி நடைபெற்ற பல நெஞ்சை உறையவைக்கும் நிகழ்வுகளின் வகை மாதிரிகளை பதிய வைத்துள்ளார். அவரது ஆரம்ப கால எழுத்துக்கும் இறுதிக்கால எழுத்துக்குமிடையே சொல்லும் முறையிலும் மொழியை கையாளும் விதத்திலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை இக்கதைகளில் காணலாம்.

துன்பமும் துயரமும் நிறைந்த ஒரு சமூகத்தின் பல்வேறு தளங்களிலான அனுபவங்களை இக்கதைகள் வெளிப்படுத்தி இருக்கின்றன. ஆசிரியரின் கோபமும், கேலியும், ஏக்கமும் எல்லாக் கதைகளிலும் வெளிப்பட்டு நிற்கின்றன. இந்நிகழ்ச்சிகளை நேரடியாக வர்ணிக்கும் நிலையில் இருந்து விடுபட்டு நிகழ்வின் பின்னான காட்சிப்படிமங்கள் ஊடாக நிகழ்வுகளின் துயரத்தை வெளிப்படுத்தும் உத்தியையும் அவர் கையாள்கிறார்.

"பண்டிகைக் காலங்களில் பட்டாசுகள் வெடிக்கவில்லை. வண்ண வண்ண ஆடைகளையும் சிரித்த முகங்களுடன் செல்லும்மனிதர்களையும் காணவில்லை. அம்மாக்கள் வீட்டின் மூலைகளில் முகம் புதைத்து அழுதனர். பிரேம் போட்ட கண்ணாடியில் அண்ணாக்கள் சிரித்தனர்."

- ஒரு சிறகும் நாலைந்து வண்ணத்துப்பூச்சிகளும்.

ரவிவர்மனின் கதைகள் பெருமளவுக்கு காட்சிகளை முன்னிறுத்தி விவரணப்படுத்தலூடு உணர்வுகளை நகர்த்தும் தன்மை கொண்டவையாகவுள்ளன. அந்த முயற்சியினை அவரது எல்லாக் கதைகளிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. இது மிகவும் கவனமாகவும் நிதானமாகவும் செய்யப்பட வேண்டிய ஒரு முயற்சி. இந்த முயற்சியில் அவர் தேறி வருவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நம்புவதற்கான அடையாளங்களையும் அவரது கதைகளில் நாம் காணலாம். மொழியில் சற்று கவனமும், செம்மைப்படுத்துவதற்கான உழைப்பையும் அவரால் இன்னும் சற்று அதிகமாக இக்கதைகள் தொடர்பாக செய்ய முடிந்திருந்தால் இவற்றை மேலும் சிறப்பாக ஆக்கியிருக்க முடியும் என்று தோன்றுகிறது. முதலில் வெளிவந்த மாதிரியே நூலாகவும் வெளியிட வேண்டும் என்பது அவ்வளவு முக்கியமான ஒன்றல்ல என்பது என்னுடைய கருத்து. இவரது சிறுகதைகள் பற்றிய சரியான விமர்சனத்தை விமர்சகர்களுக்கு விட்டுவிட்டு ஒரு சிறு குறிப்புடன் நிறுத்தலாம் என்று நினைக்கிறேன்.

நமது நாடு நல்ல பல படைப்பாளிகளை கண்டுள்ளது. நல்ல பல படைப்புக்களைக் கண்டுள்ளது. நம்மிடையே உள்ள பல இளம் படைப்பாளிகளிடையே தமது படைப்புக்களை மேலும் மேலும் செழுமைப்படுத்தி வெளியிட வேண்டும் என்ற எண்ணம் பொதுவாகவே குறைந்து வருகின்றது இது ஒரு நல்ல அறிகுறி அல்ல.

ரவிவர்மனிடம் சமூக ஈடுபாடும், கதை சொல்லும் ஆற்றலும், நுண்ணிய அவதானிப்பும் நிறையவே உள்ளன. நிதானமான செப்பனிடலில் அவர் ஈடுபடுவாரானால் நல்ல பல சிறுகதைகளை அவர் எமக்கு தர முடியும் என்று நம்புகின்றேன். இறுதியாக இம் முன்னுரையினை எழுத என்னைக் கேட்டுக் கொண்ட நண்பர் ரவிவர்மனுக்கு எனது நன்றிகள். அவரது நூல் வெளியீட்டுக்கு எனது அன்பு நிறைந்த வாழ்த்துக்கள்.

எஸ்.கே.விக்னேஸ்வரன்,
ஆசிரிய பீடம்,
சரிநிகர்.
15.09.2004

எனக்கும் உங்களுக்குமான ஒரு சிறுகுறிப்பு

1983க்குப் பின்னரான சடுதியான காலங்கடத்தலின் அரசியல் மாற்றங்களின் எதிர்கொள் நிகழ்வுகளின் அனுபவங்களே இந்த சிறுகதைத் தொகுதியாகும்.

அதற்கு முந்திய காலங்களில் தேவாரம், திருவாசகம், திருமந்திரம் மற்றும் பள்ளிக் கூட புத்தகங்களை புரட்டிப் புரட்டி மனப்பாடம் செய்த காலங்களிலிருந்து விடுபட்டுப் போன நாட்களின் நினைவுகள், கூடவேயிருந்த நண்பர்களின் இழப்புகள், தொலைதல் பற்றிய மனப்பிரமை எல்லாம் சேர்ந்து அவ்வப்போது எனக்குள்ளிருந்து எழுந்தவையே இத்தொகுப்பிலுள்ள சிறுகதைகளாகும்.

கடந்த இரு தசாப்த காலத்திற்கும் மேலாக தாயக மண்ணிலும் தென்னிலங்கையிலும் எமது சமூகமும், கூடவே நானும் எதிர்கொண்ட, என் முன்னால் பட்டுத் தெறித்த அனைத்து தியாகங்களின் முகங்கள், விரக்தியின் பின்னால் வேறு இடம் தேடி திசையற்றுப் போனவர்கள், இன்னும் சொல்ல முடியாத ஆழமறியா அனுபவங்கள் மட்டுமே இவை. இன்னுமிருக்கின்றன நிறையவே ...

இவற்றை வெளிக்கொண்டு வந்த வேளைகளில் எல்லாம் ஒரு சிறுகதைக்கான இலக்கிய நடையையோ மொழிவளத்தையோ உள்வாங்கிக் கொள்ளவில்லை. மாறாக நான் சார்ந்த சமூகம் பற்றிய புரிதல், தேவை பற்றிய அவசியமும் ஆத்திரமும் விரக்தியும் மட்டுமே முன்நோக்கி நின்றன. ஏனெனில் இன்றைய தேவை பாண்டித்தியத்தில் மட்டும் புகழ் தேடுவதல்ல என்பதையும் தெளிவுபடுத்த வேண்டுமென்பதில் பேரார்வம் கொள்கின்றேன்.

இதைவிட இன்னமும் எமது சமூகத்தில் ஆழப் புதைந்து போயுள்ள அவலங்களையும், துயரங்களையும், அனைத்து தியாகங்களையும் எண்ணும் போதும், சொல்ல முடியாத சங்கதிகளை வெளிப்படுத்த வேண்டுமென்கின்ற போதும், ஈழத்து இலக்கிய சூழலின் சமூக, பொருளாதார, அரசியல் தளங்களின் தோற்றப்பாடுகளை எதிர்கொள்கின்ற ஒருவனாகவே நானும் உள்ளேன்.

இதனை விட எமது தமிழ் படைப்பாக்க சூழலில் ஒரு படைப்பாளிக்கும் பதிப்பகத்துறைக்குமான உறவுநிலை கொண்டாடும்படியாக அமைவதில்லை என்பதற்கு என் அனுபவமும் ஒரு உதாரணமாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறுகதைத் தொகுதி உண்மையில் நீண்ட நாட்களுக்கு முன்வெளிவர வேண்டியது. வழமைபோல் படைப்பாளியிடம் மலிந்து காணப்படும் பொருளாதார பலமின்மையும் ஒரு காரணமாக அமைந்து விட்டது.

பொருளாதார வசதியின்மை காரணமாக எத்தனையோ படைப்பாளிகளின் ஆக்கங்கள் நூலுருவம் பெறும் தகுதி வாய்ந்தும் முடங்கிக் கிடக்கும் அவலநிலையே இன்றும் நிகழ்கின்றது.

புலம்பெயர்ந்த சூழலில் வாழும் இலக்கிய நண்பர்களும் பதிப்பக ஆர்வலர்களும் இப்படைப்புகளுக்கு நூலுருவாக்கம் கொடுக்கத் துணை நிற்பார்களானால் நமது ஈழத்து சூழலில் ஆரோக்கியமான இலக்கியத்தளம் ஒன்றை நிச்சயம் உருவாக்க முடியும். யார் செய்வர்? இது இலக்கியத்துறைக்கு மாத்திரம் ஏற்பட்ட அவல நிலை அல்ல. ஏனைய வரலாற்றுத்துறைகளுக்கும் இதே அவலநிலையே தொடர்கின்றது.

இத்தொகுப்பில் அடங்கியுள்ள சிறுகதைகளை வெளிக்கொணர்ந்த வீரகேசரி, சரிநிகர், தினக்குரல், அ.ஆ.இ (நெதர்லாந்து), யுகம் மாறும்(லண்டன்) என்பவற்றையும் இத் தருணத்தில் மறக்க முடியாது.

அதெல்லாவற்றுக்குமப்பால் இச் சிறுகதைத் தொகுதியை நூலுருவாக்கம் செய்யும் என் எண்ணம் கைவிடும் நிலையில் இருந்த வேளையில் நம்பிக்கையூட்டி சாத்தியப்படுத்திய ரி.தயாநிதி (நோர்வே), அசோக் - யோகன் கண்ணமுத்து (பிரான்ஸ்), அசோக் பிரகாஷ் (பிரான்ஸ்) மற்றும் நண்பர்கள் வீ.ஜெய்சங்கர், ஈழத்து நூன், சரிநிகர் சிவகுமார், முன்னுரைக்குள் என்னை அடக்கிய எஸ்.கே. விக்னேஸ்வரன், முன் அட்டை வடிவம் தந்த சுரேன் உட்பட என்னை நட்புடன் ஊக்கப்படுத்திய எல்லா முகங்களுக்கும் என் அன்பு நன்றிகள்.

பி .ரவிவர்மன்
(பரமக்குட்டி மகேந்திரராஜா)
ஆசிரிய பீடம்,
தினக்குரல்,
68, எலி ஹவுஸ் றோட், கொழும்பு - 15,
இலங்கை.
25.08.2004

மனிதம் தோய்ந்த மௌனங்கள்

இந்த எட்டு வருடங்களும் எவ்வளவு விரைவாக கழிந்து விட்டன. என்னையே என்னால் நம்ப முடியாமலிருக்கிறது. ஒவ்வொரு மனிதனின் வாழ்வோடும் ஒவ்வொரு நாளும் ஒன்றிப்போய் கலைந்து செல்லும் இந்த நாட்கள் எவ்வளவு பெறுமதியானவை. இன்பமாய், துன்பமாய், துயரமாய், வெறும் வெற்றிடங்கள் விழுந்த வாழ்வியலின் நிகழ்வுகளாய், தடம் பதித்து விட்டுச் செல்லும் இந்த நாட்களின் நினைவுகளை எப்படி இழக்க முடியும்? இதயமுள்ள ஒவ்வொரு மனிதனாலும்!

இந்த எட்டு வருடங்களையும் அந்தப் பாலைவனப் பிரதேசத்தில் பாதம்பதித்து பழக்கப்படுத்தி எப்படியோ கழித்து விட்டேன். ஆனால் எதுவுமே மனசில் நிற்பதாயில்லை. ஊரிலிருந்து வந்த ஒரு சில கடிதங்களைப் படித்துவிட்டு மனசால் நொந்து, கோழைத்தனமாய் கண்ணீர் வடித்து, இரண்டொரு தடவை சாப்பிடாமல் பட்டினி கிடந்து, இதைத் தவிர கூலிக்கு வேலை செய்து, சம்பளத்தைக் கூட நீண்ட கியூவில் நெடுநேரம் நின்று, கைகட்டி வாய்பொத்தி வாங்கியதைத் தவிர எதைத்தான் அனுபவிக்க முடிந்தது. மிருகங்களுக்கு ஒப்பான வாழ்க்கை. மனித இயந்திரங்களாய் எந்த வேலையென்றாலும் செய்தே தீரவேண்டும், இல்லையேல் ஊருக்கு திரும்ப வேண்டும். எப்படித் திரும்ப முடியும்?

வீட்டின் எல்லாச்சுமைகளும் என்மேலேயே படிந்திருந்தது. எனக்கு பத்து வயது முடியமுன்னரே இறந்து போன அப்பா, யூனிவசிட்டியில் செக்கண்டியர் படித்துக் கொண்டிருக்கும் போது எல்லோரையும் போலவே திடீரென இல்லாமல் போய் இதுவரையும் கிடைக்காமல் போன அண்ணன், அக்கா, இரண்டு தங்கைகள், மருந்தையும் குளிசையையும் குத்தகைக்கு எடுத்துக் கொண்ட அம்மா, வட்டிக்கு வாங்கி ஏஜென்சியிடம் கொடுத்த பணம். எப்படி என்னால் ஊருக்குத் திரும்ப முடியும்?

இந்தச் சுமைகளையெல்லாம் மனசில் சுமந்து கொண்டு அந்தப் பாலைவனத்தில் அராபிக்காரர்களின் நவீன அடிமைகளாக இந்த எட்டு வருடங்களையும் என்னால் நகர்த்த முடிந்தது. ஊரின் பழைய நினைவுகளெல்லாம் மனசில் ஊஞ்சல்கட்டி ஆடின. அந்த நாட்கள் எவ்வளவு தூய்மையான, சுகமான, பசுமையான நாட்கள்!

ஜன்னலோரக் கண்ணாடிக்கு வெளியே எனது ஊரின் இளமையழகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிசப்தமாய் படிந்து போய்க் கிடந்தது. ஒருகாலம் எவ்வளவு செல்வச் செழிப்பாய்க் கிடந்தது இந்த ஊர். இன்று காய்ந்து கருகிப்போன புல்லின் நுனிகளை கடித்துக் கொள்ளும் மாடுகள், வெறுமை விழுந்த வயல்வெளிகள், வாவிமட்டும் வஞ்சகமில்லாமல் வளைந்து நெளிந்து ஓடிக் கொண்டிருக்கிறது. ஒரு அகதிக்குழந்தையைப் போல் எனக்கு மனசெல்லாம் ஒரே பாரமாக இருந்தது.

'மட்டக்களப்பு நகரம் உங்களை அன்புடன் வரவேற்கின்றது.' எல்லோரையும் போலவே நானும் ரயிலை விட்டிறங்கி வெளியே நின்றிருந்த பஸ் ஒன்றில் தொற்றிக் கொண்டேன். நீண்ட நாளைய இடைவெளிக்கு பிறகு ஊருக்குள் ஒரு தனிச்சுகம். எதிரே கல்லடிப்பாலம் பெரும் சோகத்துடன் அழைத்தது. பாலத்தின் இதமான காற்று என்னில் முட்டி மோதியது. டச்சுக் கோட்டையும் மாதாகோவிலும் கம்பீரமாக என்னைப் பார்த்தன. ரியூசனுக்குப்போய் வரும்வழியில் மாலைநேரத்தில் நின்று கதைபேசிய அதே கல்லடிப்பாலம் தான். இந்தப்பாலத்துக்குள் தான் இன்னமும் எத்தனை எத்தனை கதைகள் புதைந்து போய்க்கிடக்கிறது. மாலைநேரத்தில் மஞ்சள்வெயில் குளிக்கும் நாவலடிக் கடற்கரையும், அதன் அழகிய தென்னந்தோப்புகளும் ஆற்றங்கரையும் பாலத்துக்கு வெளியே துல்லியமாகத் தெரிந்தது.

உடைந்து நொறுங்கிய கட்டிடங்கள், பொலிவிழந்த மரங்கள், கவலை தோய்ந்த தெருக்கள், எல்லாம் வேகமாய் ஓடி மறைந்தன. எனது இருப்பிடம் இன்னும் சற்று தொலைவில். பஸ்ஸை விட்டு மெதுவாக இறங்கினேன்.

இருள் உப்பிப்போன மாலை நேரம் அது. சூரியன் மேற்கே இருப்பிடம் தேடிக்கொண்டிருக்க வேண்டும். ரவலிங் பாக்கை தூக்கி தோளில் போட்டுக் கொண்டு மெல்ல நடந்தேன். தெரிந்தும் தெரியாத முகங்கள். அதே சிவன்கோவில், சனசமூக நிலையம், நாங்கள் கூட்டமாயிருந்து ரீ குடிக்கும் செல்வண்ணையின் ரீக்கடை, போஸ்ரோபிஸ், வீதியைக் கடந்து அந்தக் கிறவுண்ஸ்சால் நடந்தேன். நெருஞ்சிகள் முளைத்தெழும்பி விளையாடுவதற்கு யாருமேயில்லாமல் வேதனையைச் சுமந்தபடி என்னைப் பரிதாபமாகப் பார்த்தது. உனக்கு நினைவிருக்கிறதா கிறவுண்ஸ்சே! இன்றைக்கு எட்டு ஒன்பது வருசங்களுக்கு முன் நானும் என் நண்பர்களும் உன்மேல் ஆடி ஓடி விழுந்தெழும்பி உன்னை உதைத்து எவ்வளவு வேதனையைக் கொடுத்திருப்போம். இத்தனை இடங்களும் இன்றைக்கு எட்டு ஒன்பது வருடங்களுக்கு முன் என்ன பாடுபட்டிருக்கும். எத்தனை எத்தனை முகங்கள் அந்த இடங்களை நிரப்பிக் கொண்டிருக்கும்.

கிறவுண்ஸைத் தாண்டி எதிர்றோட்டில் நடந்தேன். இந்தச் சந்தியில் திரும்பி அந்த வெறும் காணிகளைத் தாண்டிப் போனால் இரண்டு மாமரங்கள் ஒன்றோடு ஒன்று உரசிக்கொண்டிருக்கும் வீடு தான் என்வீடு. எத்தனையோ வருடங்களுக்கு பின் இன்று வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தேன். ஒரு புது உத்வேகம் மனசில் களைகட்டி ஆடியது.

திடீரென என்னைக் கண்டதும் எல்லோருக்கும் அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவுமிருந்தது. திடீரென வருவேன் என யாருமே எதிர்பார்க்கவில்லை. அம்மா, அக்கா, தங்கச்சிகள், பக்கத்து வீட்டாக்கள் என ஒவ்வொருத்தராய் மொய்க்கத் தொடங்கினார்கள். என்னைக் கண்டதும் எல்லோருக்கும் எல்லையில்லாத மகிழ்ச்சி. இருந்தும் உள்ளுணர்வில் ஏதோ ஓர் பயபீதி.

'வர்றதெண்டால் கடிதத்தில் எல்லாம் எழுதியிருக்கலாம் தானே நாங்க கொழும்புக்கு வந்திருப்பம்.'

அக்கா 'ஏன்டா தம்பி இந்த பிரச்சினையான நேரத்தில வந்த நீ? இன்னும் கொஞ்சக்காலம் இருந்திட்டு வந்திருக்கலாம் தானே?'

அக்கா கொடுத்த தேத்தண்ணியை வாங்கி உள்ளுக்குள் இழுத்தேன். எவ்வளவு சுவையாய் ருசியாய்.... அக்காவை நிமிர்ந்து பார்த்தேன். சிரித்தாள். இவ்வளவு அழகாய் இருந்தும் முகத்தில் எத்தனையோ கவலைக்கோடுகள் அவளையும் கண்களில் பளிச்சிட்டது. தலையில் வெள்ளிக் கோடுகள் முளைத்தெழும்பிக் கொண்டிருந்தன. அக்கா, அம்மா, தங்கச்சிகள் எத்தனை மாற்றம். அவர்கள் மட்டுமா? இந்த ஊரும் தான் எத்தனை மாற்றம்.

ஊரைச்சுற்றி சைக்கிளில் ஒரு ரவுண்ட் வரவேணும் போல இருந்தது. அம்மா அருகிலிருந்தாள். அக்கா ஊரைப் பற்றி அடுக்கடுக்காகச் சொன்னாள். முரளி, வரதன், ரவி, நேசன், சின்னவன், தோசைக்கார பொன்னியக்கா, செல்வா அண்ணன் இன்னும் யார் யாரோ. மனசு ஹீரோசிமாவைப்போல வெடித்துச் சிதறிவிடும் போலிருந்தது.

இந்தக் குறிப்பிட்ட காலத்துக்குள் எத்தனை நூற்றுக்கணக்கான மனிதர்களைத்தான் இந்த ஊர் இழந்து விட்டது. என்னுடைய நண்பர்கள் எத்தனை எத்தனை பேரைத்தான் இந்த நாட்கள் விழுங்கி விட்டன.

வரதன், முரளி, ரவி, நேசன் பள்ளிக்கூடக் காலத்துக்கு முன்பே நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள்.

கடற்குளியல் அதன் வெண்மணல்துகள்களில் உருண்டு பிரண்டு, அழகிய குலைகள் தொங்கும் தென்னந் தோப்புகளுக்குள் ஆற்றங்கரைகளில் கோவில் திருவிழாக்கள் எங்கு தான் இந்த ஊருக்குள் நாங்கள் சுற்றாத இடங்கள்.

இன்று எல்லாமேயிழந்து... இந்த ஊரையும் இவர்களையும் என்னால் எப்படி மறக்க முடியும். மனது துயரால் தேம்பி வடிந்தது.

வீட்டுக்குள் நுழைந்தேன். எதிரே சுவரில் பிறேம் போட்ட கண்ணாடிக்குள் அண்ணா சிரித்துக் கொண்டிருந்தான். என் விழியோரங்களில் பனித்துளிகளாய்.. என்னையறியாமலே...? உடுப்பை மாற்றிக் கொண்டு வெளியே வந்தேன்.

"அக்கா எங்கட ஜிம்மி எங்க?"

"அதுவும் அந்தப் பிரச்சினைக்குள்ள முடிஞ்சிற்றுடா" அக்காவின் வார்த்தைகளினூடே பெரியதோர் சோகம் பீறிட்டுக்கொண்டு வெளியே வந்தது.

நான் வெளிய போகக்குள்ள சின்னக்குட்டியாயிருந்தது. ஒரே என்னைச் சுற்றிக் கொண்டே வரும் எல்லாமே எனக்கு நினைவிருக்கிறது.

ஊர் முழுவதுமாய் இருளில் நனைந்து விட்டது. எங்கும் ஒரே மௌனம். நிசப்தம். ஆந்தைகள் மட்டும் அலறின.

தூரத்தே தெரிந்த சிவன்கோவில் ஆலமரம் காற்றில் இலைகளை அசைத்து ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது. அக்கா சாப்பிடக் கூப்பிட்டாள். பாயில் போய் அமர்ந்தேன்.

"தம்பி ஊர்ல நிற்கிற வேலையெல்லாம் சரிப்பட்டு வராது கெதில திரும்பவும் போகப்பாரடா". நான் சாப்பாட்டுக் கோப்பையில் முகம் புதைத்திருந்தேன். நீண்ட நாளைக்கு பிறகும் இந்த புட்டும் தயிரும் இன்னமும் எவ்வளவு ருசியாத்தானிருக்கிறது.

வீரகேசரி

மனசுக்குள் உட்கார்ந்தபடி ....

உண்மையிலேயே அவனைப் பொறுத்தவரை அவன் அவசரப்பட்டுப் போன நாட்கள் என்று கூடச் சொல்லலாம். அந்த நாட்கள் ஒவ்வொன்றும் அவனுடைய மனசின் ஓரங்களில் எத்தனை காத்திரமான கல்வெட்டுக்களாய் புதைந்து போய்க் கிடக்கின்றன. அதையெல்லாம் இப்போது நினைத்து நினைத்துப் பார்த்து, வேதனைப்பட்டு தணலில் விழுந்த புழுவாய் அவஸ்தைப்படுவது ஒரு தொற்று நோய் போல் அவனை ஆட்டிப் படைக்கின்றது. அதையும் மீறி இந்த வாழ்க்கை வறுமைக்கோட்டின் அடிப்பாதாளத்தில் இறக்கி இவனில் எத்தனை ரணங்களைத் தான் உதிர்த்தியிருக்கிறது.

பட்டு உழுத்துப்போன ஒரு தனிமரமாய் அவன். குந்தியிருந்து எச்சம் கழிப்பதற்கு காகம் குருவிகள் கூட இப்போது அவனிடம் வருவதில்லை. இந்தச் சீவியம் இன்னும் எத்தனை காலத்துக்கு? சீ என்று போய் விட்டது வாழ்க்கை. எங்காவது கண்காணாத தேசத்துக்கு ஓடிப்போய் வேற்று மனிதர்களுடன் கொஞ்சக்காலம் வாழ்ந்துவிட்டு வரலாமென்றாலும் அதுக்கும் கொஞ்சம் கூட பிடிப்பில்ல. மனமுமில்ல. எல்லாவற்றையும் யாரிடம் போய்ச் சொல்வது?

குசேலனுக்காவது கண்ணபிரான் என்ற நல்லதோர் தோழன் இருந்தான். ஆபத்தான வேளைகளில் அவலையாவது பரிமாறிக் கொண்டார்கள். இவனுடைய கண்ணபிரான்கள் எல்லாம் இவனையும் இவனைப்போல் இன்னும் ஆயிரக்கணக்கானவர்களையும் நடுத்தெருவில் கொண்டு வந்து விட்டு சமாதி கட்டிவிட்டு தப்பியோடிவிட்டார்களே. யாரைக் குற்றம் சொல்வது இவர்களையா? அவர்களையா?

சிதல் பிடித்துப்போன இவனுடைய வாழ்க்கை இப்போது நல்லாகவே நாறத் தொடங்கி விட்டது. மூக்கைப் பொத்துவதற்கு பதிலாக உறவினர்கள் நண்பர்கள் கண்டால் கண்ணையல்லவா மூடிக்கொண்டு வேறுபக்கம் நடையைக் கட்டுகிறார்கள். இந்த நகரத்து வாழ்க்கை கூட ஒரு நரகமாய் இன்னும் எத்தனை காலங்களை இவனுடன் கட்டியிழுக்கப் போகிறதோ பாவம் இனிவரும் நாட்கள்.

மழை நல்லா கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது. வானம் பீச்சியடிக்கும் நீர்த்துகள்களால் தெருக்கள் நிரம்பி வடிந்து பள்ளங்களை நோக்கி ஓடித்தப்பிக் கொண்டிருந்தது வெள்ளை நீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுக்கும் சேறும் போவோர் வருவோர் ஒவ்வொருவரின் கால்களிலும் ஒட்டிக்கொண்டு கட்டிப் பிடித்துக் கெஞ்சின. அண்ணே அக்காமாரே எங்களையும் உங்கள் கால்களோடு ஒட்டிக்கொண்டு போங்கள். எத்தனை காலமாய்த்தான் இந்தத் தெருக்களில் கிடந்து மிதிபட்டு வதைபடுவது.

அவன் அந்தச் சைவக்கடையின் முன்பக்கம் சுவரோடு ஒட்டிப்போய் கைகளை மார்போடு இறுக்கியபடி விரல்களை ஒன்றோடு ஒன்று உரசியபடி நெட்டிமுறித்து ஏதோ செய்து கொண்டிருந்தான். அவனைச் சுற்றிலும் அவனைப்போல் மழைக்கு ஒதுங்கிய இன்னும் நிறையப் பேர். அனேகம் பேர் பீடியும் ஒரு சிலர் சிகரெட்டும் இழுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் வாயும் மூக்கும் பிரிட்டிஷ்காரர் இலங்கையில் அறிமுகப்படுத்திய கரிக்கோச்சை நினைவூட்டின. மழை விடுவதற்கான அறிகுறிகள் இல்லவே இல்லை. ஓவென்று அழுது வடித்துக் கொண்டிருந்தது வானம்.

தெருக்களையெல்லாம் நிரப்பிக்கொண்டு வெள்ளம் பழைய காகிதத் துண்டுகளையும், பீடி சிகரட் குறைகளையும், சோடி பிரிந்து தனித்துப் போன ஒற்றைச் செருப்புக்களையும், அழுக்கையும், சேற்றையும் காவிக்கொண்டு இன்னும் ஏதேதோ துண்டு துணிகளையும் இழுத்துக் கொண்டு கடற் கொள்ளைக்காரனைப் போல் தப்பியோடிக் கொண்டிருந்தது.

இடையிடையே வந்து போகும் ஓட்டோ, கார், லொறி, பஸ் இயந்திர மிருகங்களுக்கு ஈடுகொடுத்து முண்டுபிடிக்கத் தெரியாமல் வெள்ளநீர் நுரை கக்கியபடி அருகிலுள்ள சுவரோரங்களில் முட்டி மோதி அடிபட்டெழுவது பார்க்கப் பாவமாய்த் தானிருக்கிறது. இவன் நின்ற சைவக்கடையின் படிகளிலும் ஏறி எல்லோர் கால்களிலும் விழுந்தடித்துவிட்டு வழிந்தோடியது.

வானம் ஒரே கருமையாயிருந்தது. இடையிடையே மின்னல் வெட்டி வெட்டி மறைந்து குறளிவித்தைக்காரனைப் போல் வேடிக்கை காட்டியது. இடி கொஞ்சம் கூட இல்லை. எங்கே போயிருக்கும்? இலத்திரன்களும் நியூத்திரன்களும் ஏதும் சமாதான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருக்குமோ? என்னவாய் இருந்தால் தான் என்ன? இரவுக்கு சைவக்கடை இடியப்பத்துக்காவது எவராவது இரங்கினால் கூட இவனுக்கு போதுமென்றாகி விடும். காலையில் சாப்பிட்ட பாண்துண்டும் பிளேன்ரீயும் அதற்குப் பிறகு யார்யாரோ ரெண்டோ மூன்று தடவை வாங்கிக் கொடுத்த பிளேன்ரீயும்... அதைவிட இன்று வயிற்றுக்குள் வேறு ஏதும் போனதாக இல்லை. அடிவயிற்றிலிருந்து உன்னியெழும் பசியின் ஆவேசம், கண்களில் சின்னச் சின்னச் மின்னல்கள் தோன்றி மறைவதான ஒரு மயக்கம். வயிற்றுக்குள் தேட்டிசிக்ஸ் கிரனைட் வெடித்த மாதிரியான ஒரு கலவரம். ரெண்டு மாசச் சுமையை வயிற்றில் சுமக்கிற குமர்ப்பெண் போல் குமட்டிக் கொண்டிருந்தது. தொண்டைக்குழியில் ஒட்டிக்கொண்டிருந்த சளியை காறியெடுத்தான். வாய் நிறைந்திருந்தது. வெளியே எட்டித்துப்பவும் முடியவில்லை. திரும்பவும் அது உள்ளுக்குள் போய்விட்டது. வயிற்றின் அடிவரை போயிருக்கலாம். இதென்ன? இதைவிட அசிங்கத்தனமான வாழ்க்கையில் தானே இவனுடைய காலங்கள் அடிபட்டு இன்று இப்படியாகிப் போய் நிற்கிறான்.

எதையாவது திட்டித் தீர்க்க வேணும் போலிருக்கிறது. இல்லையேல் எதிலாவது முட்டிமோதி உடைந்து நொறுங்கிப் போக முடியாதா? அப்படி இல்லாவிட்டால் மண்ணைத்தின்று காற்றைக் காதலியாக்கி வாழ்வதற்கெனினும் இந்தச் சரீரமும் உலகமும் ஒத்துக் கொள்ளுமெனில் கொஞ்ச நாட்களாவது பிழைத்துக் கொள்ளலாம். இல்லையெனில் இமயத்தைப் போன்ற ஒரு பெரிய கேள்விக்குறி இவன் வாழ்வின் முன்னால்.

கொழும்புக்கு புதிதாய் யாராவது வந்திருந்தால் அவர்களின் காலடி இந்தச் சந்தியில் படாமலிருக்க முடியாது. பேர்தான் ஏதோ ஐந்துலாம்புச்சந்தி. ஆனால் இது சந்திப்பதோ எட்டு ஒன்பது சந்திகளை. இவனும் இப்போது தான் எண்ணிப் பார்த்தான். ஒன்பது லாம்புச்சந்தி என்று உச்சரிப்பது அவ்வளவு அழகல்ல என்பதற்காக ஐந்துலாம்புச்சந்தி என்று வைத்தார்களோ என்னவோ தெரியாது. ஏன் நமக்கு அடுத்த ஊர்ப்பிரச்சினையெல்லாம்.

கொழும்பின் மையமே இந்த ஐந்துலாம்புச்சந்திதான். உங்கள் நண்பர்கள், உறவினர்கள், தெரிந்தவர்கள் யாரையாவது சந்திக்கவேணுமெனில் இந்தச் சந்தியின் ஏதாவதொரு கரையின் ஓரத்தில் வந்து நில்லுங்கள். நாலாபக்கமும் விழிகளை வீசிப் பாருங்கள். எப்படியாவது பிடித்து விடலாம்.

கிட்டதட்ட கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்த மாதிரி. அதற்கிடையில் உங்களை பொலிஸ்காரன் தமிழரென மணம்பிடித்து கண்டுபிடித்தால் அப்பரை கல்லுடன் சேர்த்து கயிற்றால் கட்டி கடலில் போட்ட மாதிரித் தான். நீங்கள் என்ன தேவாரம் பாடினாலும் மீள்வது கடினம்.

செட்டியார்தெரு, மாலுக்கடை, செக்கட்டித்தெரு, டாம்ஸ்ரீட், மெயின்ஸ்ரீட், ஆட்டுப்பட்டித்தெரு, சென்றல்றோட் என்று எல்லாம் இந்தச் சந்தியிலிருந்து தான் முளைக்கின்றன. இவனும் கொழும்புக்கு வந்த காலத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுவரை இந்தச் சந்திக்கு வராத நாட்களே இல்லையெனலாம். இவனுக்கும் இந்தச் சந்திக்கும் அத்தனை நட்பென்று கூடச் சொல்லலாம்.

ஈரம் ஊறி கால்கள் இரண்டும் விறைத்துப் போனமாதிரி இருக்கிறது. வானம் புருஷனை இழந்த பெண்ணாய் ஓவென்று முன்னைவிட இன்னும் அதிகமாய் ஆவேசமாய் அழுது வடித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு பொக்கற்றாய் கையை விட்டுப் பார்த்தான். ம்.....அந்தரெண்டு ரூபாய்க் குற்றியைத் தவிர ஒரு சதம் கூட இல்லை. ஏழெட்டு நாளைக்கு முன் இந்தியாவில் இருந்து வந்த நண்பன் ஒருவனின் கடிதம் மட்டும் கனமாய் இருந்தது. கடிதமூலையில் காந்திக்கிழவன் தலையைத் தொங்கப் போட்டபடி இருந்தான். பதில் எழுதியும் அனுப்பாமல் கிடக்கும் இவனது கடித ஒற்றையுமாகச் சேர்ந்து இன்னும் கனமாய் இருந்தது.

இந்தக் கடிதம் போல் இவனுடைய அந்த நண்பனின் வாழ்க்கையும் சிறைப்பட்டுப் போய்த்தான் கிடக்கிறது. அவனுடைய கடிதத்தின் ஒவ்வொரு வரிகளும் விரக்தியையும் வேதனையையும் உள்வாங்கி கரையில் கிடந்து துடிக்கும் மீன்குஞ்சுகளாய் மூச்சிரைக்கும். அப்பப்ப வரும் அவனுடைய கடிதங்களைப் படிக்கும் போதெல்லாம் தனிமை மறந்து விடும் பழைய நினைவுகளெல்லாம் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் வரிசையாய் வந்து இவன் முன் அமர்ந்துவிடும். சோகம் ததும்பிய மெல்லியகாற்று வீசும். பனிபெய்யும்.

அந்த மண்டபம் அகதிமுகாமின் சின்னச் சிறைக்கூடத்துக்குள் அவன் இந்த நேரம் என்ன செய்து கொண்டிருப்பானோ? அல்லது இருள்கலந்த இரவின் வானத்தையும் உடுக்களையும் வெறுப்பாய் ரசித்துக் கொண்டிருப்பானோ? காற்று அள்ளியிறைக்கும் மண்டபம் கடலின் பேரிரைச்சலை காதில் உள்வாங்கி கடலுக்குள் அள்ளியிறைக்கும் காற்றுக்கும் சாபமிட்டுக் கொண்டிருப்பானோ? அல்லது இவனைப் போல் வெறும் வயிற்றுடன் கழியும் இந்த ராப்பொழுதை தூஷித்துக் கொண்டிருப்பானோ? அவனின் கடிதத்தை திரும்பவும் பிரித்துப் பார்த்தான்.

நண்பா, வாழ்க்கை நம்மில் எவ்வளவு கோரமாய் முரண்டு பிடிக்கிறது. இங்கிருக்கும் ஒவ்வொரு கணங்களும் நான் தீயாய்க் கரைந்து கொண்டிருக்கிறேன். வெளியில் எங்கேனும் செல்லவும் முடியாது. உள்ளேயும் இருக்க முடிவதில்லை. வாழ்க்கை எனக்கு கடுகளவேனும் பிடிக்கவில்லை. ஏன் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறேனோ தெரியவில்லை. இதைவிட எனக்கு சாவதே மகத்தானதாய் தோன்றுகிறது. முடிவில்லாமல் ஒவ்வொரு கணங்களும் செத்துக் கொண்டு தான் இருக்கிறேன். உனக்கு நினைவிருக்கிறதா? வைலஸ். மதி. தாசன். நஸ்வர். குலம். நமக்காக மரணித்து நேற்றுடன் ஆறு வருடங்கள். எல்லோரும் மறந்து போயிருக்கலாம். இந்த உலகமே மறக்கட்டும். என்னால் அவர்களை மறக்கவே முடியாது. நேற்று முழுவதும் ஏன் இன்றும் கூட அவர்களுக்காக ஏங்கி இரக்கப்பட்டுக் கொண்டிருந்தேன். பாவப்பட்டது அவர்களும், அவர்களது குடும்பங்களும் தான்.

அவர்களுக்காக இரக்கப்பட்டு இந்த தேசத்துக்காக உதிர்ந்து போனவர்கள் என்று ஞாபகப்படுத்துவதைவிட எம்மால்கூட எதைத்தான் சொல்லவோ செய்யவோ முடியும்? நாங்கள் எல்லோரும் முந்தி ஒரு நாள் தஞ்சாவூரில் வைத்துப் படித்த அந்த உஞ்சவிருத்தி சிறுகதை ஞாபகம் வரும் இந்தநேரம். வைலஸ் உரத்துப் படிக்க நாங்களெல்லோரும் சுற்றியிருந்து கேட்டு மனம் நொந்து போன நாட்கள் அவை. நான் நேற்று இரவும் ஒரு கனவு கண்டேன். வைலஸ் எனக்கருகில் வந்திருந்து புதிதாய் ஒரு கதை சொல்கிறான். அதை இப்பவே சொன்னால் நீ இன்னும் நொந்து போய் விடுவாய். காலம் வரும் போது சொல்கிறேன். மேலே படிக்க முடியாமல் கடிதத்தை மடித்து உள்ளுக்குள் போட்டான். கண்கள் இரண்டும் கம்மாக் கரைச் சேற்றுத் தண்ணீர் மாதிரி கலங்கிப் போயிருந்தது. மழை விடுவதாகத் தெரியவில்லை மழை விடுமட்டும் இந்தச் சந்தி தான் அவனுக்கு கதி...

அ.ஆ.இ. (நெதர்லாந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றுப் போத்தல்கள்

அவனுக்கு உலகத்தைச் சுற்றிக் கொண்டு வாற மாதிரி ஒரு மயக்கம். பகல் முழுவதும் பிளேன்ரீயை உள்வாங்கி சாப்பிடாத களைப்பும், கொஞ்ச நாளாய் தான் மாறிக் கொண்டு வாற இந்தச் சூழலும் வித்தியாசமான போக்கும் அவனுக்கே ஒரு மாதிரியாகத்தானிருக்கிறது. எவர் எதைச் சொன்னாலும் இந்த மாதிரியான வாழ்க்கைக்கு அவனைத் துரத்திய நிகழ்வுகள், அந்த மனிதர்கள், அவர்கள் எங்கெங்கு எப்படியெப்படி வாழ்கிறார்களோ அதைப்பற்றியெல்லாம் அவன் இப்போது பெரிதாக ஒன்றும் அலட்டிக் கொள்வதில்லை. ஆனாலும் அவனுக்கு வாழக்கிடைக்காத ஊர் அருகிலில்லாத அம்மா அவனில் லாமலேயே மண்ணுக்குள் மீண்ட அண்ணன், அருகிப்போகும் உறவுகள், உறவினர்கள். பசியையும், பட்டினியையும், துயரத்தையும், வெறுமையையும், கொடுமையையும், தனிமையையும் வாங்கிக் கொடுத்த சுடுகாட்டுக்கு ஒப்பான ஒரு வாழ்க்கை. இந்த ஐந்தாறு வருடங்களும் பிடிப்பில்லாவிட்டாலும் எப்படியோ வாழப்பழக்கப்படுத்திக் கொண்டு விட்டான்.

இவனும் அவனும் ஒருவருக்கொருவர் எதிரெதிராக அமர்ந்திருந்தார்கள். மங்கலான வெளிச்சம் நிழலென ஊர்ந்து கொண்டிருக்கும். வெயிட்டர்கள் கிடைக்கப் போகும் ரிப்ஸ் காசுகளுக்காக அங்குமிங்கும் இயந்திரமாய் இயங்கிக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு முன்னாலும் ஒருத்தன் வந்தான்.

"மாத்தயா" பணிவுடன் கேட்டான். அவன் இவனைப் பார்த்தான்.

"எனக்கெதன்றாலும் ஒன்று தான் மச்சான்" தெரிந்த சிங்களத்திற்கு தமிழ் கலந்து ஏதோ சொன்னான்.

சிகரெட் பக்கெட்டை எடுத்து நீட்டினான். உருவியொன்றையெடுத்து தீமூட்டிக் கொண்டான். இடைக்கிடையே செருமினான். நெஞ்சைக் கொஞ்சம் தடவினான். புதுப்பழக்கமென்றால் அப்படித்தான் இருக்கும் போல. அந்த மங்கல் வெளிச்சத்தில் இவனின் வாயில் இருந்து வெள்ளை வெள்ளையாய் வெளிக்கிளம்பிய சிகரெட்டின் புகை மங்கலாய் வானில் ஓடி ஒளியும் மேகங்களைப் போல் கூட்டமாய் வெளிக்கிளம்பி கலைந்து புகைந்து நெடிபரவிக் கொண்டிருந்தது.

இந்தப் பழக்கமெல்லாம் இந்தக் கொஞ்ச நாட்களாய்த்தான் அவனைத் தொற்றிக் கொண்டன. முன்பென்றால் அவன் நிறையப் பேருக்கு அட்வைஸ் பண்ணியிருப்பான். சிகரெட் குடிக்கிறதால, தண்ணியடிக்கிறதால உடம்பையும் கெடுத்து கஷ்டப்பட்டு கிடக்கிற காசையும் நாசமாக்கி கரச்சுப் புகைச்சு இருக்கிற நல்ல அபிப்பிராயங்களையும், ஏன் கெடுத்துக் கொள்ள வேணும் என்றெல்லாம்.

ஆனால், வாழ்க்கை அவனுக்கு விரக்தியின் நுனியில் ஊசலாடிக் கொண்டிருக்கும் போதெல்லாம் தனிமையும் வெறுமையும் கொடூரங்களாய் அவனைத்தின்று கொண்டிருக்கும் போதெல்லாம், அவன் படித்த தத்துவங்களாலோ ஒன்றாயிருந்த நண்பர்களாலோ எந்த ஆறுதலும் கிடைக்காத போதெல்லாம், ஒரு சிகரெட்டை எடுத்து தீவைத்து புகையை ஊதித்தள்ளும் போது கிளாசில விட்டு கொஞ்சம் கொஞ்சமாய் உள்ளே இறக்கும் போது கவலைகளும் துயரங்களும் எங்கோ தொலைவில் காணாமல் போய்விடுகின்றன. நட்பைப் பற்றியெல்லாம் அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. புதுப்புது நண்பர்களும் சிந்தனைகளும் தத்துவங்களும் ஓடிவந்து தோள் கொடுத்து ஆறுதல் படுத்துகிற மாதிரியான சூழல். அவனுக்கு எதிரே அந்த சைனிஸ்காரி கொஞ்சம் தள்ளி ஒரு தமிழ்ப்பட நாயகி இப்பதான் பாத்றூமில் இருந்து வாற மாதிரி ஈரத்துண்டுடன் உதட்டை செருகியபடி கண்களால் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். சத்தியமா எனக்கு எதுவும் விளங்கயில்ல. இன்னும் ஒன்று அல்லது இரண்டு அடிகள் எடுத்து வைப்பாளானால் சுற்றியிருக்கிற ஈரத்துண்டும் கீழே கழண்டு விழுந்துவிடும் போலிருக்கிறது. சீ இதையெல்லாம் பார்க்கக் கூடாது. அசிங்கம் வந்த வேலையைப் பார்த்துக் கொண்டு வெளியில போயிடணும். எது அசிங்கம் உள் மனசு திருப்பிக் கேட்டது. அவன் இவனைப் பார்த்தான். கொஞ்சம் சிரிப்புடன் அதில் ஓர் அரவணைப்பும் தெரிந்தது. இவனுக்கு வெட்கமாயிருந்தது. தலையைக் கொஞ்ச நேரம் கீழே சரித்துக் கொண்டான். திரும்பவும் கொஞ்சம் விட்டுக் கொண்டார்கள். உள்ளே இறக்கினார்கள். அவனுக்கு மயக்கம் கலந்த ஒருவித புதுஉணர்வு மூளைக்குள் நாலைந்து பேர் ஏறி உட்கார்ந்து காட்ஸ் விளையாடுகிறார்கள். இன்னும் சிலர் கரம் அடிக்கிறார்கள். இவனுக்கு நம்ப முடியாமலிருக்கிறது. விடியும் வரை எதையாவது செய்து கொண்டு துலஞ்சி போகட்டும் திட்டினான்.

ஸ்ரவுட் போத்தலை எடுத்து மூடியைக் கழட்டினான். கிளாஸ்சுக்குள் விட்டான். வெண்நுரை கக்கியது. கீழே பொன்நிறமான கொஞ்சம் கருமை படிந்த திரவம். அவனுக்கு இந்த வெண்நுரையைப் பார்க்கும் போது பாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமந்து வண்டியிழுத்து வாயாலையும் மூக்காலையும் வெண்நுரை கக்கிற மாட்டையும் குதிரையையும் விட தன்னுடைய ஞாபகங்கள் தான் முதலில் வரும்.

அவனால் மெயின் ஸ்ரீட் ஐந்துலாம்புச் சந்தி, செக்கட்டித்தெரு என ஒவ்வொரு தெருத்தெருவாய் பகல் முழுவதும் வயிற்றின் உக்கிரமான பசியின் கொடுமையோடு ஒவ்வொருவரின் மூக்கையும் முகத்தையும் பார்த்துக் கொண்டு சொறிபிடிக்காத ஒரு தெரு நாயைப் போல் நடக்கும் போது, வாய்குள்ளே இருந்து அடிக்கொருதரம் வெளியே துப்பிக் கொள்ளும் அந்த காஞ்ச வெண்நுரையும் இப்படித்தானிருக்கும். அதையும் விட முந்திய நாட்களில் வெயிலிலும், மழையிலும், பனியிலும், குளிரிலும் மூச்சிறைக்க ஓடியும் நடந்தும் குந்தியும் எழும்பியும் விழுந்தும் வெண்நுரைகக்கிய ஞாபகங்கள் முன்தோன்றி நிமிரும்.

"மச்சான் என்னடா யோசிக்கிற எல்லாமே முடிஞ்சதுக்குப் பிறகு கவலைப்பட இனி என்னதான் இருக்கிறது எடு எடு" கிளாசில் வாய் வைத்து உறிஞ்சியபடி அவன் சொன்னான். உள்ளே இறங்கிய சரக்கு இனித்தான் வேல செய்யத் தொடங்கும். இவன் மௌனமாயிருந்தான். முன்னர் சைக்கிள் மிதித்து கிராமத்து ஒழுங்கைகளில் ஓடிமறைந்த அந்தக்காலம் எப்படியெப்படியோ இருந்தது. இவனுக்கும் அவனுக்கும் கூட முன்னர் நிறைய முரண்பாடுகள் தோன்றி மறைந்தன. காலப்போக்கில் இவனையும் அவனையும் போல் தனிமனிதர்களைத் தவிர எல்லாமே ஓடிமறைந்தன.

கொழும்புக்கு வந்த அந்தக் காலம் முரண்பாடுகளுக்கு அப்பால் இவனையும் அவனையும், இன்னும் நிறையப் பேரையும் நெருங்கிய நண்பர்களாக்கிவிட்ட காலச்சூழல். படுப்பதற்கு இடம் தேடி எல்லோரும் போல் இவனும் அலைந்து கொண்டிருந்த போது அவனின் அறிமுகத்தால் ஆட்டுப்பட்டிதெருவிலுள்ள அந்தலொறிப் பார்க்கும் காளிகோவிலும் தஞ்சம் கொடுத்த போது இவனும் அவனும் இவனையும் அவனையும் போல் இன்னும் நிறையப்பேருமாய் கூடு பிய்த்தெறியப்பட்ட குருவிக்குஞ்சுகளாய் இரவுகளில் வந்து தூங்குவதும் காலையில் லொறியோடு லொறியாய் வெளியேறுவதும் எல்லாமாய் பியர்ப்போத்தலுக்குள்ளிருந்து ஒவ்வொன்றாய் எழுந்தன. ஒவ்வொரு முகங்களாய் எட்டிப் பார்த்தன. ஒன்று பிரான்சிலும், இன்னொன்று லண்டனிலும் மற்றது சுவிசிலுமிருந்து கொண்டு கை அசைக்கின்றன. இது நிஜமா? பிரமையா? வாழ்வின் போலிகளா? அல்லது அவர்களின் தொலைநோக்கு அஃது தானோ? இவனால் எதையுமே புரிந்து கொள்ள முடியாமலிருக்கிறது. இந்த சமூக சீரழிவுகளை ஜீரணிப்பதென்பது கூட இலகுவில் முடியாத ஒன்று.

அந்தக் கடற்பரப்பில் வேகமாய் ஒரு வோட். இவனும் நிறைய நண்பர்களும் உள்ளே குந்திக் கொண்டிருக்கிறார்கள். வெறும் ஜல வெளி நீர்ப்படுக்கை. நாலைந்து குதிரைகள் ஒரே மூச்சில் ஒரே வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. அச்சம் பயம் எதுவுமேயற்ற ஒரு இனிமையான சுகம். மேலே வானம். மேகங்கள் அந்த இரவிலும் கூட்டம் கூட்டமாய் இவர்களைப் போல் திசைதெரியாமல் ஓடிக் கொண்டிருக்கின்றன. நிலா அழகில் லயித்தபடி சூரியனிடம் கடன் வாங்கிய ஒளியை அந்த ஜலப்பாதையெங்கும் ஊற்றிக் கொண்டிருக்கிறது. மனசுக்குள் ஆயிரமாயிரம் சந்தோசங்கள் முளைக்கத் தொடங்கிய காலம். அந்த ஒரே இரவும் நிலாவும் மேகங்களும் நீர்ப்படுக்கையும் அந்த முகங்களும் அவனில் பீறிட்டுக் கொண்டு வழிகின்றன.

அதுக்கப்பால் அந்த நிலா இரவில் இவனும் அந்த நண்பர்களும் தோளில் மூட்டை முடிச்சுக்களுடன் நடக்கிறார்கள். ஒரு மணல் வெளி. அதைக் கடந்து ஓர் ஊர்மனை. நாய்கள் குரைக்கின்றன. வைக்கோல் மேய்ந்த குடிசைகள் ஓடிமறைகின்றன. பகலில் மாடாய் உழைத்த களைப்பில் அந்த மனிதர்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். கொடிக்கம்பங்களில் கட்சிக் கொடிகள் தூங்கி வழிகின்றன. நடக்கிறார்கள் இன்னும் நடக்கிறார்கள். மரங்களின் மேலே தூங்கிக் கொண்டிருந்த பறவைகள் அவலக்குரல் எழுப்பி மேலே எழும்பி எம்பிப் பறக்கின்றன. தெருவோரம் வைக்கோல் சப்பும் மாடுகள் வாலால் ஒரு தடவை முதுகை தடவிக் கொள்கின்றன.

ஊர்மனை தாண்டி குறுக்கேபாயும் அந்த சின்ன ஆற்றைக் கடந்து இடுப்பளவு தண்ணியில் நனைந்து சில்லென்ற குளிர் ஆற்றங்கரையோரத்து புல்லின் இடுக்குகளுக்குள் ஓடி ஒளியும் மின்மினிப்பூச்சிகள், முக்கி முக்கி கத்தும் தவளைகள், தொலைவில் ஒரு மலையும் அருகே புல்லும் புதரும் மரங்களும் மண்டிப் போயிருந்த ஒரு காடு அதுதான் முதன் முதலாய் வரவேற்கிறது. இன்னும் கொஞ்சம் ஊத்தி உள்ளுக்குள் தள்ளினான். அந்த முகங்கள் ஒவ்வொன்றையும் தேடித்தேடி நினைத்துப் பார்க்கிறான். கன்னங்களின் ஓரங்களில் கொஞ்சம் கொஞ்சமாய் ஈரம் கசிகிறது. உள்மனசு தேம்பித்தேம்பி அழுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் உலகமே தெரியாத அளவு ஊற்றிக் கொண்டிருக்கிறான். இவன் உள்ளுக்குள் ஊற்றியிருந்தாலும் தன்னுடைய குரும்பட்டி வயசில் முளைத்தெழும்பி, இடையில் கருகிப்போன கசப்பான வாழ்க்கையிலும் மறக்க முடியாத முகங்களும் அந்த வாழ்வின் ஒவ்வொரு ஜீவன்களும் அசிட்டாய் இவனில் இறங்கி அரித்துக் கொண்டிருக்கிறது. வயதும் வாழ்க்கையும் காட்டு வெள்ளம் போல் எத்தனை வேகமாய் மேவிப்பாய்ந்து கரைந்து கொண்டிருக்கிறது. அதில் அடிபட்டுப்போன முகங்களும் அள்ளுண்டு போன நினைவுகளும் எத்தனை எத்தனை? இவனிடமாவது செத்துப்போய்க் கொண்டிருக்கும் ஒரு வாழ்க்கையும் இவனைப்போல் வாழ்வு தெறித்த நாலைந்து நண்பர்களுமாவது இருக்கிறார்கள். குருதி தெறித்து மௌனத்தில் மாண்டுபோன எத்தனை முகங்கள் அவர்களின் புதைகுழிகள் கூட தெரிந்தும் தெரியாத தொலைதூர மறைவிடங்களில். இவனுக்கு தலையிலடித்துக் கொண்டு ஓவென்று வீரிட்டலற வேண்டும் போலிருக்கிறது.

இவனால் எதையுமே தாங்கிக் கொள்ள முடியாதளவு இதயம் வெடித்து பிரிஞ்சு போய்க் கிடக்கிறது. இவனும் அவனும் அந்த மேசையை விட்டு வெளியே வந்தார்கள். ஒரு வெற்றுப் போத்தலும் நாலைந்து பில்டர்களும் அந்த மேசையில் கிடந்து இவனையும் அவனையும் பரிதாபமாகப் பார்த்தன.

"மச்சான் உலகம் உருண்ட என்று எவன்டா சொன்னவன்? எனக்கு இதில் கொஞ்சம் கூட நம்பிக்கையில்ல. எல்லாம் மேடுபள்ளங்களாகவே இருக்கிறது. இன்னும் கொஞ்ச நாள் உயிரோட இருந்தால் எங்காவது பள்ளத்தில் விழுந்து மேடுகளில் தலைதெறித்து செத்துப் போவது நிச்சயம் மச்சான்....". "டேய் நம்மட திருமந்திரம் சொல்லிக் கொடுத்த திருமூலர் கூட சொல்லியிருக்கிறார் மச்சான் உலகம் உருண்ட என்று நீ போய்" "திருமூலர் யார்ரா அது? திருமூலர் ஏதாவது இயக்கத்தில் இருந்தவரோ" எதையெதையோ உளறிக் கொண்டு வெளியே வந்தார்கள். இவர்களைப் போலவே வானமும் நல்லா நொந்து போய் இருண்டு கிடந்தது. அந்த வெறியேறிய போதையிலும் இவனும் அவனும் அடையாள அட்டையை ஒரு தரம் எடுத்து சரி பார்த்துக் கொண்டு அந்த வீதியில் இறங்கி தள்ளாடியபடி நடந்து கொண்டிருக்கிறார்கள். இருளில் மௌனம் உறங்கிக் கொண்டிருந்தது.

வீரகேசரி

இருள் பரவுகிற வேளை...

சண்டை தொடங்கி இரண்டு மூன்று மாதங்களின் பின்னர் முளைக்கத் தொடங்கிய அகதி முகாமொன்றுக்குள் என்னையும் நான் எப்படியோ நுழைத்துக் கொண்டேன். உடுத்து உண்பதிலிருந்து இழப்பது வரையும் என்னிடம் எதுவுமே இருக்கவில்லை, என்னைத்தவிர. யுத்தத்தின் கோர முகங்களுக்கு முகம் கொடுக்க முடியாத, இலட்சக் கணக்கில் வாரியிறைத்து ஐரோப்பிய நகரங்களுக்குத் தப்பியோட முடியாத, பண வலிமையற்ற அப்பாவி மனிதர்களை உள்வாங்கிக் கொண்டது அந்த அகதி முகாம்.

மார்கழி வெள்ளத்தில் கரைகளில் கிடந்து அடிபட்டோடும் குச்சிகளையும், சருகுகளையும் போல் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு துயரங்கசியும் அனுபவங்கள். சொந்த மண்ணையும் பிரியமானவர்களையும் விட்டுப் பிரிந்து வேற்றிடமொன்றில் நுழைந்த அவஸ்தை, அந்நியப் பார்வைகள். போரும் வாழ்க்கையும் எவ்வளவு முரட்டுத்தனமானது என்பதை இங்குள்ள ஒவ்வொரு மனிதரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

எல்லாம் நேற்றோ இன்றோ போல், இந்த நாட்கள் எத்தனை விரைவாக கரைந்து விட்டன. மூன்று வருடங்களை இன்னுஞ் சில நாட்கள் முழுமையாக விழுங்கிவிடும். சொந்த பந்தங்கள், உரிமையுள்ள உறவுகள், என் பிரியமான ஊர் இதெல்லாவற்றையும் விட இங்குள்ள எல்லோர் முன்னுமுள்ள பாரிய பிரச்சினை, மற்றைய அகதி முகாம்களைப் போல் இந்த அகதி முகாமையும் வன்முறையைப் பிரயோகித்து மூடிவைத்து விட்டால்? எந்நேரமும் மூடப்படலாம். அதை நினைக்கும் போது எங்கள் ஊரில் புதைந்து போய்க் கிடக்கும் பொறி வெடிகளை விட பயங்கரமான அச்சுறுத்தலாயிருக்கிறது.

ஊருக்குப் போவதா? அங்கும் ஏதாவதொரு அகதி முகாமுக்குள் எத்தனை காலம் அடைபட்டு வாழ்வது. இல்லையேல் ஏதாவதொரு ஆமிக்காம்புக்குள், அதுவும் இல்லாவிட்டால் எவனெவன்ட துவக்குக்குப் பதில் சொல்ல வேணுமோ? இப்படியே எத்தனை காலம் இருப்பிடமில்லாத வாழ்வாய் வினாக்களும் விடைதெரியாத வாழ்க்கையுமாய் வாழ்வதென்பது... செத்துத் தொலையும் வரை விரலில் அப்பிய மலம் மாதிரி நாறிக் கொண்டேயிருக்குமோ?

விடிந்து வெகுநேரமாகி விட்டது. முகட்டை நிமிர்ந்து பார்த்தபடி இன்னமும் என்னுடைய படுக்கையில் புரள்வதும் நிமிர்வதுமாய் நான், காத்தான்குடி மார்க்கெட்டைப் போல் களபுளவென இரைச்சலால் நிரம்பி வழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களும், பெண்களும், குமர்களும், குழந்தை குட்டிகளுமாக எழுநூற்றைம்பது பேரை இந்தச் சின்னக் கட்டிடமும், இரண்டு கிடுகுக் கொட்டில்களும், இரண்டு கக்கூசும் எப்படித்தான் இவ்வளவு நாட்களாய் தாங்கிக் கொண்டிருக்கிறதோ? யாருமே அறியாதது எங்களைத் தவிர.

விடிந்து பொழுதாகி இரவு வெகுநேரம்வரை ஓயாத இரைச்சல். எப்போதாவது சில நேரங்களில் கப்சிப்பெனவும் இருக்கும். வருபவர்களையும் வாசலின் முன் நிற்கும் பச்சை நிற ஜீப்பையும் பார்க்கும் போது கொஞ்சம் பயம் தான். இல்லையென்றால் சொல்லித்தான் தெரிய வைக்க வேணுமென்றில்லை. ஊரைமிதித்த பழைய பஜனைகள் தான், இது இங்கு எல்லோருக்கும் சகஜமான வாழ்க்கையாகிப் போய் விட்டது. வாழ்க்கையென்றால் இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற சமூக நோக்குக்கு அப்பாற்பட்டு, யுத்தத்தால் கலைக்கப்பட்டு, வறுமைநோய் பீடிக்கப்பட்டு இதுவே வாழ்வாகிப் போன மனிதக் கூட்டங்களின் உறைவிடம்தான் இந்த அகதி முகாம்.

மழைநேரங்களில் தூற்றலும், தூவானமும், வெயில் காலங்களில் வெக்கையும் புழுக்கமும், வியர்வையும் மனிதநெடியுமாய் ஒரே நாற்றமெடுக்கும். இந்த அகதி முகாம்கள் யுத்தங்களின் சாபக்கேடுகளாய்த் தானிருக்க வேணும். எங்களைப் போன்று எதுவுமற்ற பரிதாபத்துக்குரியவர்களின் தற்காலிக தங்குமிடம் நிரந்தரமாகிப் போகின்ற துர்ப்பாக்கிய வாழ்நிலை.

இது ஒரு நீண்ட மண்டபம். நாங்கள் அகதிகளாய் ஓடிவந்து அடைக்கலம் தேடமுன்பு இது ஒரு கலை அரங்கமாய் இருந்திருக்க வேணும். நாட்டிய நாடக அரங்கேற்றங்களை குதூகலமாய் மனிதர்கள் கூடியிருந்து கண்டு களித்த இந்தக் கட்டிடம் இன்று எங்களின் கூக்குரல்களைத் தாங்கிக் கொண்டு எத்தனை சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறதோ? புயலில் அடிபட்டுக் கரைசேர வழி தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு கப்பலைப் போல் இந்தக் கட்டிடமும் நாங்களும், எங்களிலிருந்து இந்த உலகமும் மனிதர்களும் எவ்வளவு தான் மாறி விட்டார்கள்.

எழும்ப மனமில்லாமல் படுக்கையில் இன்னமும் புரண்டு கொண்டிருந்தேன். கொஞ்சம் காலைக் கையைத் தூக்கி வீசினால் போதும் அது ஒரு ஆக்கிரமிப்புக்குச் சமன். எங்களுடைய எல்லையின் மொத்தப் பரப்பளவு ஏழு அடி நீளமும், நான்கு அடி அகலமும். சில நேரம் நீங்கள் ஏதாவது நாவலில் அல்லது சிறுகதையில் படிக்கிற மாதிரிக் கூடத் தோன்றலாம். உண்மை அதுவல்ல. பொதுவுடமை பேசியவர்களால் நிர்வகிக்கப்படுகின்ற எங்களின்

உண்மை நிலைதான் இது. இதை மீறினால் அது அதர்மம். பக்கத்து எல்லைக்காரர்கள் திட்டித் தீர்ப்பார்கள். வாங்கிக் கட்டிக் கொள்ள வேணும். என்னுடன் இன்னும் இருவர் உதிரிகளாய்ப் போன இருப்பிடம் தான் இது.

இந்த நீண்ட மண்டபத்தை ஒவ்வொரு குடும்பத்துக்கும் சிறு சிறு துண்டுகளாகப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பமும் தங்கள் தங்கள் சட்டி பெட்டிகளாலும் காட்போட் மட்டைகளாலும் தங்கள் தங்கள் எல்லைகளை நிர்ணயித்து சுத்தப்படுத்தி, பலப்படுத்தி வைத்திருப்பார்கள். இதற்குள் தான் எத்தனை உறவுகள்? கணவன், மனைவி, பிள்ளைகள், குழந்தை குட்டிகள், மாமன், மாமி என்ற உணர்ச்சியற்ற உணர்வுகளில் வாழ்க்கையின் எந்த சுவாரசியமுமற்ற இந்த மனிதர்களை எப்படியெப்படிப் புரட்டி யெடுக்கிறார்கள்.

வெயிலின் அகோரம் வெடித்து வெகுநேரமாகி விட்டது என்பதை திரும்பவும் நினைவுபடுத்தின. நேரத்தோட எழும்பி எந்த நாட்டைத்தான் பிடிக்கப் போறன். திரும்பத் திரும்பப் புரண்டு நிமிர்ந்தேன். வயிற்றுக்குள் தான் ஏதோ மாதிரி இருந்தது. அதுதான் வேற என்ன? வயிற்றை ஒரு தடவை தடவிவிட்டு எழும்பி சாறத்தையுயர்த்திக் கட்டினேன். படுக்கையைத் தூக்கி மடித்தேன். எண்ணையும் பிசகும் படிந்து அழுக்கேறிய நசல்க் கோழியைப் போல் உறுதியும் உரமுமில்லாத அந்த காட்போட் மட்டையை மடித்தேன். இதுதான் இங்குள்ள பெரும்பாலானவர்களின் படுக்கை.

கக்கூஸ் பக்கம் தலையை நீட்டிப் பார்த்தேன். நீண்ட வரிசை. நிறையப்பேர் காத்துக் கொண்டு பீடியை இழுத்துப் புகையைக் கக்கியபடி. இன்னும் பலர் வயிற்றைத் தடவியபடி, வாயில் வந்ததையெல்லாம் வெளியே கொட்டியபடி, பிரப்பம் பற்றைக்குள் சுருண்டு கிடக்கும் சாரைப் பாம்பைப் போல் அந்த வரிசை மெல்ல மெல்ல அசைந்து அசைந்து நகர்ந்து கொண்டிருந்தது. இந்த மனிதர்க்கெல்லாம் தங்கள் கழிவுகளை வெளியேற்றிக் கொள்வது கூட எவ்வளவு கடினமானதொன்றாக இருக்கிறது.

இந்த வரிசையில் போய் நின்று தாக்குப்பிடிப்பதென்பது என்னைப் பொறுத்தவரை சாத்தியப்படக் கூடிய ஒன்றல்ல. என்ன தான் செய்யலாம்? கடற்கரைப் பக்கமும் போய்க் குந்த முடியாது. பொலிஸ்காரன் கண்டானென்றால் தூக்கிக் கொண்டு போய் விடுவான். இனி கோட்டு, கச்சேரி என்று ஏறி இறங்க எங்களுக்கு யாரிருக்கா? இந்த சாதாரண ஒரு விசயத்துக்காக, என்னால் இனியும் தாக்குப் பிடிப்பதென்பது கஷ்ரமாகிக் கொண்டே வந்தது. திரும்பவும் அந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்போட் மட்டையை உதறி விரித்து விழுந்து படுத்துக் கொண்டேன்.

ஒவ்வொருவரும் எதையெதையோ பேசி, சிரித்து, திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தார்கள். வயதுபோன கிழடுகள் கிழக்கிலும், வடக்கிலும் இருக்கும் தங்கள் ஊர்களைப் பற்றி, உறவுகளைப் பற்றி, அந்தி நேரங்களில் வெய்யில் காலங்களில் குந்தியிருந்தபடி கிழட்டுக் கதைகள் பேசும் அந்த அரச, வேப்ப மரங்களின் சுகங்களைப் பற்றி, இந்த யுத்தத்தின் வெட்டு முகங்களில் தெறித்து வீசப்பட்ட மனிதர்களைப் பற்றி, இனிவரும் எந்த நாளில் ஊரின் மேல் சுதந்திரமாய் ஊர்ந்து திரியலாம் என்ற ஆதங்கத்தில் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு முகங்களின் மேலும் வெறுமை அனலாய்க் கனன்று கொண்டிருந்தது. வார்த்தைகள் சூடாகவே தெறித்துக் கொண்டிருந்தன.

கவலைகளை மறந்து போன சில தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளைப் பிடித்து முடியைப் பிரித்துப் பேன் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். வேறு சில குழந்தைகள் கிடைத்த கிடைத்த இடங்களில் விளையாடிக் கொண்டிருந்தன. திருவிழாக்களில் எங்கட ஊர்க்கோயிலைச் சுற்றி நிரம்பி வழியும் பெட்டி சட்டிக் கடைகளையும் சனக்கூட்டத்தையும், காதைக் குடையும் இரைச்சலையும் நினைவுபடுத்துவனவாய் இந்த அகதி முகாம்களும் மனிதர்களும்.

மழை நாட்களில் கிடைத்த துண்டுகளால் போர்த்திக் கொண்டு குழந்தை குட்டிகளோடு எல்லோருமாய்க் குந்தியிருந்தபடியும், காலையும் கையையும் முழங்காலுக்கு முட்டுக்கொடுத்தபடியும் கோழித் தூக்கம் போடுவதை வெளியார் யாராவது பார்த்தால் இதயத்தில் எங்காவது ஈரம் கசியும். யுத்தத்துக்கு நேர் சமனாய் நுளம்புகளின் தொல்லை. பொழுதுபட்டால் போதும். பாட்டம் பாட்டமாய் வந்து படாதபாடுபடுத்திவிடும். எங்கட உடம்புகளில் இரத்தம் கூட இல்லை. என்னதான் இன்னும் இருக்கிறதென்று வந்து குத்திக் குத்திக் குடிக்கிறதோ தெரியாது. எல்லாமே இரக்கமற்ற பாய்ச்சல்கள் தான்.

"மச்சான் எழும்படா இன்னும் என்ன தூக்கம்" அவன்தான் என்முன் இரண்டு கைகளிலும் சோற்றுக் கோப்பைகளை ஏந்தியபடி காலைக் கெந்தியபடி நின்று கொண்டிருந்தான். எனக்குத் திரும்பத் தூக்கம் வந்ததே தெரியவில்லை. அவ்வளவு தூக்கம். சுருட்டி எழும்பியபடி அவனின் கைகளிலிருந்த சோற்றுக் கோப்பைகளை வாங்கிக் கொண்டேன்.

காலைக் கெந்தியபடி நிலத்தில் கையையூன்றிக் கீழே சரிந்தான். சாறத்தையுயர்த்தி முழங்காலுடன் பொருத்தியிருந்த அந்த ஒற்றைக்காலைக் கழட்டி ஒரு ஓரத்தில் வைத்துக் கொண்டான். "மச்சான் முகத்தைக் கழுவிக் கொண்டு வாடா சாப்பிடுவம்" அவனும் இந்த அகதி முகாமும் எனக்குள் தணலாய் நகர்ந்தன. சிரித்த முகத்துடன் குழந்தைகள் அருகிலும், கொஞ்சம் தள்ளியும், கவலையைப் பற்றிக் கவலைப்படாத அவன், சமாந்தரமாய்க் கிடக்கும் சமுத்திரத்தின் ஆழத்தைப் போல் இந்த அகதி முகாமுக்குள்தான் எத்தனை சோகங்கள் அடைபட்டுக் காத்துக் கிடக்கின்றன.

அவனுக்கும் எனக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதுதானிருக்க வேணும். இன்றைக்கு ஆறு வருடங்களுக்கு முன் அவனுடைய ஒற்றைக் காலை இழந்து போனவன். அவன் தன் காலை இழந்த போது அவனுக்கு பதினெட்டு வயது. வாழ்வில் இளமை முளைத்தெழும்பி இந்த உலகத்தையும் இளமையின் ஆரம்பங்களையும், இரகசியங்களையும், இனிமையையும் வாழ்வின் முழுமையான சுகங்களையும் கடித்துக் கொறிக்க வேண்டிய வயதில் தன்னுடைய காலை இழந்து போனவன். பழகுவதற்கு இனிமையானவன். சிங்கிஸ் ஐஸ்மாத்தவ்வின் இலக்கியத்தைப் போல் அவனுடைய ஒவ்வொரு வார்த்தைகளும் மென்மையாய், ரம்மியமாய், அழகுற சுவையுடன் யதார்த்தமாய் இருக்கும். நாளெல்லாம் அவனுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கலாம். இந்த அகதி முகாமுக்கு வந்ததற்குப் பின்னர் தான் எனக்கு அவனுடைய நட்புக் கிடைத்தது. கேட்பதற்கு இனிமையாய் ஏதேதோ சொல்வான். இந்தச் சமூகத்தின் உணர்வுகளைப் பற்றி மனிதத்தைப் பற்றி இந்த உலகத்தின் ஓட்டங்களைப் பற்றி நிறையவே பேசுவான். நாளெல்லாம் கேட்டுக் கொண்டேயிருக்கலாம்.

வாய்க்குள் விரலை விட்டுக் காறித் துப்பிவிட்டு தண்ணியைமென்று வாயை அலசி முகத்தைக் கழுவி சாறத்தால் துடைத்து திரும்பவும் வந்து எனதிருப்பிடத்தில் குந்தினேன். எனக்கு முன் அவன். எங்கள் இருவருக்குமிடையில் சோற்றுக் கோப்பைகள். சோறும் மரவள்ளிக்கிழங்குக் கறியும். எங்கள் வழமையான மத்தியான நேரச் சாப்பாடு இதுதான். சோறும் ஏதாவது ஒரு மரக்கறியும் கிடைக்கும். இரவிலும் அதுதான். சில நேரங்களில் பாண் கிடைக்கும். காலையில் வெறும் அரிசிக் கஞ்சி. காலையிலும் இரவிலும் "இன்று றேசன் வரவில்லை." "காலையில் கஞ்சி கிடையாது" என்ற வாசகங்களும் சுவரில் தெரியும். இது இங்கு பழகிப் போன ஒரு வாழ்க்கை. நாக்குக் கூட மனசைப் போல் மரத்து விட்டது. இந்த உலகத்திலிருந்து நாங்கள் எவ்வளவு தூரம் அந்நியப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை ஆயுதங்களையும் அகதி முகாம்களையும் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் அந்த மனிதர்களுக்கெல்லாம் எங்கே விளங்கப் போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோற்றை அள்ளி வாயில் போட்டு வயிற்றை நிரப்பிக் கொண்டோம். மிகுதி இடத்துக்கு தண்ணியை மென்று சமப்படுத்திக் கொண்டு வெளியே வந்தோம். உள்ளே இருக்க முடியவில்லை. ஒரே அவிச்சலாய்க் கிடக்கிறது. அதையும் மீறி இந்த மனிதர்களின் இயந்திரத்தனமான வாய் இசைவுகளின் இரைச்சல் செவிப்பறைகளில் முட்டி மோதி எரிச்சலூட்டின. அவன் கெந்திக் கெந்தி நடந்தான். வெயில் மண்டையைப் பிளக்குமளவிற்கு அகோரமாய் இருந்தது. நேரே நடந்து திரும்பினோம். நீண்ட நெடும் காலி வீதி, கறுப்பாய், இடையிடையே பாதங்களை மட்டுமே நம்பிப்பழக்கப்பட்ட மனிதர்களை நினைவுபடுத்தும் மஞ்சள் கோடுகள். வாகனங்களின் ஓயாத இரைச்சலும் மனிதர்களின் நடையுமென மெல்லிய கரும் துரும்பின் நிழலென நீண்டு மறைந்து கொண்டிருந்தது.

இரண்டு பக்கங்களிலும் வானை நோக்கி உயரும் கட்டிட நெரிசல்கள், கடைகள், ஹோட்டல்கள், நிறுவனங்கள், சொப்பிங் கொம்பிளக்ஸ்கள், அல்சேசன் நாயும் நாலைந்து பேரும் வாழும் நவீன அழகான வீடுகள். நாங்கள் இத்தனை பேரும் இருக்கும் அகதி முகாம் கூட இதனைவிட சிறியது தான். இந்த நெரிசல்களுக்குள் விடுபட்டு நிமிர்ந்தெழமுடியாத சின்னச் சின்ன நிழல்தரு மரங்கள், அதனையொட்டிய பஸ்தரிப்புக் கூடாரங்கள், பூசிய பசை காய முதலே கிழிந்து தொங்கும் போஸ்டர்கள். அந்தச் சின்ன நிழல்தரு மரமொன்றின் கீழ் நானும் அவனும் ஒட்டிக் கொண்டோம்.. இந்த அகோர வெய்யிலுக்கு மரத்தின் நிழலின் இனிமை சுகம் பாரியின் தேர் கிடைத்த முல்லைக் கொடிக்குக் கூட கிடைத்திருக்காது.

எதிரே கோயில். இன்றைக்கு கோயிலில் ஏதோ விசேஷமாக இருக்க வேணும். இல்லாட்டியும் இப்படித்தான் பட்டுவேட்டியும், பட்டுச்சேலையும், தலைமயிர் முழுக்க கனகாம்பரம். பெருமைபுகழும் நிறைய மனிதர்கள். எங்களுக்கருகிலும் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டு இன்னும் பலர். ஹலோ நீங்க... "யேஸ்... யேஸ்..நான் போன கிழமைதான் லண்டனில் இருந்து வந்தனான். எனக்கு ஒரு மாசம் லீவு கிடைச்சிருக்கு. கொழும்பில வந்து கொஞ்ச நாளைக்கு நிப்பம் என்று... நீங்க... என்ன மாதிரி எப்ப ஊர்ல இருந்து வந்தனீங்க..." "நான் தங்கச்சியை கனடாவுக்கு அனுப்புறதுக்கு வந்தனான். இன்னும் ரெண்டு நாளையில போறா... எங்கண்ட ஆக்கள் நிறைய வாறதால பிரச்சினையெண்டு கதைக்கினம் உண்மையோ..." "ஒவ்வொருத்தரும் உப்பிடித்தான் கதைப்பினம். நான் லண்டனிலை ஆறு வருஷமாக இருக்கிறன். அதைவிட எங்கண்ட ஊரில இருந்து லண்டனுக்கு முதன் முதல் போனதும் எங்கட குடும்பந்தான். உது உங்களுக்குத் தெரியும்தானே. அண்ணா இண்டைக்கு லண்டனுக்குப் போய்

பன்ரெண்டு வருஷம். இங்க பிரச்சினை இருக்க மட்டும் அங்கயிருக்கிற ஒருத்தரும் கவலைப்படத் தேவையில்லை. அதுக்கிடையிலை எப்படியும் சிற்றிசன் கிடைச்சிடும் பாருங்க. மற்றது இன்னுமொரு விசயம் என்னென்டால்..." கொட்டுவ (புறக்கோட்டை) நோக்கி வந்த பஸ் ஒன்று அவர்களை ஏற்றிக் கொண்டு நகர்ந்தது. மீதி வார்த்தைகளும் அவர்களும் இனி எந்த தேசத்தில் போய் நிற்பார்களோ...?

நானும் வரதனும் அவர்களின் பேச்சில் மெய் மறந்து ஊமையாய் நின்றோம். அவர்களின் வார்த்தைகளில் ஆச்சரியப்படுவதற்கோ, கோபப்படுவதற்கோ எங்களைப் பொறுத்தவரை எதுவும் இருக்கவில்லை. இது இன்றைய சமூக ஓட்டத்தின் தலைவிரி கோலங்கள். வரதனுக்கும் நிறைய நண்பர்கள் இருப்பதாகச் சொன்னான். லண்டனிலும், பிரான்ஸிலும், சுவிஸிலும். ஆனால் வரதனுக்கும் அவர்களுக்கும் இப்போது எந்த உறவுகளும் தொடர்புகளும் இல்லை. சில நேரம் ஐரோப்பிய சூழலும், குளிரும், பியரும் அவர்களை மறக்கக் கூட வைத்திருக்கலாம். பல்வேறு மனிதர்கள், விதம் விதமான வாகனங்கள். காலி வீதி. இந்த வெய்யிலிலும் குளுகுளுப்பாய் மிதந்தது. எங்களுக்கு இதுதான் வாழ்க்கை. பகல் நேரங்களில் இந்த மரங்களும், பஸ் தரிப்பு நிலையமும். மாலைவேளைகளில் காலி வீதிக்குப் பின்புறமுள்ள கடற்கரையும். மாலை நேரங்களில் கடற்கரையில் குந்தியிருந்தபடி வானத்தையும், கடலையும் மாறி மாறிப் பார்த்து இரசிப்பதில்தான் எத்தனை ஆனந்தம். இருளில் உறங்கிவிடும். அந்த மாலை வேளைகள் தான் இந்த மனசுக்கு கொஞ்சம் ரம்மியமாய் இருக்கும்.

"காம்புக்குப் போவம் மச்சான்" தலையை ஆட்டியபடி மரங்களுக்கு விடை கொடுத்தேன். காம்பை நோக்கி நடந்தோம். உள்ளே நுழைந்ததும் திருவிழாக்காலமும், பெட்டி, சட்டிக் கடைகளும், அதே இரைச்சலும் திரும்பவும் ஞாபகத்துக்கு வந்தன. "அண்ணே உங்களுக்கு கடிதம் வந்திருக்கு". திரும்பிப் பார்த்தோம். வரதனுக்குத்தான். ஊரிலிருந்து வரதனுக்கு மாசத்தில் ஒரு தடவையாவது கடிதம் வரும். அம்மாவும் ஒரு அக்காவும் தான். மற்ற எல்லோரையும் தன்னுடைய காலைப் போலவே பறி கொடுத்தவன். கடிதத்தைப் பிரித்துப் படித்தான்.

அன்பின் தம்பிக்கு, நாங்கள் நலமாய் இருக்கிறோம். உன் நலத்திற்கு எல்லாம் வல்ல இறைவன் துணை புரிவாராக. முன்னர் அனுப்பிய கடிதங்களுக்கு ஏன் உன்னிடமிருந்து பதில் வரவில்லை. எங்களுக்கு எந்நேரமும் உன்னைப் பற்றிய கவலை தான். நேற்றைக்கு முதல் நாள் இரவு கந்தசாமி கோவிலடியில் நடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டையில ஷெல் வெடித்து அம்மாவுக்குக் காலிலையும் வயிற்றிலையும் காயம். ஐயரும் இன்னும் நாலைந்து பேரும் உடனே சரி. அம்மாவுக்கு பெரிசா ஒன்றுமில்லை. இப்ப பெரியாஸ்பத்திரியிலை தான் வச்சிருக்கிறாங்க.

கொழும்பில இருக்கிற அகதி முகாம்களையெல்லாம் மூடுறதாகக் கேள்விப்பட்டோம். அப்படியானால் நீ என்ன செய்யப் போகிறாய்? எதற்கும் கவனமாக இரு. எனக்கு இந்த முறையாவது ரீச்சிங் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறேன். கோணமலை மாமாட வசந்திக்கு சயன்ஸ் ரீச்சர் வேலை கிடைச்சிருக்கு. என்ன செய்யிற திறமைக்கும், நேர்மைக்கும் எங்கேயும் அப்படித்தான். காளிகோவிலடி கணபதியாரின் செல்வனையும் நேற்று இரவு சுட்டுப் போட்டானுகள். ஒரு சோலியும் இல்லாத அப்பாவிப் பொடியன். அந்தப் பெட்டையள் கிடந்து துடிச்சி துடிச்சி அழுததைப் பார்க்க எனக்கும் அழுகை வந்திட்டு. வாற கிழமை வள்ளி மாமிர சீட்டுக்காசு கிடைக்கும். உனக்கும் ஐநூறு அனுப்பி வைக்கிறேன். உடுப்பு வாங்கிக் கொள். வேறென்ன? உடனே கடிதம் எழுது. இப்படிக்கு அக்கா.

கடிதத்தை அவன் படித்து முடித்ததும் மௌனமாய் இருந்தேன். எதிரே சுவரில் இன்று "ரேசன் வரவில்லை சாப்பாடு இல்லை" என்ற வாசகங்கள் தெளிவாய்த் தெரிந்தன. இந்த அகதி முகாமும் தனக்குள் ஆயிரமாயிரம் சோகங்களையும், துயரங்களையும் தாங்கிக் கொண்டு இன்னும் மௌனமாய்.... என்னருகில் அவனும் மௌனமாய்...

சரிநிகர்

இல்லாமல் போனவர்கள்

"இந்த விட்ட விடியக்காட்டில என்ன அவிச்சலாக் கிடக்கு." தோளில் கிடந்த துண்டைத் தூக்கி " ஊ....ஆ..." என்று வாயசைத்து விசிக்கிக் கொண்டார் போடியார். ஓசோன் படலம் படுவான் கரைக்கு மேலே பிஞ்சி விழுந்து விட்டதைப் போன்ற வெய்யில். இந்த விடியக்காலைப் பொழுதில் அவ்வளவு வெக்கை. புழுக்கம் ஒருகாலமும் இப்படி இருந்ததில்லை. இப்பதானே எல்லாம் மாறிக் கிடக்கு. தனக்குள் தானே சொல்லிக் கொண்டு தலையில் இருந்த நாலைந்து மயிர்களையும் இழுத்து முடிச்சுப் போட்டு தனது நீண்ட கால நெருங்கிய சகாவான வெள்ளிக் கொண்டையூசியை அதன் இடையில் சொருகிக் கொண்டார்.

"இந்தக் கிழடுபத்தியும் இவருக்கு இன்னும் புதுமாப்பிள்ளை என்ற நினைப்புப் போல. தேத்தண்ணிக் கோப்பை எவ்வளவு நேரமா திண்ணையில கிடக்கு. ஆறிப் போச்சி கீறிப்போச்சி எண்டு என்னிட்ட ஒண்டும் கதைக்க வேண்டாம்" உள்ளுக்குள் இருந்து போடியாரின் மனிசி பொன்னம்மா தொண்டை கிழியக் கத்தினாள்.

இப்பதான் போடியாருக்கு தேத்தண்ணிக் கோப்பையின் ஞாபகமே வந்தது. திண்ணைச் சுவரில் சாய்ந்து தேத்தண்ணிக் கோப்பையை தூக்கி ஒரே மிடறில் உள்ளுக்குள் இழுத்துக் கொண்டார். இஞ்சி போட்ட தேத்தண்ணி அதுவும் போடியாரின் மனிசிர கை பட்டதென்றால் அதன் ரேஸ்ற் தனிதான். பட்டியிலிருந்து கறந்து வந்த பால் முட்டி நிறைய இருக்கும் அடுப்படிக்கட்டில். ஆனால் போடியாருக்கு காலையில் இஞ்சி போட்ட தேத்தண்ணி தான் வேணும். போடியார் வீட்ட காலையில வாற எல்லாருக்கும் கோப்ப முட்ட முட்ட ஊத்தின பால் தான் கிடைக்கும். ஆனால் போடியார் மட்டும் வித்தியாசம். போடியார் எல்லா விசயத்திலும் இயல்பாகவே கொஞ்சம் வித்தியாசமான மனிசர்.

சுவரில் கொழுவியிருந்த குடையைத் தூக்கி கமக்கட்டில் இடுக்கிக் கொண்டார். திண்ணையை விட்டு வெளியே வந்தார். "வாறன் பொடிச்சி" வாசல் கதவைத் திறந்து வெளியே வந்தார்.

அது களியும் கிறவலும் கலந்து போட்ட தெரு. அந்தத் தெருவிலே உள்ள ஒரே ஒரு கல் வீடு என்றால் அது போடியாரின் வீடு தான். நாட்டோடு மேய்ந்து முதிரைப் பலகையும் பழங்காலத்து சுட்ட செங்கல்லும் சுண்ணாம்பும் சேர்த்து கட்டின பெரிய வீடு. இன்னும் அழகாய் அசையாமல் கம்பீரமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடியாரைப்போல் உறுதியாகத்தான் இருக்கிறது. இந்த ஊருக்கே ஒரு அழகு என்று கூடச் சொல்லலாம். இந்த வீட்டில் திண்டு குடிச்சி படுத்தெழும்பாத மனிசரே இல்லை.

போடியாருக்குப் புள்ள குட்டியென்று ஒன்றும் இல்ல. எல்லாம் இந்த ஊரும் பொன்னம்மாவும் தான். நிறையவே மாடு கன்றுகளும் நில புலன்களும் இருக்கிறது. என்னதான் இருந்தாலும் இந்தக் காலத்தில் அந்த ஆண்டவன் வந்தால் கூட இந்த ஊருக்குள் ஒன்றுமே செய்ய முடியாது. காலம் மாறி கெலி புடிச்சுப் போய்க் கிடக்கு. என்னத்தைத்தான் கதைச்சுப் பேசினாலும் போடியாருக்குப் பெருமை என்றது கொஞ்சம் கூட இல்ல.

ஊரில என்ன புதினம் எண்டாலும் போடியாரும் மனிசியும்தான் முன்னுக்கு நிற்பார்கள். இப்ப என்னதான் நடக்கிறது? அதுதான் அந்த நாசமாய்ப் போய் நஞ்சு விழுந்து குடி முழுகிப் போற துயரங்களைத் தவிர வேறென்னதான் நடக்கிறது. யார் வீடென்றாலும் போடியாரும் பொன்னம்மாக்காவும் முன்னுக்கே வந்து விடுவார்கள். பொன்னம்மாக்கா தேத்தண்ணி பானையும் சக்கரைக் கட்டியும் பனையோலைப் பெட்டியில பாணுமாய் வீட்டுக்குப் பின் பக்கம் வந்து குந்திக் கொண்டு ஒவ்வொருத்தராய்க் கூப்பிட்டு "என்ன பொடிச்சி செய்யிற ஊரோட ஒத்தது கன்னங்குடாவானுக்கு என்ற மாதிரி உனக்கு மட்டுமா இது. அந்தக் கண் தெரியாத ஆண்டவன் கூட இந்தத் துவக்குகளின்ற கண்ணில பட்டா சும்மா விடாது. நாமளும் இண்டைக்கோ நாளைக்கோ இல்லாட்டி இந்த நிமிஷம் தானோ அது யாருக்குமே தெரியாத ஒன்று. இதக் குடிச்சுட்டுப் போய் குந்துடிமனேய்" வாயிலை வந்ததை எல்லாம் வெளியில கொட்டித் துயரம் படிந்த மனசுகளை ஓரளவுக்காவது வென்றுவிடுவா பொன்னம்மாக்கா. போடியாரும் அப்படித்தான். நல்ல மனுசன். தங்கமான மனுசன்.

இப்ப இந்த ஊரையே பேயாய்ப் புடிச்சு ஆட்டுற புதினம் எண்டா இதுதான். சில நேரம் சவம் தூக்க ஆம்பிளையளே இல்லாமல் பெண்டுகள்தான் சேர்ந்து தூக்க வேண்டி வரும். ஒரு நாள் இப்படித்தான். ஊரடங்குச் சட்டம் போட்ட நேரம் செல்லண்ட பொடியன் செத்து ரெண்டாவது நாள். ஊனம் வடிந்து நாற்றம் எடுக்கத் தொடங்கிற்று. காணாததற்கு கச்சான் காற்றும் வேற. ஊனம் வடிந்து காற்றோடு ஊரெல்லாம் நாற்றம் எடுக்கத் தொடங்கிற்று. தூக்கிறதுக்கு துடிப்பான ஆம்பிளையள் யாருமே இல்ல. போடியாரும் பொன்னரும் இன்னும் யார்யாரோ கிழடுகட்டைகளும்தான். பிரேதம் நல்லா ஊதி எழும்பி பாரம் எடுத்திற்று. போடியாருக்கோ தொந்தியும் குந்தியும் ஓடியாடி வேலை செய்யிற அளவுக்கு மனுசனிட்ட இப்ப தெம்பு இல்ல.

"அடியே பொடிச்சிகள் இந்தச் சனியன் புடிச்ச ஊரடங்குச் சட்டம் எடுக்க மட்டும் பாத்திருந்தா வயித்தில இருக்கிற புள்ளையளும் வளா்ந்து கல்யாணம் கட்டுற வயசுக்கு வந்திடுங்கள். இதைப் பார்த்துக் கொண்டு இருக்கேலாது. எப்பிடிக் கிளி மாதிரிப் பொடியன், ஊதிப் பெருத்து கறுத்து ஆளே மாறிப் போயிருக்கு. எழும்புங்கடி நாமதான் தூக்குவம்." அன்றைக்கு அந்தப் பிரேத ஊர்வலம் பொன்னம்மாக்காவின் தலைமையில் பொம்பிளையளால தான் தூக்கிப் போய் அடக்கம் செய்யப்பட்டது.

இதே மாதிரி இந்த ஊரிலை இன்னுமின்னும் நிறைய. ஊரிலை என்ன நடந்தாலும் பொன்னம்மாக்காவும் போடியாரும் ஒரு பிரிக்க முடியாத அங்கம்.

போடியார் தெருவில் இறங்கி நடந்தார். கிறவலும் களியும் இறுகிப்போன அந்தத் தெருவில் செருப்புக்கள் போடாத போடியாரின் கால்களை புழுதி மேய நடந்தார். சந்தி கழிந்து மறுமுனை திரும்பி எதிரே நடந்தார். பெரு விருட்சங்களாய் அரசும் ஆலும் வான்முகடு மறைத்து நிழல் பரப்பி நின்றன. கீழே அம்மன் கோவில். கோவிலுக்குப் பின் நோக்கி வலது திசையில் சா்ப்பங்களாய் சுருண்டு நிமிர்ந்து கிடக்கும் ஆலுக்குக் கீழே நாகதம்பிரான் புற்று. நாற்புறமும் பெரிய வெளி நிறைய மரங்கள் காற்றில் அசைந்து ஆடி நிழல் பரப்பின.

கோவிலுக்குப் பின் நோக்கிய வெளிதாண்டி வயல் வெளிகளும் வாய்க்கால்களும். வயல்களுக்கு நடுநடுவே ஆங்காங்கே தலையசைக்கும் தென்னைகளும் வாடிகளும். வயல்வெளிகள் தாண்டி அருகே அமா்ந்திருப்பதாய் ஆரங்கணம் காட்டி முறைத்துப் பார்க்கும் தாந்தாமலையும் வானுயா் காடுகளும் தொலைவில்..... மலையின் முகடுகளில் வனாந்தரங்களின் உச்சிகளில் படிந்து போன வெண்ணெய்க் கட்டிகளாய் மேகங்கள் ஆங்காங்கே. தொலைவிலும் அருகிலும் பசுவும் கன்றுகளும் நிரைநிரையாய் கூட்டமாய் கலந்து தனித்து முலைகள் அசைத்து வாயிற் புற்கள் மென்று அசைந்து திரிந்தன.

போடியார் தெருவிலிருந்து இறங்கி வெளியில் நடந்து கோவிலடிக்கு வந்தார். ஒரு போருக்குப் பிந்திய முந்திய சமாந்தரச் சுமைகளுடன் தனிமையில் சலித்துக் கிடந்த கோவிலும் அதன் சூழலும். வெயிலும் நடந்த களைப்பும் புழுக்கமும். அனல் கலந்த காற்றின் செறிவும் அதன் அசைவும் போடியாருக்கு ஏதோ போல் இருந்தது.

கோவிலடியை அடைந்ததும் மரங்களின் அசைவும் குளுகுளுப்பும் சாந்தமான அமைதியும் மனதுக்கு இதமாக இருந்தது. தோளில் கிடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டைத் தூக்கி எடுத்து முகத்தில் அப்பிப் போயிருந்த வியர்வைத் துளிகளை அழுத்தித் துடைத்துக் கொண்டார். துண்டை ஒரு கையாலும் நிலத்தை நோக்கித் திரித்து விடப்பட்ட மரக் கயிறுகளாய் தொங்கும் ஆலம் விழுதொன்றை மறுகையாலும் பற்றியபடி நாற்புறமும் விழிகளால் மௌனமாய் வினவினார்.

சருகுகள் சிதறி நிலம் முழுவதும் மறைந்து கிடந்தது. ஆங்காங்கே யேசு பிரித்துக் கொடுத்த ஆயிரமாயிரம் அப்பத் துண்டுகளைப் போல் மஞ்சள் ஆலம் சருகுகள் நிமிர்ந்து கிடந்தன. ஈரமாயும் அரைகுறை ஈரமாயும் பீயுருட்டி வண்டுகள் உருண்டை பிடித்து உருண்டோடின. எஞ்சிய சாணங்களின் நெடில் மூக்குத் துவாரங்களை எட்டிப் பார்த்தது.

சலம் விழுந்த குழிகள் வெளிறிய மஞ்சளாய் வெக்கை நெடியுடன். ஒவ்வொரு சருகுகளின் மேலும் காகம் குருவிகள் போட்ட எச்சங்கள் பால் வெள்ளையாய் மஞ்சளாய் மஞ்சளும் கறுப்புமாய். நடுவே அம்மன் கோவில். கோவிலின் மேலே ஆலம் விழுதுகள் இறங்கி காற்றில் நர்த்தனமாடின. காய்ந்து கருகிய பழுத்த வெளிறிய இலைகள். எதிரே சற்றுத் தள்ளி கிணறும் அதன் அருகே கொத்துக் கொத்தாய் மஞ்சள் பூக்கொத்துக்களுடன் கொன்றை மரம்.

உள்ளக் கிடக்கையின் சுமைகளை நீண்ட பெருமூச்சாக்கி வெளியேற்றினார். ஆலம் விழுதை விட்டு அவ்விடத்தில் இருந்து நகர்ந்தார் போடியார். வேட்டியையுயர்த்தி மடித்துக் கட்டினார். தோளிலே கிடந்த துண்டை கிணற்றுக் கட்டில் வைத்தார். தண்ணியை அள்ளி முகம் கைகால் அலம்பினார். துண்டையெடுத்து துடைத்தபடி கோவிலுக்குள் நுழைந்தார். சிரட்டையிலிருந்த திருநீற்றையள்ளி நெற்றியெல்லாம் அழுத்திப் பூசினார்.

போடியாரை அறியாமலேயே உதடுகள் எதை எதையோ சொல்லி முணுமுணுத்தன. இரு கரங்களையும் கூப்பி முழந்தாள் வணங்கி கசிந்து உருகினார்.

"அம்மனே கண்ணகித்தாயே கண் திறந்து பாராயம்மா. இந்த வருஷமாவது உன்ர கோயில் கதவு திறந்து சடங்கு செய்கிறதுக்கு, இந்த அருமந்த வயசில அழிஞ்சு போற பொடியள் பொடிச்சிகளை நெருப்பில வதங்கிக் கொண்டிருக்கிற இந்த ஊரை காப்பாத்து தாயே. கோதாரிபுடிச்சி கொல்லையில விழுகிற இந்தச் சனியன்களை சுட்டெரியம்மா." கண்களில் நீர் வழிந்தோட, யாதுமாகி நிறைந்தாயே பாடினார் பரவசமானார்.

கால்களை நீட்டி மடித்து சப்பாணி போட்டு மூலையில் போய் உட்காந்தார். நெற்றி நிறைய வெள்ளை வெளீரென்ற விபூதிப்பூச்சு சின்ன வயதில் மனப்பாடம் செய்த எல்லாப் பதிகங்களையும் வாய்விட்டுப் பாடினார். நிறையவே வேண்டுதல் கோரிக்கைகளாய் அம்மனிடம் கொடுத்தார். வாதவூரரும் வந்து போனார். "இமைப் பொழுதும் என் நெஞ்சில்" பாடினார். கண்களை மூடி நிறைய நேரம் தியானத்தில் ஆழ்ந்தவர் போலிருந்தார். போடியாரைப் பார்த்து வானம் சிரித்தது. பாவம் மனிசன். வெளியே வெறுமை.

போடியாரின் உள்ளக்கிடக்கையில் பாறாங்கற்களை ஒன்றுக்கு மேல் ஒன்றாய் உருட்டி விட்ட அவஸ்தை வலி. எல்லாம் இந்தப் பிள்ளை குட்டியை பற்றியது தான். பாவம் இந்த பொடிப்பிள்ளைகள் இந்த அருமந்த வயசில தங்களைப் பற்றி எந்தக் கவலையுமில்லாமல் எப்படியெப்பிடி அழிந்து கொண்டு போகுதுகள். இரவும் பகலும் இங்கு ஒன்று தான். சுதந்திரமாய் மனிதர்கள் நடமாடி எத்தனை ஆண்டுகள். ஊரடங்குச் சட்டம், ரவுண்டப் எந்த நேரத்தில் வலியாய் வந்து முட்டி மனித உயிர்களை கவ்விச்செல்லுமென்று சொல்ல முடியாது.

இந்த ஊரும் உலகமும் தலைகீழாய்ப் புரண்டு படுறபாட்டையெல்லாம் வெறும் குருட்டுத்தனமாய் பார்த்துக் கொண்டு வாழப் போடியாருக்கு அறவே புடிக்கயில்லை. போடியார் வாழ்க்கையின் எல்லாப் பருவங்களையும் பந்திபந்தியாய் பக்கம் பக்கமாய் அனுபவித்தவர். சொத்து சுகங்களா? நிலபுலன்களா? மாடுகன்றுகளா? எல்லாமிருந்தும் அவருக்கேனோ இதெல்லாம் புடிக்காது. இந்தக் காலத்தில புள்ள குட்டிகள் இருந்தால் தான் சோலி சுரட்டு அதிகம். எல்லாப் பக்கங்களுக்கும் பதில் சொல்லத் தெரிந்திருக்க வேணும். போடியாருக்கு அந்தப் பிரச்சினை கூட இல்லை.

போடியார் இயல்பாகவே கொஞ்சம் வித்தியாசமான மனிதர். இந்த உலகத்தின் மேல் இந்த ஊரில் அதையும் மீறி இந்த மனிதர்களின் மேல் அவருக்கொரு தனிப் பிரியம், அலாதி. இந்தக் கொஞ்சக் காலமாக இந்த ஊர் படுற அவஸ்தை துயரம் வேதனை எல்லாத் தாய்மார்களும் அவர்களின் கருவறைகளில் நெருப்புத் துண்டங்களைக் கொட்டிக் கொண்டு வாழ்கின்ற துயரம் வேறு யாருக்குத் தான் புரியப் போகிறது.

தாய்மையின் கருவறைகளெல்லாம் தோண்டிப் புதைக்கப்பட்ட ஒரு கொடுமையால் தனித்துக் கிடக்கிறது இந்த ஊர். முன்பென்றால் இந்தக் கோவிலடி எப்பிடிச் செந்தழிப்பாய்க் கிடக்கும். கிழடுகட்டைகளும் பொடியள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொட்டையளுமாய் நிறைந்து அடிமரத்து வேர்களில் தலைசாய்த்து காற்று வாங்கும் சுகம். ஆலம் விழுதுகளில் ஊஞ்சலாடும் பொடியள் பொடிச்சிகளின் சத்தம் காதைக் குடையும். வெள்ளிக்கிழமைகளில் பொங்கல் சாப்பிடும் அலாதிப் பிரியம். வருஷத்துக்கொருக்கால் வைகாசிக்கு சடங்கு. ஊரே ஒட்டுமொத்தமாய் கூடிக் குலாவி நிற்கும்.

இந்தக் கோவிலடிப் பக்கம் இப்ப யாருமே வாறதில்லை. ஒரு சூனியப் பிரதேசம் போல் கோவிலுக்கு எதிரே நீண்டு செல்லும் மண்முனைப் பாலத்து றோட். போக்குவரத்துக்காக யாருமே பாவிப்பதுமில்லை. போடியார் தான் ரெண்டொரு நாள் கோவிலடிப் பக்கம் தலை காட்டுவார். போடியாரும் இல்லாமல் விட்டால் அம்மன் கோவில் தனிமை தான். திடீர் திடீரென நடக்கும் ரவுண்டப் பில் சில நேரம் கோவிலுக்குப் பின் வெளியிலும் கூடிக் கலைந்து குழறிக் கூத்தாடும் ஊர். மற்றும்படி யாருமே கோவிலடிப் பக்கம் தலைகாட்டுவதில்லை.

கோவிலுக்குள்ளிருந்து வெளியே வந்த போடியார் கால்களால் சருகுகளைக் கிளறி ஆலின் அடி மரத்துடன் சாய்ந்து கொண்டார். மேலே வானம் மறைத்து கிளைகள் வளைந்து நெளிந்து உயர்ந்து இலைகள் செறிந்து அடர்த்தியாய்க் கிடந்தது. கீழே அரிநிழல் இலைகளைத் துளைத்து பூமியில் விழுந்தன. காற்று குபுகுபுவென வீசியது. கொஞ்ச நேரம் இப்படியே கண்களை மூடிக்கொண்டால் எப்பிடியிருக்கும்.

வீட்டில பொன்னம்மா ஊர் நடுங்க கத்திக் கிழிப்பாளே. இவ்வளவு நேரமா இந்த மனிசன் எங்க துலஞ்சு போயிற்றோ என்று. போடியாருக்கு இப்ப முகத்திலை துளி கூட சந்தோஷமில்லை. இந்தக் கொஞ்சக்காலமாக இந்த ஊரை உறுத்தும் அச்சம் நிறைந்த வாழ்க்கையைப் பற்றி சிதைந்து போய்க் கொண்டிருக்கும் மனித வாழ்வியலின் கொடூரங்களைப் பற்றி வாய்கிழித்து அலறும் துவக்குகளின் குரூரங்கள் பற்றி நிறையவே துயரப்பட்டார்.

முன்பென்றால் வருஷத்துக்கொருக்காய் மார்கழியில் வெள்ள நிவாரணம் பதிய வரும் டீ.ஆர்.ஓவின் ஜீப்பும் எப்பவாவது தேர்தல் காலங்களில் வரும் ஒன்றிரண்டு கார்களையும் தவிர இந்த ஊரில் மாட்டு வண்டிலும் கரியல் பூட்டிய சைக்கிளும் ரக்ரரும் தான். ஆனால் இப்ப நிலைமை முற்றிலும் வித்தியாசம். எந்த நேரமும் சொல்லிக் கொள்ளாமல் ஊருக்குள் நுழையும் கொள்ளிவாய்ப் பிசாசுகளாய் ஜீப்புகளும் ட்ரக்குகளும் அலறிப் புடைத்துக் கொண்டு வரும். கிறவலும் களியும் கிண்டி புழுதி மண்டலம் புயலாய்க் கிளம்பும். மேலே

இரைச்சல் போட்டுக் கொண்டு விமானங்கள் ஓடி மறையும். அச்சத்தால் நெல்மணிகளும் நிலத்தில் சாயும்.

போடியார் தன்னை மறந்து மரத்துடன் ஒன்றிப் போனவராக அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். மேலே காற்றில் இலைகள் அசைந்தன. காகங்கள் எச்சம் துப்பின. குருவிகள் கீச்சிட்டன. அணில்கள் கிளைக்குக் கிளை தாவி ஒன்றையொன்று கட்டிப் பிடித்தன. தூரத்தே மேகங்கள் ஓடி ஒளிந்தன. இயற்கை எவ்வளவு அழகாய் செதுக்கப்பட்டிருக்கிறது. ஐந்தறிவு படைத்தவைகள் தங்கள் தங்களது வாழ்க்கையை எவ்வளவு அழகாய் செப்பனிட்டு ஒழுங்குபடுத்தியுள்ளன. இந்த ஆறறிவு படைத்த மனிதர்கள் மட்டும் இந்த உலகமெல்லாம் எவ்வளவு முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறார்கள். தங்களைத் தாங்களே அழித்து சிதைத்து இந்த உலகின் ஆன்மாவைக் காயப்படுத்தி ரணகளமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தூரத்தே காய்ந்து கருகி வெறுமையாய்க் கிடக்கும் வயல் வெளிகள். மழைக்காலங்களில் நிரம்பி வழிந்தோடும் வாய்க்கால், எதிர்த் திசையில் வெற்றிலையின் நடுநாராய்ப் பிரிந்து செல்லும் றோட். இரு பக்கமும் வயல் வெளிகள் நெரிக்க, ஆள் ஆரவாரமின்றி தனித்து நீண்டு சென்றது. உச்சி வெயில் அகோரம் தணிந்து மெல்ல மெல்ல மேற்கே நகர்ந்தது. போடியார் இன்னமும் கண்ணயர்ந்து தன் நிலை மறந்து மரத்துடன் ஒன்றிப் போனவராய் தூங்கிக் கொண்டிருந்தார்.

திடீரென காகங்கள் செட்டை அடித்துப் பறந்தன. மேலே மேலே இன்னும் மேலே சிறகுகளை வலித்து எழுந்தன. அணில்கள் கிளைக்குக் கிளை தாவின. குருவிகள் கீச்சிட்டுக் கொண்டு எங்கோ ஓடித்தப்பின. போடியார் திடுக்கிட்டு கண் விழித்தார். ஏதும் பேய் பிசாசு பிடித்து ஆட்டுகிற கனவோ. வானமும் திடுக்கிட்டு விழித்தது. பூமி அச்சத்தால் ஒரு கணம் அதிர்ந்து குலுங்கியது.

கோரமாய் புயல் வீசியது. ஜீப்புகளும் ட்ரக்குகளும் ஒன்றன்பின் ஒன்றாய் ஊருக்குள் நுழைந்தன. கிறவல் மண்டி புழுதி கிளம்பியது. துவக்குகள் ஒன்றுக்கொன்று பதில் சொல்லி வெடித்துச் சிதறி குருதி குடித்தன. மனிதம் உறைந்தது ஓலமிட்டபடி......

ஏதோ பித்துப் பிடித்தவர் மாதிரி போடியார் ஓடினார். அவிழ்ந்த வேட்டியை ஒரு கையில் பிடித்தபடி கோவணத்துடன் தொந்தி குலுங்கி மனம் பதைபதைக்க ஊருக்குள் ஓடினார். சூரியக் கதிரின் வீச்சைப்போல் எல்லாம் ஒரு கணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதில் முடிந்து விட்டது. சந்தி திரும்பி அந்தப் பூவரசுக்கு கீழே போடியார் மல்லாந்து சரிந்தார். ஒரு வளைகுடா யுத்தம் முடிந்து இன்னுமோர் யுத்தத்துக்காக ஊர் அடங்கி விட்டது.

கௌதமரைப் போல் வானம் கண்மூடி கவலையில்லாமல் கிடந்தது. சூரியன் தொலைந்து எங்கும் இருள் மூடிவிட்டது. குருதியால் நனைந்து, போடியார் மல்லாந்து கிடந்தார். அருகே பொன்னம்மாக் கிழவி ஒரு குழந்தையைப் போல் விம்மி விம்மியழுதாள். பொன்னையாக் கிழவரும் இன்னும் நாலைந்து கிழடுகட்டைகளும் பெண்டுகளும் குழந்தை குட்டிகளுமாக ஊரே கூடிவிட்டது. வாயில் விரல் வைத்து எல்லோரும் ஓவென்று அழுதார்கள்.

குப்பி விளக்குகளின் ஒளியில் சந்திப் பூவரசு பூவும் கன்னியுமாக காற்றில் தலையசைத்து கதை கேட்டுக் கொண்டிருந்தது.

சரிநிகர்

குருட்டு வெளி

மேற்கைத் தவிர எங்கும் கரி பூசிய வானம். கூடவே ஒரு பக்கம் சரிந்து போய்க் கிடந்தது. பூமிக்கு குடை பிடித்துக் குடைபிடித்து சலித்துப் போன துயரமாய்க் கூட இருக்கலாம். என்னென்ன கொடூரங்கள் இந்தப் பூமியின் முகமெங்கும். பார்க்கச் சகிக்காது மேகக்கூட்டங்கள் ஓடித் தப்பின. காற்று காறித் துப்பியது எல்லோர் முகங்களிலும். எதையுமே விளங்கிக் கொள்ளாதவர்களாய் ஏன் இன்னும் மனிதர்களாய் வாழ்கிறார்கள் என்பது தான் யாருக்குமே புரியவில்லை? சோர்ந்து போய் உறங்க இடம் தேடும் சூரியன் எல்லாமிழந்த சன்னியாசியைப் போல் அந்த சாயங்கால மாலைப் பொழுது துயருற்றுப் போய்க் கிடந்தது.

அந்த மின் கம்பத்தின் நுனியில் ஒற்றையாய்ப் போன காகம் இறக்கையில் ஒட்டியிருக்கும் அழுக்குகளை சொண்டால் கொத்திக் கொத்தி திரும்பவும் விழுங்கிக் கொண்டிருந்தது. அந்த மின்கம்பத்தோடு ஒட்டியபடி அவள், அவளுக்கு எதிரே அந்தப் பள்ளிக்கூடம். இடித்துத் தள்ளப்பட்ட சுவர்கள், நாற்புறமும் சுருள் சுருளாய் சுருண்டு போய்க் கிடக்கும் முட்கம்பி வேலிகள். முன்னே மண்நிரப்பிய சாக்குகளை அடுக்கிய சென்றி. அந்த சென்றியின் உள்ளே ஒரு ஏ.கே, எல் .எம். ஜி ஸ்ராண்டில் குழாய் வாய்களைத் திறந்தபடி மனித வேட்டையாடத் தயாராயிருந்தது. அதனைச் சுற்றிலும் நாலைந்து ஆமிக்காரர்கள். கைகளில் எம் சிக்ஸ்ரீனும், ரி பிப்ரி சிக்ஸ்சுடனும் அட்டகாசமாய் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். இன்றிரவுக்கு எத்தனை மனிதர்களை எப்படியெப்படி வதைத்து கொன்றெரிப்பது என்ற ருசிகரமான உரையாடலாய் கூட இருக்கலாம்.

அவள் அந்த தார் றோட்டைக் கடந்து சென்றியை நோக்கி நடந்தாள். கண்களுக்கு வெளியே நீர் சொக்கிப் போயிருந்தது . கன்னங்களில் கண்ணீர் சாரைசாரையாய் வடிந்ததற்கான தடங்கள். அழுது அழுது அவள் கன்னங்கள் வீங்கிப் போயிருந்தன.

"மொக்கத மொக்கத" சென்றியிலிருந்த ஆமிக்காரன் தலையை நீட்டியபடி கேட்டான் "எண்ட புள்ளையைக் காட்டுங்க ஐயா, அவன் ஒரு அப்பாவி, அவனை ஒண்டும் செய்து போடாதீங்க" தலையிலடித்துக் கொண்டழுதாள். கையெடுத்துக் கும்பிட்டாள். விழிகளிரண்டும் முட்டி கன்னங்கள் நீரால் நிரம்பி வடிந்தது. அவளின் உள் ஆத்மா துடித்து துடித்து அழுதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மையின் பாசம் எத்தனை மகத்தான, புனிதமானது. பசுபிக் சமுத்திரத்தைப் போல் ஆழம் கொண்டதோ? இல்லை. அது எல்லையற்றது. ஒவ்வொரு உயிரையும் குண்டுகளால் தகர்த்தெறிந்து கொல்லும் அந்த துவக்குகளுக்கும் இந்த மனிதர்களுக்கும் தாய்மையின் குமுறல் எத்தனை மகத்தானது என்பது எங்கனம் தெரியப் போகிறது? அது எல்லையற்றது, விசாலமானது, எல்லாவற்றிற்கும் மேலாக புனிதமானது.

அவள் கெஞ்சிக் கெஞ்சி அழுதாள். அவர்கள் கேள்விகள் கேட்டு அதட்டியபடி சிரித்தார்கள். முன்னர் அந்த இடம் ஒரு பள்ளிக்கூடம். அன்பும், பண்பும், அறிவும் போதிக்கப்பட்ட இடம். இன்று அது ஓர் வதைமுகாம், கொடூரங்களின் உறைவிடம், துரோகத்தனங்களின் தரிப்பிடம், யூனிபோர்ம் போட்ட மிருகங்கள் துவக்குகளுடன் நடந்து திரிந்தன. வலது பக்கமுள்ள மூன்றாவது கட்டிடம் தான் விசாரணைக் கூடம். ரத்தமும் சதையும் தெறித்து அரைகுறை உயிருடன் இன்னும் எத்தனை மனிதர்கள் ஊசலாடிக் கொண்டிருக்கிறார்களோ?

அவர்கள் அதட்டியபடி சிங்களத்தால் ஏதோ சொல்லிச் சொல்லிச் சிரித்தார்கள். ஒருவன் வெளியே வந்தான் துவக்கை மார்பில் வைத்து அழுத்தியபடி கொஞ்சத்தூரம் தள்ளினான். தெருவைக் கடந்து அந்த மின்கம்பம் வரை தள்ளினான்.

அந்த மின்கம்பத்தோடு சாய்ந்தபடி நிற்கமுடியாமல் கீழே சரிந்து குந்திக் கொண்டாள். இந்த மண்ணில் பிறந்த அனைவரும் தோமஸ் அல்வா எடிசனுக்கு எப்படி நன்றி சொல்லாமலிருக்க முடியும். நன்றி எடிசனே நன்றி..

ஆனால் பின்னரோ, இந்த மின்கம்பங்களின் அடியிலிருந்தல்லவா உயிர்கள் பிரிந்தன. துடிதுடித்து அழுதன. கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சின. கோழிக் களவுக்காகவும் வாழைக்குலைக் களவுக்காகவும் உயிர்கள் பிரிந்தன. இயக்க மோதல்கள், பதவி வெறிகள், போராட்டம் தூசாக மின்கம்பத்தின் அடியில் ரயரில் மனிதம் சுருண்டு சுருண்டு விழுந்தது. ஆனாலும் யேசுவைக் காட்டிக் கொடுத்த கொலைஞர்கள் புனிதர்களாய் இன்றும் ஊர்களுக்குள் பஜிரோக்களிலல்லவா அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

பூட்ஸ்கால்களை நிலத்தில் ஓங்கிக் குத்தியபடி கையிலிருந்த ரி பிப்ரி சிக்ஸ்ஸை ஒரு தடவை லோட் பண்ணி ஓட்டோவிலிருந்து சேப்ரிக்கு

தட்டி மகசினைக் கழட்டி திரும்பவும் சடாரென அடித்து, ரிகரில் விரல் வைத்து "யண்ட யண்ட" என்று கத்தியபடி திரும்பித் திரும்பி துவக்கைக் காட்டி எச்சரித்தபடி சென்றிக்குள் நுழைந்து, உடலை மறைத்து கழுத்துக்கு மேலே தலையைக் காட்டியபடி உட்கார்ந்திருந்தான். கறுப்பு இரும்புத் தொப்பிக்குள் அவனுடைய தலையும் முகமும் ஓட்டுக்குள்ளிருந்து எட்டிப் பார்க்கும் ஆமையாய்.... அவனுடைய பச்சை நிற யூனிபோர்ம் போட்ட உடம்பு, மனிதர்களை விழுங்கும் விஷ முதலையாய்.... அப்படியே சென்றியைக் கடக்கும் முகங்களுக்குள் வந்து போகும்.

அவள் குந்தியிருந்த மின்கம்பத்திற்கு சற்று தொலைவில் வாகனங்கள் நின்றபடி உள்ளேயிருந்தவர்களை இறக்கி விட்டு வளைந்து நெளிந்து சென்றியைத் தாண்டி அதற்கும் சற்றுத் தொலைவில் நின்றன. வாகனங்களிலிருந்து இறங்கியவர்கள் நடந்து சென்று சென்றியின் முன் நின்றவர்களிடம் அடையாள அட்டை காட்டி கைகளிலிருக்கும் மூட்டை முடிச்சுக்களைப் பிரித்து, திறந்து காட்டி, உள்ளாடைகளை மட்டும் அவிழ்த்துப் பார்க்காத திருப்தியில் வாகனங்களை நோக்கி நடந்தனர். வாகனங்களிலிருந்து இறங்கி சென்றியை நோக்கி நடப்பவர்களுக்கு மின் கம்பத்தோடு சாய்ந்தபடி இருக்கும் அவளைப் பார்க்கும் போதெல்லாம் துயரம் பீறிட்டுக் கொண்டு வராமலிருக்க முடியாது தான். ஆனாலும் அவர்களாலும் எந்த ஆறுதலும் சொல்ல முடியாத பரிதாப நிலை. அவர்களுக்கெல்லாம் ஒன்று மட்டும் தெரியும். தன்னுடைய மகனையோ மகளையோ பிணந்தின்னிக் கழுகுகளிடம் பறிகொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு தாய் என்று மட்டும்.

செம்மஞ்சள் வானமும், அந்த மாலை வேளையும் கருகிக் கொண்டிருந்தது, மனிதர்களை ரயர்கள் எரித்தும் கருக்கும் புகை மூட்டங்களாய்க் கூட இருக்கலாம். சென்றிகளிலும் ஆமிக் காம்பின் உள்ளேயும் வெளிச்சங்கள் பளிச்சிட்டன. ஊருக்குள் நாய்கள் ஊளையிட்டன. மனிதத்தை முழுவதுமாய் இழந்து போன மயான அமைதி. தெருக்களில் மரங்களின் நிழல்கள் மட்டும் காற்றில் அசைந்தாடின, எந்த அச்சமுமின்றி.

ட்ரக்குகளும், ஜீப்களும் எந்நேரமும் தயாரென ஆங்காங்கே நின்றன. கைகளிலும் சென்றியின் மண்மூட்டைகளிலும் பங்கர்களுக்குள்ளும் தயாராய் இருக்கும் துவக்குகளும், மோட்டார்களும் விசையின் அழுத்தங்களுக்காய் தவம் கிடந்தன. இனி எந்த வாகனங்களும் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிகளில் வரப்போவதில்லை. மனிதர்களின் வாடையை ஆமிக் காரர்களையும் அவர்களுடன் திரிபவர்களையும் தவிர வேறு யாரும் தேடிப்பார்ப்பதென்பது அரிது.

ஆமிக்காம்பின் உள்ளே துப்பாக்கியின் மேனியெங்கும் விரல்களைத் தடவும் விஷ ஜந்துக்கள் அணிவகுத்து தயாராகும் சத்தங்கள் காற்றில் முழங்கின. அங்குள்ள மூன்றாவது கட்டிடத்தில் நிலத்தில் மரண அவஸ்தையில் உருளும் மனிதத்தின் ஆத்ம ஒலிகள் காற்றில் மெலிதாக எழுந்தன.

ஈரம் உலராத கண்களுடன் பாதி மங்கிய நிலையிலும், பாதி மங்காத நினைவுகளுடனும் அவள் அந்த மின்கம்பத்தோடு சாய்ந்திருந்தாள். அமைதியாகக் கிடந்த அந்தத் தெருவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு பச்சை நிற பஜிரோ ஊடறுத்தது. அதற்குப் பின்னால் நாலைந்து ஜீப்கள் மின்கம்பத்திற்கு நாலைந்து அடி தள்ளி திடீரென நின்றன. உள்ளிருந்தவர்கள் பாய்ந்து இறங்கினார்கள். "ஏய் என்னடி றெக்கி எடுக்கிறியோ" தமிழால் சுத்தத் தமிழால் பேசியபடி நீட்டிய துவக்கால் குத்தப் போனான் ஒருவன். கூடவே இறங்கிய தலைவன் கையிலிருந்த நைன் எம்.எம்.பிஸ்ரலைத் தடவியபடி குத்தப் போனவனைத் தடுத்தான்.

"உங்கட துவக்கால் என்னை வேணுமெண்டால் சுடுங்க, என்ர புள்ளையை மட்டும் விடுங்க, அவன் ஒரு அப்பாவி, ஒரு இயக்கத்தோடையும் தொடர்பில்லாதவன். ஏற்கெனவே ரெண்டு பிள்ளையளை தின்னக் குடுத்திட்டன். ஒருத்தன் உங்கட இயக்கத்தில் இருந்து தான் இன்றைக்கு எட்டு வருஷத்துக்கு முந்தி முகத்தைக்கூட பார்க்க கிடைக்காம... (அழுதாள், அழுதாள். கைகளிரண்டையும் தலையிலடித்துக் கொண்டழுதாள்.) உங்கட தலைவர்மாரிட்ட கேளுங்க அவனைப்பத்தி. இப்ப மறந்திருந்தாலும் ஞாபகப்படுத்திச் சொல்லுவானுகள். "இந்தக் கை உங்க எல்லோருக்கும் விடிய விடிய வெக்கையில நனைஞ்சு ஆக்கிப் போட்டு தின்னக்குடுத்த கை. நீங்க ஒருத்தரல்ல எல்லோருமே நன்றி கெட்டவர்கள். உங்களுக்கு மனிசர்களைப் பற்றித் தெரியாது. பதவியையும், பணத்தையும், பவுணையும், ரயரையும், துவக்கையும் மட்டுமே தெரியும். சுடுங்க சுடுங்க இந்த இடத்தில் என்னையும் சுடுங்க." முகத்திலும் தலையிலும் அடித்துக் கொண்டு அழுதாள். வெறும் சடமாய் அந்த மின் கம்பம் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு....

வானத்தில் விடுபட்ட இரண்டொரு ஆட்காட்டி குருவிகள் ஏதோ சேதிகளுடன் வேகமாய் பறந்து கொண்டிருந்தன. கூட இருந்த

தலைவனுக்கு கொஞ்சம் கொஞ்சமாய் ஞாபகங்கள் வந்தன. கையிலிருந்த பிஸ்ரலை திரும்பவும் ஒரு தடவை தடவிக் கொண்டான். தன்னுடைய இயக்கம் இன்னொரு இயக்கத்தால் நிர்மூலமாக்கப்பட்ட போது தங்களை எல்லாம் காப்பாற்றி விட்டு தான் மட்டும் இறந்து போனானே, அவனுடைய தாயல்லவா இவள். முந்திய இரவுகளில் எத்தனையெத்தனை தடவை இவளுடைய வீட்டிற்கு போய்ச்சாப்பிட்டு வந்திருப்பன். ஒரு தாயாய் எத்தனை கனிவாய் இவர்களையெல்லாம் உபசரித்தவள்.

கூட இருந்த தலைவன் தன்னை இனம் காட்டிக்கொள்ளவில்லை. "அம்மா நீங்க வீட்டுக்குப் போங்க, நாளைக்கு காலையில உங்கட மகன் வீட்டுக்கு வருவான்." தலைவனின் கறுத்த உதடுகள் மட்டுமே பேசின. அவளுக்கு இவர்களின் வார்த்தையில் கொஞ்சம் கூட நம்பிக்கையில்லை. இருந்தாலும், அவளையறியாமலே அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள். கூட நின்ற முகாம் கப்ரனுக்கு எதுவும் விளங்கவில்லை. அவன் நகத்தைக் கடித்து கீழே துப்பியபடி சிங்களத்தில் ஏதோ புறுபுறுத்தான். அவனின் பார்வையெல்லாம் பின்னாலுள்ள ஜீப்களில் கையும் கண்களும் இறுகக் கட்டியிருந்தவர்கள் மேலேயே பதிந்திருந்தது.

பஜிரோவும், ஜீப்களும் காம்புக்குள் நுழைந்தன. உள்ளேயிருந்த தன்னுடையவர்களைக் கூப்பிட்டு தலைவன் கேட்டான். "அந்த அம்மா யார் தெரியுமா? இன்றைக்கு எட்டு வருஷத்திற்கு முந்தி தங்களையெல்லாம் காப்பாற்றி அனுப்பி விட்டு தான் மட்டும் அவர்களிடம் அகப்பட்டு அரைகுறை உயிருடன் தங்களுக்காக ரயரில் சுருண்டு சுருண்டு எரிந்து மாண்டானே" எல்லோரும் விறைத்துப் போய் நின்றார்கள்.

எல்லோரும் அந்த மூன்றாவது கட்டிடத்திற்குள் நுழைந்தார்கள். நாலைந்து ஆமிக்காரர்கள் செத்துப் போனவர்களையும் மண்வெட்டிப் பிடிகளால் அடித்துக் கொண்டிருந்தார்கள். சுவரும் நிலமும் சிவப்பாகவும் கறுப்பாகவும் இருந்தது. மூக்கைப் பிணநெடி ஆட்கொள்ள, பார்த்தார்கள். பார்த்தார்கள். பின்புறம் கைகள் கட்டப்பட்ட நாலைந்து நிர்வாண மனிதர்கள் சதை நெரிபட்டு கிழிபட்டு முகம் குப்புறக் கிடந்தார்கள். ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. இலையான்கள் சிணுசிணுத்தன. அது ஒரு வதைமுகாமின் ஸ்தானமாய்.

"எப்ப பிடிச்சனீங்க?"

"நேற்று."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்க வைச்சு?"

"ரியூசன் விட்டு வரும் வழியில் ஒரு ஆள், மற்ற இரண்டு பேரும் கோயிலுக்கு பின்னால எங்களைக் கண்டு பதுங்கினார்கள்."

கூட இருந்த தலைவனால் வேறெதுவும் கேட்க முடியவில்லை. கையிலிருந்த பிஸ்ரலை திரும்பவும் தடவிக் கொண்டான். வெளியே வந்தார்கள். விடிந்தால் நாளை காலை கூட்டமொன்றில் தான் பேசப்போகும் விடயங்கள் பற்றிய துண்டை எடுத்து பாடமாக்கிக் கொண்டு கப்ரனின் றூம் நோக்கி நடந்தான். நடக்கும் போதே பிஸ்ரலுடன் தாடியையும் ஒரு தடவை தடவிக் கொண்டான்.

அந்தக் கிறவல் வீதியால் நடந்து காளிகோவிலடி தாண்டி தள்ளாடித் தள்ளாடி நடந்தாள். நிசப்தத்தை முழுவதுமாய் உள்வாங்கி ஊர் தூங்கிக் கொண்டிருந்தது. கார்த்திகை மார்கழியில் தொடங்கி சித்திரை வைகாசி வரையும் நிரம்பி வழியும் காளி கோயிலுக்கு பின்னாலுள்ள வம்மிக் கேணி குளத்திலிருந்து ஆற்றை நோக்கி அந்த சின்ன ஓடை அசைந்து நெளிந்து ஓடிக்கொண்டிருந்தது. விராலும் பொட்டியானும் தான் மிச்சமாய் கிடக்கும். முன்பென்றால் இந்தக் குளம் முழுவதும் தாமரை நிரம்பி வழியும். இப்ப மருந்துக்குக் கூட தாமரை இல்லை. பகல் நேரத்தில் சிங்களத்தில் பாடியபடி ஆமிக்காரர்கள் நீச்சலடித்துக் கொண்டிருப்பார்கள்.

தள்ளாடித் தள்ளாடியே அவள் வீடு வந்து சேர்ந்து விட்டாள். கதவைத் திறந்து உள்ளே நுழைந்தாள். மணல் பரவிக்கிடக்கும் வீட்டு முற்றத்தில் குந்தியபடியே அழுதாள். வானையும் பூமியையும் வெறுப்பாய்ப் பார்த்தாள். இரண்டு கைகளுக்குமிடையே முகம் புதைத்து விம்மி விம்மியழுதாள். வீட்டையும் முற்றத்தையும் திரும்பித் திரும்பி பார்த்தாள். எத்தனை சைக்கிள்கள்... எத்தனை மனிதர்கள் வந்தார்கள், போனார்கள். இருந்த பிள்ளைகளையும் தின்று கைகழுவிவிட்டு, இந்த வீட்டில் விடிய விடிய அவிச்சுக் கொட்டியவள் அவள். நாடு பிடிக்கிற குடும்பம் என்று கூட ஊருக்குள் பேர் வாங்கியவள். இனி அவளிடம் இழப்பதற்கு கூட எதுவுமில்லை. நன்றி கெட்டவர்கள். எல்லோருமே நன்றிகெட்டவர்கள்.

தலைவனும் ஆமிக்காரனும் ஒருவர் முன் ஒருவராய் அமர்ந்திருந்தார்கள். மேசையில் பிரண்டியும், விஸ்கியும், றோஸ் கோழியும், சிகரெட் பக்கட்டுகளும் கிடந்தன. தலைவன் இத்தனை முரடனாக இருந்த போதிலும் இன்றைய சம்பவங்கள் அவனின் மனதைக் குடைந்தன. அவனின் கண்கள் பனிச்சிட்டன.

இன்று புதிதாய்ப் பிடித்து வரப்பட்டவர்களின் மரண அவஸ்தையின் ஒலி ஆமிக்காம்ப் முழுவதுமாய் காற்றில் எதிரொலித்தது. துயரமாய் கொடூரமாய் இருந்தது. கப்டன் எழும்பினான். லூசாய் இருந்த பெல்ட்டை இறுக்கியபடி நடந்தான். மனிதம் சிதைந்து துயருறும் வேதனை காற்றில் முன்னையை விட இன்னும் கனமாய் ஒலித்தது. சுவரெங்கும் தசையும் ரத்தமும் தெறித்து வடிந்தன. தசைகள் கிழிபட்டன. அந்தக் கொடிய வேதனையிலும் தண்ணீர் கேட்டுக் கேட்டு மயங்கி விழும் முகங்கள், காற்றில் ஆத்மாவின் ஒலிகள் மெல்ல மெல்ல இறுகின.

வேலிகள் ஒன்றுக்கொன்று அவளைப் பற்றி வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டன. வீட்டின் முன்னால் மணல் புதையும் வீட்டு முற்றத்தில் இன்னமும் அவள் அழுது கொண்டிருந்தாள். வீதிகளில் ரோந்து செல்லும் ஆமிக்காரர்கள் பதுங்கிப் பதுங்கி நடந்தார்கள். வீட்டுக்குள் கிடந்தபடியே நாய்கள் வெருண்டு வெருண்டு குரைத்தன. வானத்தில் ஒன்றிரண்டு நட்சத்திரங்கள் தொங்கிக் கொண்டு கிடந்தன.

இருண்டு கிடந்த வானத்தில் தொங்கியபடியே எரிந்து கொண்டிருக்கும் நட்சத்திரங்கள் அவளுக்காகவும், ஆமிக்காம்பின் பின்புறம் ரயரில் சுருண்டு, நெளிந்து கொண்டிருக்கும் மனிதர்களுக்காகவும் நட்சத்திர விழிகளால் விம்மி விம்மி அழுதன. இந்தக் கொடூரங்களையெல்லாம் அவையாவது ஈரேழு உலகமும் எடுத்துச் செல்லுமோ?

எங்கிருந்தோ வந்தவர்கள் உடம்பெல்லாம் கொழுப்பேறிய திமிரில் குதித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தார்கள். கூடவே... போராட்டம் இயக்கம்... அந்த வீடு மட்டும் மூன்று மலைகளைத் தின்னக் கொடுத்த துயரத்தில், மணல் சொரியும் அந்த வீட்டு முற்றத்தில் அழுதபடி துயரங்களுக்கெல்லாம் துயரமாய் அவள் இருந்தாள். இனி ஊரைப் பொறுத்தவரை அவள் ஒரு அனாதை. அந்த வீடும் முற்றமும் இந்த உலகத்தையே வெறுப்பாய் பார்த்துக் கொண்டிருந்தது.

சரிநிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைந்து வழியும் காலங்கள்

"பறத்தெமிலா பறத்தெமிலா" அந்தப் பொலிஸ்காரர்களெல்லாம் இப்படித்தான் அன்பொழுக அழைத்தார்கள். இவனை மட்டுமல்ல தமிழர்களென்ற சந்தேகத்தின் பேரில் இங்கு பிடித்துக் கொண்டு வரப்படும் எல்லாத் தமிழர்களையும் இவர்கள் இந்த நாமம் சூட்டித்தான் அழைப்பார்கள்.

பார்க்கும் போதும், நடக்கும்போதும், முகத்தில் ஓங்கி முஷ்டியால் குத்தும் போதும், சிலநேரம் இவர்களுடைய மனைவிமாரை யோனியும் முலையும் நெரிபட நெரிபட முண்டமாய் கட்டிப் பிடித்துக் கொண்டு தூங்கும் இரவுகளிலும் கூட திடுக்கிட்டுத் திடீரென விழித்தெழும்பி இப்பிடித்தான் அழைப்பார்களோ என்னவோ தெரியாது.

இந்தப் பொலிஸ்காரர்களெல்லாம் பறத்தெமிலா என்றழைப்பதை விட பீய்த் தமிழா என நாமம் சூட்டி அதை இந்த நாட்டின் அரசியல் யாப்பில் இணைத்து இலங்கைத் தமிழர்கள் என்பதற்குப் பதிலாக பீய்த் தமிழன் அல்லது பேய்த் தமிழன் என அழைத்தால் இன்னும் நன்கு பொருந்தும். அந்தளவுக்கு ஒருத்தரையொருத்தர் காட்டிக் கொடுத்து, பழைய டயர்களுக்குப் புதிய வேலை கொடுத்து சுட்டு, எரித்து, பொசுக்கி, அடித்துத் துரத்தி நாசமாய்ப் போன ஒரு புதிய நாகரீகத்தின் தோற்றுவாய்களல்லவா இந்த இனம்.

அழுகிய பிணங்களை அடுக்கி வைச்ச மாதிரியான நாத்தம் இவன், இவனுடன் இன்று புதிதாய்ப் பிடித்து வரப்பட்டவர்களுமாய் சேர்த்து ஒன்பது தமிழர்கள், நான்கு குடுக்காரனுகள், ஒரு பிற்பொக்கற்காரன், ஒரு ஏஜென்சிக்காரன். இத்தனை பேரும் அந்தப் பொலிஸ் நிலையத்தின் சின்ன இரும்புக் கூட்டுக்குள் நிமிரவும், குனியவும், இருக்கவும் இடமில்லாமல் இறைச்சிக் கடையில் கழுத்து முறிக்கப்பட்ட கோழி மாதிரி முழிபிதுங்கி வியர்வை நாற்றம் வழிந்தோட நின்றிருந்தார்கள்.

ஏஜென்சிக்காரன் மட்டும் புறுபுறுத்துக் கொண்டிருந்தான். "லொக்குமாத்தயா ஸ்பெஷல் கோர்ஸ் ஒன்று முடிக்க இந்தியா போய்விட்டார். இல்லாட்டி இந்த ஸ்ரேசன் ஓ.ஐ.சிக்கு நாக்கு வழிக்க வைப்பேன். இருக்கட்டுக்கும் வேசையின்ரை மகன். லொக்கு மாத்தயா இந்தியாவிலையிருந்து வந்தவுடனை முதல் வேலையா யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கிறன். நாயிரமகன் அங்கு போய்ச் சாகட்டும்" என்றபடி ஆவேசமாய்த் திட்டிக் கொண்டிருந்தான்.

ஏஜென்சிக்காரனைப் பார்க்க மட்டும் எந்தத் தங்குதடையுமின்றி நிறையப் பெரிய மனிதர்கள் வந்து போனார்கள். அவர்களில் எல்லா இனமத மனிதர்களும் இருந்தார்கள். ஏஜென்சிக்காரனின் கரங்களைத் தடவி ஒரு குழந்தைக்கு ஆறுதல் சொல்வது போல் எல்லோரும் ஏதேதோ சொன்னார்கள். எல்லாம் கதைக்க வேண்டிய இடத்தில் கதைச்சுப் போட்டம். இரவுக்கு அல்லது நாளைக்கு வெளியிலை வந்துவிடலாம் கவலைப்படாதே என்றனர்.

தமிழ்ப் படத்திலை வாற வில்லன் மாதிரி கம்பிகளைப் பிடித்துத் தள்ளிக்கொண்டிருந்த ஏஜென்சிக்காரனுக்கு கொகோகோலாவும், சுவிற்சும், சோர்டீற்சும், சாப்பாடும், கோல்ட்லீப் பக்கற்றும் நேரம் தவறாமல் வரும். அவன் தின்டு போட்டு மிஞ்சுறதை இவர்களிடம் நீட்டுவான். அதையும் இந்தப் பிற்பொக்கற்காரத் தடியன் ஆருக்கும் கொடுக்காமல் விழுங்கி விடுவான். பார்த்தால் முறைப்பான். "கொட்டியா" எனப் பல்லைக் கடித்துக் கொண்டு அடிக்க வருவான். அதையெல்லாம் வெளியேயுள்ள பொலிஸ்காரர்கள் பார்த்துப் பார்த்துச் சிரிப்பார்கள்.

இரும்புக்கம்பிகளுக்கு வெளியே இடையிடையே ரிப்டொப் உடையில் வந்து போகும் மனிதர்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் துளைத்தெடுப்பார்கள். சுத்தமான யாழ்ப்பாணத்தமிழ் கணீரென்று ஒலிக்கும். அடேயப்பு... மகனே நீ எந்த இயக்கம்டா? என்ன தெரியுமடா? உண்மையைச் சொல்லுடா? அவர்களின் கேள்விகளும் அதட்டலும்...ஈரல் கருகி வெளியே மணக்கும். கூட்டுக்குள் எல்லோரும் மட்டக்களப்பு பில்லி சூனியக் கதைகளில் வருபவர்களாய் கூனிக்குறுகிப் பிரமித்து நிற்பார்கள்.

விடுதலை, போராட்டம், அர்ப்பணிப்பு, தியாகம் எல்லாம் பொய் மாலங்கள் தானா? இவர்களுக்கும் அவர்களுக்கும் இதெல்லாம் எங்கே தெரியப் போகிறது? பிழைக்க மட்டுமே தெரிந்தவர்கள். குருதியிலும், குண்டுகளிலும் சுகம் தேடுபவர்கள். உண்மைகள் அவர்களுக்கெங்கே தெரியப் போகிறது. சொந்த மண்ணை மிதிக்க முடியாத வேதனையில் அன்னியத் தெருக்களில் அலைந்து கொண்டு எத்தனை மனிதர்கள், அவர்களின் உண்மைகள் எல்லாம் இவர்களுக்கு எதுக்கு? பிலாக்காய்ப் பிசினாய் வாழ்வு மட்டும் நீள்வதும் அறுபடுவதுமாய் காலங்கள் தான் கரைந்து வழிந்து கொண்டிருக்கின்றன.

குடுக்காரர்கள் பரலோகத்தில் இருக்கின்ற ஆண்டவருடன் பேசிக் கொண்டிருந்தார்கள். நாலைந்து நாட்களாய் சொர்க்கத்துக்குப் போய் வர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத வெறியும் வேதனையும் அவர்கள் முகத்தில் உறங்கிப் போயிருந்தது. ஒரு வெறித்தனமான ஆக்ரோஷத்துடன் பொலிஸ்காரர்களை இடையிடையே திட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் உடம்புகளில் தசைகளை எக்ஸ்ரேயில் போட்டுத் தேடினாலும் கண்டு பிடிப்பது கஷ்டம். எலும்பும் தோலும்தான் துருத்திக் கொண்டிருந்தன. முகமெல்லாம் பார்க்கப் பயமாய் விகாரமாய் கோணல்மாணலாயிருந்தன. உதடுகள் அருவருப்பாய் தொதல் துண்டுகளைப் போல் கறுத்துத் தடித்து ஊதித் தொங்கிக் கொண்டிருந்தன.

அந்தக் குடுக்காரர்களில் தமிழ் தெரிந்த ஒருவன் இவர்களைப் பார்த்துப் பேசினான்."மச்சான் யாழ்ப்பாணக் கட்டியா தானே?" ஒங்கட ஊர்ல எப்ப மச்சான் கரச்சல் சரிவாற? முந்தி மாதிரி இல்ல மச்சான் வடு இப்ப சரிரேட். கரச்சல் கொஞ்சம் குறைஞ்சா ஒங்கட ஆட்களுக்கும் நல்ல விஸ்னஸ், எங்களுக்கும் வடு ஹொந்தாய் மச்சான். சும்மா சும்மா இவனுகள் சண்டை புடிச்சிக் கிட்டு எங்களுக்குத் தான் கரச்சல்..." கறுத்த உதடுகளிலிருந்து நூலாய் எச்சில் வடிய அவன் பேசிக் கொண்டேயிருந்தான்.

குவித்து விட்ட பிணங்களைச் சரித்துக் கிடத்திய மாதிரி ஒருத்தரையொருத்தர் முட்டிக் கொண்டும், உரசியபடியும் உட்கார்ந்திருந்தார்கள். குடுக்காரன் விட்ட பாடில்லை. எல்லோருக்கும் வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தான். அவனின் வாயிலிருந்து செத்து அழுகி புழு துடிக்கிற எலியின் நாற்றமாய் நெடில் காற்றில் கலந்து கொண்டிருந்தது. எல்லோரும் மூக்கைச் சுழித்தபடி காற்றை வெளியே தள்ளி வெறித்தபடி குந்திக் கொண்டிருந்தார்கள். இதைவிட இந்தச் சின்ன இரும்புக் கூட்டுக்குள் என்ன தான் செய்ய முடியும்.

குடுக்காரனின் உடம்புகளில் மாட்டுக்கு குறி வைத்த மாதிரி கோடுகோடாய் பிளேட்டால் கீறிக்கிடந்தது. அந்தத் தழும்புகளில் சில இடங்களில் அயர்பிடித்துப் போயிருந்தது. அவற்றை விரல்களால் கிள்ளி நசித்து உருண்டையாக்கி அசிங்கம் செய்து கொண்டிருந்தான் அந்தக் குடுக்காரன்.

இடையிடையே பொலிஸ்காரர்கள் கம்பிகளுக்கிடையே எட்டி எட்டிப் பார்த்தார்கள். விழிகளையுருட்டி முறைத்தார்கள். உதடுகளைக் கடித்துக் கொண்டு நடந்தார்கள். இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த இரும்புக் கூட்டுக்குள் உப்பில்லாத பருப்பையும், கல்லுக்குள் கிடக்கும் சோற்றுப் பருக்கைகளையும், சம்பலையும், பாணையும் தேவதூதர்களுக்கு கிடைத்த தேவாமிர்தமாய்க் கம்பிகளுக்கு வெளியே கை நீட்டி வாங்கி இந்த நாற்றங்களையெல்லாம் சகித்தபடி வாயில் போட்டு வயிற்றை நிரப்பி...

மூன்று பக்கமும் சுவர். மேலே உயரத்தில் கொங்கிறீட் போட்ட அடைப்பு. முன் பக்கம் ஐந்து கம்பிகளை நீளமாய் நிமிர்த்தி அதன் இடையே சற் வடிவத்தில் கம்பிகளை இணைத்து வெல்டிங் பண்ணிய கனமான இரும்புக் கதவு கறுப்புப் பெயின்ற் பூசி இருந்தது. வலது பக்கம் இரண்டாவது கம்பியுடன் இணைத்துப் பெரியதோர் பித்தளைப் பூட்டு குறைந்தது. இரண்டு கிலோவாவது இருக்கும். மேட் இன் சைனா என ஆங்கில, சைனிஸ் எழுத்துக்கள் பொன் மஞ்சளாய் பளிச்சிட்டன.

உள்ளேஅந்தக் கரடு முரடான சுவரின் மேல் நிறையவே கிறுக்கல்கள், தமிழ், சிங்களம், ஆங்கிலம் மும்மொழிகளிலும் தேசிய உணர்வு எதிரொலித்தது. ஏதேதோ நிறையவே கிறுக்கல்கள். பேர் ஊர், துண்டு துண்டுக் கவிதைகள், எச்சரிக்கைகள், காதலின் இறுதி அஞ்சலிகள், ஓர் ஆணும் பெண்ணும் கலவியில் ஒன்றிப் போனமாதிரி ஆண்குறி, பெண்குறி மாதிரியான வடிவங்கள், குறியீடுகள், இத்தியாதி, இத்தியாதி. இன்னும் எத்தனை எத்தனை வடிவங்கள். அந்தச் சுவரின் மேனியெங்கும். அதன் மேல் மூட்டைப் பூச்சிகள் குஞ்சுகளுடன் கூட்டம் கூட்டமாய் ஊர்வலம் போயின.

மிருகக்காட்சிசாலையில் இரும்புக் கூட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் மிருகங்களுக்கு இருக்கிற சுதந்திரம் கூட இல்லாமல் தமிழனாய்ப் பிறந்த ஒரேயொரு இனத்துவ முரண்பாட்டுக்காக கிரிமினல் குற்றவாளிகளுடன் இந்தச் சின்ன இரும்புக் கூட்டுக்குள் அடைபட்டு ஒட்சிசன் பிரித்தெறியப்பட்ட நாத்தக் காற்றை உள்வாங்கி, பொலிஸாரின் வசைபாடலுக்குத் தலைகுனிந்து விசாரணையின் போது முகத்திலும் நெஞ்சிலும் விழும் அடி உதைகளை வாங்கி பறத்தெமிலா வேசிக்க புத்தா...

சுவரில் முதுகைச் சாய்த்தபடி உட்கார்ந்திருந்த இவனின் முதுகுத் தோலைக் குத்தித் துளைத்தெடுத்து மூட்டைப்பூச்சிகள் உறவு கொண்டாடின. அசைந்து நெளிந்து அவதிப்பட்டு அடிக்கடி எழும்பினான். எல்லோரும் இப்படித்தான். இந்த அடைப்புக்குள் குந்திக் கொண்டிருப்பதும் மூட்டைப் பூச்சிகள் கடிக்கத் தொடங்கினால் எழும்பிக் கொள்வதும் பின்னர் குந்திக் கொள்வதுமாய் இன்றுடன் பதின்மூன்று நாட்களைக் கழித்து விட்டான். விஷ முள்ளில் உட்கார்ந்தபடி இந்தப் பதின்மூன்று நாட்களும் நரகத்தில் கழிந்து கொண்டிருக்கிறது.

பின்பக்கம் இந்தக் கூட்டோடு இணைத்துக் கட்டப்பட்டிருந்த கக்கூஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பைக்குள் குந்திக் கொண்டு கால்களை விரித்தபடி முக்கிக் கொண்டிருந்தான் அந்தத் தடிப்பயல் பிற்பொக்கற்காரன். அவனுக்கு இன்றுடன் இரண்டு நாட்களாக லூஸ்மோஷன். அடிக்கடி போய்க் குந்திக் கொள்வான். பறக்பறக் என்ற சத்தமும் அழுகின முட்டை மாதிரி நாத்தமும் வரும். ஒழுங்காகக் கழுவிக் கொள்ளாமல் இவர்களுக்கிடையே வந்து குந்திக் கொள்வான். சிலநேரம் நகஇடுக்குகளில் மஞ்சளாய் அது ஒட்டிப் போயிருக்கும். சாறத்தால் துடைத்தபடி ஈரம் பிசுபிசுக்க அப்படியே உட்கார்ந்திருப்பான். இடையிடையே விரலை மூக்கில் வைத்து முகர்ந்து கொள்வான். பார்க்கப் பார்க்கப் பற்றியெரியும். இதுக்குள் இருந்து கொண்டு என்னதான் செய்ய முடியும்?

கொஞ்சநேரம் கழித்து ஒரு பொலிஸ் அதிகாரி வந்தான். உள்ளே இருந்த இருவரின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான். முகத்தை உற்று நோக்கினான். அவர்களுக்கோ பயத்தால் உடம்பெல்லாம் நெளியத் தொடங்கியது. அவனைத் தொடர்ந்து இந்த இருவரின் உறவினர்களும் சிரித்த முகத்துடன் உள்ளே வந்தார்கள். இதுக்குப் பிறகுதான் இவர்களுடைய ஆட்டம் குறையத் தொடங்கியது.

பொலிஸ் அதிகாரி போன பின்னர் இவர்கள் தொடங்கினார்கள். "இங்கு வந்து போறவர்தான் லொக்கு மாத்தயா. எல்லாம் கதைச்சுப்போட்டம், கொண்ணை இரவும் லண்டனிலை இருந்து கோல் எடுத்தவர். எவ்வளவு குடுத்தெண்டாலும் உங்களை எடுக்கச் சொல்லிப் போட்டார். ரெண்டு பேருக்கும் இருபத்தியஞ்சு கேட்டவர். நாங்கள் பத்துப் பத்துத்தான் குடுத்திருக்கம்". அவர்கள் பேசி முடியமுன்னரே ஒரு பொலிஸ்காரன் வந்தான். கணீரென்றசத்தத்துடன் பூட்டு விரிந்து அந்த இரும்புக் கதவு திறந்து கொண்டது. உள்ளே இருந்த அந்த இருவரும் வெளியே போனார்கள். அவர்கள் மறையும் வரை, மீதியாய்ப்போன இவர்களின் விழிகளெல்லாம் அந்த மறைவுவரை உற்று நோக்கின.

இவர்களுடன் உள்ளுக்குள் இருந்த ட்றைவர் கந்தசாமியார் கண்களில் நீர் வடியத் தேம்பித் தேம்பி அழுதார். "மனிசியும் பிள்ளையளும் என்னபாடோ? சாப்பாட்டுக்கு என்ன செய்யுதுகளோ? கோதாரிப் புடிப்பானுகள் ஷெல் அடிக்கிறானுகளோ, பொம்பர்ல வந்து கொட்டுறானுகளோ என்ர புள்ளையள் என்னபாடோ? அதையும் விட எனக்குப் பிணைக்கு ஒப்பம் வச்ச செல்லத்தம்பி மாஸ்ரரை இப்ப எங்கெங்க வச்சிருக்காங்களோ? மனிசன் பங்கர் வெட்டுறாரோ, தும்பு அடிக்கிறாரோ பாவம்". மனிசன் சொல்லிச் சொல்லி அழுதார். வயசு

ஐம்பது இருக்கும். தலையும், மீசையும் நரைத்து கிழடாகப் போகிற இந்தக் காலத்திலை இவரிலையும் சந்தேகம்.

மகனை சவூதிக்கு அனுப்ப வந்தவர், அனுப்பிப் போட்டு வவுனியாவுக்கு ரயில் ஏற வந்தவரை கோட்டை ஸ்ரேஷன்லை வச்சு இவர்கள் ஏற்றிக் கொண்டு வந்து விட்டார்கள். சவூதிக்குப் போக முதல் இதே பொலிஸ்காரர்கள்தான் இவற்றை மகனையும் பிடித்துக் கொண்டு போக இங்கை இருக்கிற ஆரோ இயக்கப் பொடியன்மாரிட்டைத்தான் ஐயாயிரம் ரூபாய் கொடுத்து வெளியிலை எடுத்தவர். அவன் தான் பொடியன் எண்டு பிடிச்சாங்கள் எண்டு சொல்லலாம். இந்த வயசு போன காலத்திலை என்னிலை என்ன சந்தேகம். தமிழனாக இருந்தால் வாயைத்திறந்தால் சந்தேகம். இந்தத் தேசம் எப்படி மாறிப்போயிற்று? இரும்புக்கூடு, பங்கர், பழைய டயர்...

உள்ளுக்குள் இருந்த எல்லோரையும் ஒவ்வொருவராய் அழைத்து இன்றோடு நாலாவது தடவையாக விசாரிக்கத் தொடங்கினார்கள். திரும்பத் திரும்ப பிங்கர் பிரின்ட், போட்டோ எடுத்தார்கள். இவன் நிலத்தில் கைகட்டி இருந்தான். காலுக்கு மேல் கால் போட்டபடி கையில் கறுப்பு வெல்ட்டும், எஸ்லோன் பைப்பும் வைத்து ஆட்டிபடி நாலைந்து பேர் விடாமல் கேள்வி கேட்டார்கள்.

ஊர், பெயர், படிப்பு, பூர்வீகம், கல்யாணம், காதல் முடிய கொழும்புக்கு எப்ப வந்தனீ? இப்ப என்ன செய்யிறாய்? ஏன் வந்தனீ? இவ்வளவு நாளும் என்னென்ன செய்தாய்? கொழும்பிலை எங்கெங்கு இருந்தாய்? எந்த இயக்கம்? இல்லையென்றால் ஏன் இயக்கத்துக்குப் போகயில்லை? வெளிநாட்டில் அண்ணன் தம்பி சொந்தக்காரர்கள் இருக்கிறார்களா? கொச்சைத் தமிழில் ஒருவன் மொழி பெயர்த்தான். அவர்களின் கேள்விகளுக்குப் பதில்கள் வெளிவரத் தாமதிக்கும் போதெல்லாம் எஸ்லோன் பைப்பும், வெல்ட்டும் தாமதியாமல் பதில் சொல்லும். பறத்தெமிலா, வேசிக்கபுத்தா வார்த்தைகள் வந்து நெஞ்சில் எரியும்.

விசாரணையும், வேதனையும் முடிய திரும்பவும் கூட்டுக்குள் அடைபட்டான். கூட்டி வரும்போது அந்தப் பொலிஸ்காரன் இவனிடம் சொன்னான் "லொக்கு மாத்தயாவுக்கு ஒரு சப்போட் குடு, உன்ன ரிலிஸ் பண்ணி விடுவார். இல்லாட்டி டீஓ (தடுப்புக்காவல்) அடிச்சி உள்ள போட்டு விடுவாங்க..." சப்போட்டுக்கு எங்கே போவது? அதுவும் இந்தக் கொழும்பில வெளியில இருக்கும் போது அன்றாடம் பிளேன்ரிக்கும், பாணுக்குமே நாயாய் அலைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் இந்த வாழ்க்கையில், லொக்கு மாத்தயாவுக்கு எப்பிடி சப்போட் குடுக்கிறது. இந்தப் பொலிஸ்காரர்களைவிட இந்தச் சப்போட்தான் நினைக்கவே அவனுக்குப் பயமாக இருக்கிறது.

சூரியன் ஓடி ஒளிந்து இருள் மூடிய நேரம் எஸ்லோன் பைப், வெல்ட் பட்ட இடங்கள் தடித்து சிவத்து வலித்தன. விரல்களால் மெதுவாகத் தடவிப் பார்த்தான். மனசுக்குள் துயரமாய் இருந்தது. கூட்டுக்குள் எந்த வெளிச்சமுமில்லை. முன் அறையில் எரிந்து கொண்டிருக்கும் லைட்டின் வெளிச்சம் உள்ளே பட்டுத் தெறித்தது. பூட்ஸ் கால்கள் கடகடக்க காக்கிச் சட்டையுடன் பொலிஸ்காரர்கள் நடந்து திரிந்தார்கள்.

இன்று புதிதாய்ப்பிடித்து வரப்பட்டவர்கள் உள்ளே முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள். "தம்பி அடிச்சிக்கிடிச்சி ஏதும் செய்வானுகளா? வயலில் வேலை செய்து கொண்டிருந்தாப்போல ரெண்டு வருஷத்துக்கு முந்திப் பிடிச்சுக்கொண்டு வந்து மகசினில வச்சிருக்கிற என்ரை மகனைப் பார்க்க வந்தனான், இப்ப என்னடா எண்டால் என்னையும் புடிச்சி வந்திட்டானுகள். என்ன அநியாயம் தம்பி, நம்மிட இயக்கக் காரப் பொடியளுக்காவது இதெல்லாம் விளங்குறதில்லையா?..." இவனுக்கருகில் இருந்த ஒரு கிழவர் காதோடு காதாய்க் குசுகுசுத்தார். அந்தக் கிழவரைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. இவனுக்கு எதுவும் சொல்ல மனசில்லாமல் தலையை மட்டும் ஆட்டினான் இல்லையென்று.

இன்னும் எத்தனை நாட்கள் இப்பிடியே வாழ்வது? நெரிபட்டு, அடைபட்டு, நசிபட்டு, குளித்து பல்லுத்தீட்டி எத்தனை நாட்கள்? பற்கள் வழுவழுத்தன. உடம்பெல்லாம் வியர்வை படிந்து ஊத்தை ஒட்டிப் போயிருந்தது. மூட்டை கடிக்கும் போது எங்கேயாவது சொறிந்தால் நகத்துக்குள் பட்டைபட்டையாக ஊத்தை உருண்டு திரண்டு ஒட்டிக் கொண்டு வரும்.

மூக்குக்குள் நுழையும் நாத்தமும், வெக்கையும் வயிற்றைக் குமட்டி வயிற்றிலுள்ள எல்லாம் வெளியே வந்து விடும் போலிருக்கும். இவனுடைய றூம்காரக்கிழவன் சுதுபண்டாவும், அந்த நோனிக் கிழவியும்தான் இந்நேரம் இவனைப்பற்றி எதையாவது சொல்லிப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

காஞ்ச பாணைக் கடித்துக் கொண்டிருக்கும் போதெல்லாம் சோற்றுப் பீங்கானுடன் வந்து சிரித்துக் கொண்டிருக்கும் நோனிக் கிழவி தம்பி இப்ப ஒங்கட ஆட்களையெல்லாம் சும்மா சும்மா பொலிஸ்காரன் புடிச்சுக் கரைச்சல் குடுக்கிறான். அங்க இங்க போகாதீங்க சும்மா றூமிலேயே இருங்க. நாங்க

திங்கிறதில ஒனக்கும் தருவம். நீயும் நம்மட புள்ள மாதிரித்தானே என்று அடிக்கடி புத்தி சொல்லும் சுதுபண்டாக் கிழவன் இவனில் மனிதர்களாய் வந்து போனார்கள்.

இவன் உள்ளே இருப்பது தெரிந்தால் சுதுபண்டாக்கிழவனும் நோனிக்கிழவியும் எப்படியும் வந்து வெளியில் எடுத்து விடுவார்கள். அவர்களுக்குத்தான் எப்படித் தெரியும்? அவன் இங்கே இருப்பது? நாலைந்து மாச றூம் காசு கொடுக்காமல் ஓடி விட்டான் என்று மட்டும் நினைக்காமல் விட்டால் போதும் இப்போதைக்கு!

அதையும் விட இவன் ஒவ்வொரு நாளும் காலையில் பேப்பர் படிக்கிற அந்தச் சலூன் விலாசத்துக்கு கோணல் மாணலாய் எதையாவது நொந்து திட்டியபடி கிறுக்கி எழுதிய அம்மாவின் கடிதம் ஒன்றோ இரண்டோ வந்து கிடக்கும் இதைத்தவிர இந்த உலகத்திலை இப்போ எல்லாமே வெற்றிடங்கள் தான்.

இந்த இரும்புக் கூடு மட்டுமல்ல எதிர்த்தெரியும் இந்த உலகம் கூட அவனைப் பொறுத்தவரை ஒரு கொடூரம் தான். துரத்தித் துரத்தித் தோற்றுப் போன உலகமும் சமூகமும், ஒரு பிடி சோறு, இருக்க ஒரு இடமில்லாமல் அழிந்து போய்க் கொண்டிருக்கும் உறவுகள், எல்லாமே பூச்சியம் தான் இதெல்லாவற்றையும் விட இனியும் கூட இருத்தல் என்பது எதுவரை? அந்த கறுப்புக் கம்பிகளுக்கு வெளியே விழிகளை விட்டுத் துளாவினான். சுவரும், லைற்றும், பூட்ஸ்கால்களின் ஒலியும், காக்கிச் சட்டைகளையும் தவிர வேறேதும் தென்படவில்லை. அருகிலிருந்த "சந்தேகம்"கள் குந்தியிருந்தபடியே தூங்கிக் கொண்டிருந்தார்கள். மூட்டைப் பூச்சிகள் குஞ்சுகளுடன் ஊர்வலம் வந்துகொண்டிருந்தன. இதுவும் ஒரு உலகம் தான்.

இவனுக்குத் தூக்கம் வரவேயில்லை. நினைவுகள் குழம்பின. இந்நேரம் இவனுக்காக எந்த எந்தக்கடவுள்களை அம்மா கூப்பிட்டுக் கொண்டிருப்பாளோ? அந்த றூம்கார சுதுபண்டாவும், நோனியும் என்னசெய்து கொண்டிருப்பார்களோ? இவனுடைய வேலி அலரி மரங்களில் தேன் குடிக்கும் மாம்பழக் குருவிகள் இப்பவும் வந்து போகுமோ என்னவோ? அந்தச் சவுக்கம் தோப்புகள் நண்பர்களெல்லாம் எங்கெங்கோ? "மச்சான்" எல்லாவற்றையும் குழப்பியபடி பீடியை நீட்டிக் கொண்டிருந்தான் அந்தக் குடுக்காரன். குறை பீடி இவனின் கைக்கு மாறி புகைநெடி பரவிக் கொண்டிருந்தது.

சரிநிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மஞ்ச வண்ணாக்களும் சில இடைவெளிகளும்

எதையாவது படிக்க நேரும் போதெல்லாம் அல்லது தனிமையில் படுத்துறங்கும் நேரங்களிலெல்லாம் அவனுடைய ஊரும் அந்தப் பள்ளிக் கூடமும், பாக்கு நீரிணைக்கு அப்பால் நீண்டு நிமிர்ந்து உயர்ந்திருக்கும் அந்த சவுக்கம் தோப்புகளும், கால்நடைகளும், அவர்களும், தண்ணீர் மொன்று தாகம் தீர்த்த கம்மாக்கரைகளும் மறைந்தும், மறந்தும், போன அந்த நண்பர்களும் தான் முதலில் ஞாபகத்துக்கு வருகின்றார்கள்.

அவனுடைய பள்ளிக் கூடத்துக் கிறவுண்டைச்சுற்றி நிற்கும் அந்த மஞ்சவண்ணா மரங்கள் என்னமாய் இனிக்கின்றன! அதையெல்லாம் விட அந்தச் சவுக்கம் தோப்புகள் குறுக்கே வந்து நின்று காற்றில் இதமாய் அசைகின்றன. நெஞ்சைக் கீறுகின்ற கனமான நினைவுகள் காலம் முழுவதுமாய், ரத்தங்களாய்க் கசிகின்றன.

மெயின்றோட்டோட சேர்த்தபடிதான் கிறவுண்ஸ். மெயின்றோட்டையும், கிறவுண்ஸையும் பிரித்துக் கோடிழுக்கும் எல்லைக்காவலர்களாய் அந்த மஞ்சவண்ணாமரங்கள். மஞ்சளாய் பட்டை பிடித்து ஒரு ஆள் தொட்டு விடக்கூடியதும், அதைவிடவும் உயரத்தில் கிளைகள் பிரிந்து செறிந்து நிழலாய்க் குடை பிடிக்கும். அந்த மஞ்சவண்ணா மரங்களின் அடியில் குந்தியிருந்தபடி ஐஸ் குடிப்பதென்பது ஒரு தனிப்பிரியம், அலாதி சுகம்.

எத்தனையெத்தனை நண்பர்கள் அந்த விபரம் புரியாத காலங்களில் குந்தியிருந்தார்கள். ஐஸ் குடித்தார்கள், கூடிக் கூடிக் கதைத்தார்கள், பிந்திய மாலைப் பொழுதுகளின் மெல்லிய கருக்கல் வேளைகளில் அந்த மஞ்சவண்ணாக்களுக்குக் கூடக் கேட்காதவாறு குசுகுசுத்தபடி பிரிந்தார்கள். வெவ்வேறு கூடுகளில் தனித்தனியாகவும் கூட்டாகவும் உள்ளிழுக்கப்பட்டு கூடுகளும் கொப்புகளும் பிய்த்தெறியப்பட்டு ஒரு இனிய கனவின் பொய்மைகளில் எவ்வாறு சிதறுண்டு போனார்கள். அழிந்தார்கள். வீழ்ந்தவர்கள் மேலெல்லாம் அழியாத்துயர் வாழ்வின் சுமைகளாகின.

"வாழிய வாழியவே ஞானமறங்கள் ஓங்க சிவானந்தா வித்தியாலயம் வாழியவே". வெள்ளையும் மஞ்சளுமாய் நெற்றியில் விபூதிக் கீறும் சந்தனப் பொட்டுமாய் அந்தக் காலைப் பொழுதுகளின் "டாங், டாங்" எனும் பெல் சத்தத்துக்கு எழும்பியபடி கதிரையையும், மேசையையும் முன்னுக்கும், பின்னுக்கும் இழுத்துத் தள்ளியவாறு கைகூப்பி மாசில் வீணையும் வீசு தென்றலும்பாடி, அரகரமகாதேவி சொல்லி தலையில் மூன்று தடவையோ, சிலவேளை அது அன்றைய மற்ஸ் பாடம் நினைவில் வர மறந்துபோய் நாலைந்து தடவையோ குட்டியபடி வாழிய வாழியவே சிவானந்தா வித்தியாலயம் வாழியவே.

பாடுதலும் படித்தலும் அடிமனசின் ஓரங்களில் வீசுதென்றலாய் இளவேனிலாய் இன்னும் அவனில் இனிக்கின்றன என்றால் கூட நம்பவா முடிகிறது அவனால், இழப்புகளும், தனிமையும், ஆற்றொணாத் துயரும் வந்து, வந்து வாட்டுகின்ற போது.

விளையாட்டுப் போட்டி நடக்கும் காலங்களில் தான் அந்த மஞ்ச வண்ணாக்களுக்கு இன்னும் கிராக்கி. ஐஸ்குச்சிகளுடன் நிழல்தேடி உட்கார்வதில் எத்தனை போட்டி. அதற்குப் பின்அந்த மஞ்சவண்ணாக்களைப் பற்றி யாருமே அதிகமாய்ப் பேசிக் கொள்வதில்லை. அவனையும் மாலை வேளைகளில் வந்து போகும் ஒரு சிலரையும் தவிர.

காலைவேளைகளில் இலைகளிலிருந்து பனித்துளிகள் சொட்டுச் சொட்டாய்க் கொட்ட, கீழேயுள்ளஅறுகம் புற்களில் தும்பைச் செடிகளில் வெட்டுக்கிளிகள் ஊர்ந்தும் தெறித்தும் திரியும். ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்குத் தாவும் அணில் குஞ்சுகளும், கீழே அடிமரத்தில் சாய்ந்தபடி குந்தியிருந்து ஒன்று முடிய இன்னொன்றாய் ஐஸ் குச்சிகளை வாயில் வைத்துக் கடித்துச் சுவைக்கும் அவர்களின் வெள்ளைச் சேட்டின் மேல் பீச்சியடிக்கும் காகங்களும் அந்த மஞ்சவண்ணா மரங்களை சொந்தம் கொண்டாடிய காலங்கள் இனி எங்கே?

பள்ளிக்கூடத்தின் உள்ளேயும், வெளியேயும் சடைமுடி தரித்து ஞானம் கலையாத முனிவர்களைப் போல் காற்றில் இலை சொரிந்தும் சுகந்தம் வீசுகின்ற வேப்பைகளில் இன்னும் எத்தனை நிற்கிறதோ இல்லையோ? எத்தனையெத்தனை வகைப் பட்சிகள். அந்த வேப்பைகளின் உச்சிக் கிளைகளில் உட்கார்ந்து ஓய்வெடுத்து உறங்கிக் கழித்தன. எல்லாமே இப்படித்தான் கனவுகளாய்க் கலைகின்றன.

முந்திரிக் காலங்களில் பாட்டம் பாட்டமாய் வந்து விழும் கிளிக் கூட்டங்கள் பள்ளிக் கூடத்தின் அமைதியைக் கிழிக்கும். கிளிக்கூட்டங்களின் கீ..கீ.. சத்தம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்து வந்து ஓய்வெடுக்கும் காகங்கள், எப்பவாவது வந்திருந்து முக்கிவிட்டுச் செல்லும் செம்பகம், இழுபட்டு இழுபட்டு எதிரொலிக்கும் குயிலின் க்கூ...... பள்ளிக் கூடத்தை முழுவதுமாய் மறைத்து நிழல் சுரக்கும் வேப்பை மரங்களுக்குக் கீழேயுள்ள கட்டிடங்களில் வெள்ளையும் நீலமுமாய் உடுத்து பாடம் கேட்ட ஆயிரமாயிரம் முகங்களில் இன்று எத்தனையை முழுவதுமாய் இழந்தார்கள். துயரில் நனைந்த எத்தினையெத்தினையோ நிகழ்வுகளின் உள்வாங்கல்கள் பட்டமரங்களின் காய்ந்த சருகுகளாய் காற்றில் பறந்தும், கால்களில் மிதிபட்டும், நெரிபட்டும் காணாமல் போயின.

மீண்டும் அந்தப் பள்ளிக் கூடம் தான் ஞாபகத்துக்கு வருகின்றது. பள்ளிக் கூடத்துக்கும் அவனுக்குமான உறவுகள் முற்றாக விரிவடையத் தொடங்கிய நாட்களின் பின்னரான தினவரவுக் குறிப்பேட்டில் பெயர் கூப்பிடும் போது அவனுடைய வகுப்பாசிரியர் சண்முகநாதன் மாஸ்ரரும் சக நண்பர்களும் சில கண மௌனங்களுக்குப் பின்னர்தான் வரவுக் குறிப்பின் பெட்டிகளின் அடைப்புக்குள் பூச்சியம் விழும்.

சில நாட்களின் பின்னர் அந்தப் பள்ளிக் கூடத்தில் எல்லோருக்குமே தெரியத் தொடங்கின. இவர்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பது. ஒவ்வொரு நாளும் பள்ளிக்கு கூட தினவரவுக் குறிப்பில் யாருடைய பெயராவது விடுபடத் தொடங்கும். அப்போதெல்லாம் இவர்களின் பெயர்களுக்கு முன்னால் பெட்டிகளுக்கு நடுவே இடப்படும் சிவப்பு பூச்சியங்கள் பின்னைய நாட்களில் வாழ்வினை இழத்தலுக்கான அபாய அறிவிப்புகளாக இப்போது சிலவேளை அவனை எண்ணத் தோன்றச் செய்கின்றன.

காலக்கெடுதியில் எல்லாமே அபாயவெள்ளங்களாய் வந்து அள்ளிக் கொண்டு போகின்றன. விட்டுச்சென்ற தடங்களும் இன்னும் இருக்கின்றது என்று சொல்லக் கூடிய ஒரு சில துளி நம்பிக்கைகளும் அவனைப் பொறுத்தவரை எல்லாமே கேலிக்குரிய ஒன்று தான்.

இத்தனை விரைவாக இப்படியெல்லாம் நடந்து முடிந்திருக்குமென்று யாருக்குத்தான் தெரியும். அந்தப் பள்ளிக் கூடத்தை விட்டு ஒதுங்கிய நாட்களிலிருந்து ஒவ்வொன்றாய் நினைக்கும்போது அவனில் அக்கினி ஜுவாலைகள் கொழுந்து விட்டெரிவதான ஓர் உணர்வு, இந்தப் பிரபஞ்சத்தின் ஜீவனையே நெரித்துக் கொல்ல வேண்டுமென்றளவுக்கு ஆத்திரம்.

இத்தனை நிகழ்வுகளுக்குப் பிறகும் கொல்லவும், கொல்லப்

படுவதற்காகவுமே வளர்க்கப்பட்ட நாட்களையெல்லாம் எப்படி அவனிலிருந்து ஒதுக்கிவிட முடியும்.

முன்னைய நாட்களிலிருந்த சந்தோஷம், மெல்ல மெல்ல நழுவத் தொடங்கிய போதிலிருந்தே அவனிலிருந்த கடைசி நம்பிக்கைகளும் காணாமல் போயின. திரும்புகின்ற போதெல்லாம் மனித வாழ்க்கை வெற்றிடமாகவே தென்படுகின்ற போதெல்லாம், இந்த உலகம் துண்டு துண்டாய் எரிந்து சாம்பலாகட்டும். இனியும் மனிதர்களை வதைக்கின்ற எல்லாக் கொடூரங்களும் ஒன்றாகவே அழிந்து போகட்டும். ஒன்றுமே முடியாத போதெல்லாம் அவனுடைய ஆத்திரமும் ஆன்மாவும் இப்படியெல்லாம் வேண்டிக் கொள்ளும்.

மீண்டும் மீண்டும் பள்ளிக்கூடம் வந்து அவன் மனசுக்குள் புகுந்து கொண்டது. அவர்களுடைய தெறிப்புகளையெல்லாம் எத்தனை செல்லத் தனமாய் ஏற்றுக் கொண்டது அந்தப் பள்ளிக் கூடம். இருந்தும் மகேஸ்வரன் மாஸ்ரரின் கையிலிருக்கும் பிரம்பின் கனமும், மறஸ் படிப்பிக்கும் கோவிந்தசாமி மாஸ்ரரின் முகமும், கையும் இன்றைய ஆமிக்காரர்களின் அல்லது இயக்கக்காரர்களின் அச்சத்தை அடியொற்றியதாக இருக்க வேண்டும்.

ஒருநாள் இப்படித்தான் கடைசிப் பாடம் பள்ளிக் கூடம் விட இன்னும் கொஞ்ச நேரமே இருந்தது. அவனுடைய வகுப்போட சேர்த்தபடி கிறவல் றோட் சுவர் கிறிலுக்குள்ளால பக்கிலிக் காக்காவைக் கூப்பிட்டு ஐஸ்வாங்கினது யார்? என்ற கேள்விக்கு எல்லாருமே கப்சிப். யாருமே வாய் திறப்பதாக இல்லை. ஒருத்தரையொருத்தர் காட்டிக் கொடுத்து பேர் வாங்கத் திராணியற்ற மனோநிலையில் எல்லாருமே கையைத் தூக்கியபடி கதிரையில் ஏறி நின்றார்கள்.

அன்றைக்கென்று பிரின்சிபல் வரவில்லை. ஒரு கண்டம் கழிந்த திருப்தி இருந்தும் கொஞ்ச நேரத்தில் கோவிந்தசாமி மாஸ்ரர் வந்தார். இன்றைய இயக்கக்காரரின் தோரணையில் அவர்கள் முன் தோன்றினார். அப்பொழுதும் யாருமே வாய் திறப்பதாக இல்லை. சிற்றிசனாகத் தானிருக்க வேணும். வோர்ச்சைக் கழட்டி மேசையில் வைத்தார்.

ஒவ்வொருத்தராய் மேசைக்குக் கீழே தலையைக் குனிந்தபடி நிற்க அரைக்காற்சட்டை பிருஷ்டத்துக்குக் கீழே பின்பக்கத் தொடை தடித்து வீங்கியெழும் வரைக்கும் பூசை முடித்த பெருமையுடன் வோர்ச்சைத் தூக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் கட்டிக் கொண்டு வெளியே போனார். "காவாலிகள் பள்ளிக் கூடமென்றால் பள்ளிக் கூடத்தில் இருக்கிற மாதிரி இருங்கடா. இல்லாட்டி இங்க வராதிங்க அரசங்கட்டப்பாட்டியோட மண் ஏத்தப் போங்க. நாலு காசும் கிடைக்கும். நல்ல கஞ்சாவும் கிடைக்கும். அடிச்சுப் போட்டு கோவிலடி வெட்டையில படுத்துத் தூங்கலாம் சுகமாக..."

வகுப்பில் எல்லோரும் தொடையைத் தடவித் தடவிப் பார்த்தபடி கோவிந்தசாமி மாஸ்ரர் மீது எரிந்து விழுந்தார்கள். "பின்னேரத்தில் கல்லடிப் பாலத்தடிக்கு மீன் வாங்க வருவார். கல்லால அடிச்சு மண்டையை உடைக்காட்டி நான் ஆரென்றுபார்" - மூலையோரமாக நின்றபடி சதீஸ் அழுதான். "காலையில பள்ளிக்கூடம் வரக்குள்ள சந்தியில வச்சி சாணிகரைச்சு எறியாட்டிப் பார்" - உதயன் இன்னும் சத்தமிட்டான்.

ஒவ்வொருவராய் கோவிந்தாமி மாஸ்ரரின் மனைவி பிள்ளைகள் குடும்பமென்று ஆவேசம் கொண்டு பாண்டவர்களாய் உருமாறி அஸ்திரங்களை ஏவிக்கொண்டேயிருந்தார்கள். அதை இப்போது நினைத்தாலும் சிரிப்புச் சிரிப்பாய்த்தான் வருகுது அவனுக்கு. அவர்கள் ஒவ்வொருத்தரின் வருகையின் முற்றுப் புள்ளிக்குப் பின்னரும் மிகவும் கவலைப்பட்டிருப்பார். பின்னைய நாட்களில் ஆற்றங்கரைச் சகதியாய் வாழ்க்கை மிதிபட்டது தான் மிச்சம்.

பள்ளிக் கூடம் விட்டதும் ஓடோடி வந்து முன்னாலுள்ள அந்த அரச மரத்துக்குக் கீழேயுள்ள படிக்கட்டுகளில் குந்தியிருந்தபடி பக்கிலிக் காக்காவிடம் ஐஸ் வாங்கிக் குடித்து வள்ளிப்பெத்தாவிடம் வடையும், கச்சானும் வாங்கிவாயில் போட்டு மென்று பஸ்வரும்வரை காத்திருந்து என்ன சுகமான நாட்கள்.

இப்போது பக்கிலிக்காக்காவும், வள்ளிப்பெத்தாவும் இருக்கிறார்களோ, இல்லையோ தெரியாது. ஆனாலும் இன்றைக்கு முந்திய நாட்களில் சவுக்கம் தோப்புகளுக்குள் வாழ்ந்த போது இரண்டொரு தடவை கனவில் வந்து ஐஸும், வடையும், கச்சானும் வாங்கிய பாக்கியைக் கேட்க வந்ததாக இவன் திடுக்கிட்டு விழித்து எழுந்தான். திரும்பவும் ஒரு தடவை கனவில் தோன்றி "காசுகீசு ஒன்றும் கேட்க வரல்லடா பொடியா! உங்களையெல்லாம் பார்க்கப் பாவமாகக் கிடக்குது அதுதான் பாத்திட்டுப் போவமென்று..." நெற்றிப் பொட்டில் ஓங்கிக் குத்திய மாதிரி ஒவ்வொன்றாய் எழுகின்றன.

அந்தப் பள்ளிக் கூடத்திலிருந்து ஒதுங்கியதற்குப் பின்னரான ஒவ்வொரு நாட்களும் ஒவ்வொரு கணங்களும் நைல் நதியை விட மிக மிக நீளமானவை.

சதீஸ் சைக்கிளை விட்டுப் பாய்ந்தோடி அந்த மஞ்சவண்ணாக்களுக்கு கீழேதானாம் அதை வாயிலை வைத்துக்கடித்து வாயால் நுரை வடிய வடிய அங்கேயே அந்த இடத்திலேயே கண்ணை மூடிக் கொண்டான்.

அந்த ரவுண்டப்பில் பிடிபட்ட இன்னும் ஏழெட்டுப் பேரையும் இந்த மஞ்சவண்ணாக்களுக்கு கீழேதான் உயிருடன் ரயர் போட்டு எரித்த மகாசந்தோஷத்தில் அவர்களின் இருப்பிடம் நோக்கிய அந்தக் கடற்கரையோர இராணுவ முகாமுக்கு திரும்பிப் போனார்கள். அந்த வீதிகளிலெல்லாம் இன்னும் எத்தனை மனிதர்கள் உயிருடன் துடிக்கத் துடிக்கக் கருகியபடி போயிருப்பார்கள்.

தேசத்துரோகிகளென்றும், சமூகவிரோதிகளென்றும் நாமகரணம் சூட்டியபடி இன்னும் யார் யாரையோ அந்த மஞ்சவண்ணாக்களுக்குக் கீழே கொண்டு வந்து போட்டு துப்பாக்கிகளினால் தங்கள் வெறியைத் தீர்த்தவர்கள் போனபின் அந்த மஞ்சவண்ணாக்கள் இலைகளால் காற்று வீசி இரவு முழுவதும் தூங்காமல் பனித்துளிகளால் கண்ணீர் சிந்தியபடி நிற்கும். அறுகம் புற்தரைகளில் நிமிர்ந்தும், சரிந்தும் மனிதர் கிடப்பர். வெற்றுத் தோட்டாக்கள் வாய்பேசாது அருகில் கிடக்கும். அந்த உடல்களின் மீது கட்டெறும்புகளும் இலையான்களும் ஊர்ந்தபடியே திரியும். குமுறியழும் நெஞ்சங்களுடன் அனாதைக் குழந்தைகளும் விதவைப் பெண்களும் வீதிக்கு வருவர். மீண்டும் வரும் இரவுகளையெண்ணி அச்சத்துடன் தலை கவிழும் அந்த மஞ்சவண்ணாமரங்கள்.

இவனோட ஒன்றாகவே பள்ளிக்கூடத்தை விட்டு ஓடிப்போய், எல்லாவற்றிலுமே சலிப்புற்று, அத்தனை நாட்களும் விரக்தியை மட்டுமே உள்வாங்கி நொந்து போய்ப் பின்னர் எதிலுமே தன்னை இணைத்துக் கொள்ளாமல் தனித்து வாழ்ந்திருந்த நடேசுதாசனைக்கூட ஒரு நடு இராத்திரியில் வந்து கூட்டிச் சென்றவர்கள் அந்த மஞ்சவண்ணாக்களுக்குக் கீழேதான் சுட்டுப் போட்டிருந்தார்கள். கொடூரம். மகா கொடூரம்.... யாரைத்தான் நோவது?

குறுகி நீண்ட இந்தக் கால இடைவெளியில் இந்த ஊர் எத்தனை மனிதர்களைத்தான் இழந்திருக்கிறது. ஊரைவிட்டுப் போன பலர் ஊருக்குள் வராமலேயே போனார்கள். பயிற்சி முகாம்களிலும், கடலிலும், காடுகளுக்குள்ளும், டம்மிங்குகளிலும், இயக்க மோதல்களினாலும், எதிரியுடனான யுத்தங்களிலும், இன்னும் எப்படியெப்படியோ அவர்கள் பற்றிய கதைகள் இல்லாமலே போயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழியில் அடம் பிடித்து அடம் பிடித்து ஊற்றுகின்ற அடை மழைமாதிரி யுத்தம் ஓய்வதற்கான எந்தவிதமான அறிகுறியும் அவனுடைய ஊரில் தென்படுவதாக இல்லை. இன்னும் இன்னும் யாராவது புதியவர்கள் வீடுகளை விட்டு வெளியேறி ஆற்றங்கரைகளுக்கு அப்பாலும் தொலை தூரங்களுக்கும் போனார்கள். இராத்திரியில் வருபவர்கள் யாரையாவது இழுத்து மண்டையில் போடுவதும் காலையிலே விழிக்க முதல் தொடரும் சுற்றி வளைப்பு தேடுதல்களின் பின்னர் இராணுவ முகாம்களை நோக்கி நகரும் ரக்குகளின் உள்ளே பிடித்து வைக்கப்பட்டிருக்கும் தங்கள் பிள்ளைகளையெண்ணி கதிகலங்கிய துயரினால் குமுறிக் குமுறியழும் குழந்தைகளும் தாய்மார்களுமாய் நாட்கள் மெல்ல மெல்ல இழுபடும்.

விழித்தெழுகிற ஒவ்வொரு இராத்திரியின் முடிவிலும் ஊர் தன்னுடைய ஆத்மாவின் ஒவ்வொரு இழையங்களையும் இழந்து கொண்டு தானிருக்கும். இப்போதைய இரவுகளில் நாய்கள்கூட வெருண்டு வெருண்டு ஊளையிடுவதேயில்லை. இருட்டத் தொடங்கியதும் எங்காவது சுருண்டு கொண்டு தூங்கி விடுகின்றன. முற்றத்து மாமரத்தில் வந்து விழும் பக்கிள் கண்களையுருட்டியுருட்டிக் கத்திப் பயங்காட்டுவதேயில்லை. பின் வீட்டு வேப்பைகளில் இராத்திரியில் வந்து விழுந்து இலையுதிர்த்தி ஒன்றோடொன்று கட்டிப் புரளும் வெளவால்கள் கூட இரகசியமாகவே வந்து போகின்றன. ஒவ்வொரு இராத்திரியிலும் இராணுவ முகாம்களிலிருந்து கூவியெழுகின்ற ஷெல்கள் ஆற்றுக்கப்பால் போய் விழுந்து அயர்ந்து தூங்கும் குழந்தைகளினது சதையைப் பிளந்து இரத்தம் குடிப்பதான செய்திகளே விடிந்ததும் வருகின்றன.

இந்த மாலை வேளையில் தொடங்கி மனித நடமாட்டம் அடங்கி, ஊரெல்லாம் உறங்கத் தொடங்கும். பள்ளிக் கூடத்துக்குப் பின்னாலுள்ள வெளிகள், கோயில், இறுகப் பூட்டிய கதவுகளின் உள்ளே மனிதர்களை உள்வாங்கிய வீடுகள் எல்லாமே இருளில் நனைந்து தனித்துப் போய்க் கிடக்கும். துவக்குகள் எங்காவது ஓர் திசையில் வேட்டுக்களைத் தீர்த்தபடி அதிர்ந்து ஒலிக்கும்.

கல்லடி முகாமுக்குள் மனித வெறியர்கள் சிரித்தும், கதைத்தும், கும்மாளமடித்தும் கொண்டிருப்பார்கள். நீண்ட நாட்களாக மனிதச் சுவடுகளையே காணாத கடல் பேரிரைச்சலாய் கரைகளோடு முட்டிமோதி அடிபட்டுக் கொண்டிருக்கும்.

அவனும் அவனைப் போல் தனித்து விடப்பட்ட ஒவ்வொரு மனிதர்களும் இந்தப் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு திக்குகளிலும், ஆழியின் உள்ளே தூக்கி வீசப்பட்டதான வேதனையுடன் மழைக்குக் கிளம்பிய புற்றீசல்களைப் போல் அவனும் அவனுடைய நண்பர்களும் ஊரை விட்டுக் கிளம்பிய அந்த நாட்களை என்ன சொல்லுவது...?

கல்லடிப் பாலத்துக்குக் கீழே நிலவு தெறித்து வீழ்ந்து கிடக்கும். இடையிடையே எழும் காற்றின் அசைவுகளில் வாவியில் நிலவு உடைந்து உடைந்து எழும். பாலத்தின் இரு மருங்கும் அசையாப் பிணமாய் சென்றியின் உள்ளே மனிதர்களை விழுங்கும் மிருகங்கள் காத்துக் கிடக்கும். அந்த மஞ்சவண்ணாக்களுக்குக் கீழே ரோந்து செல்லும் ஆமிக்காரர்கள் அல்லது இயக்கக்காரர்கள் யாராவது மனிதர்களைப் பிடித்திழுத்து வந்து... ஓராயிரம் குண்டுகள் ஒன்றாய் வெடித்து சிதறிய குரூர வெறியில் ரத்தம் தெறிக்கும்.

அந்த மஞ்சவண்ணாக்களுக்குக் கீழேதான் குந்தியிருந்தார்கள், கூடிக்கூடிக் கதைத்தார்கள் ஒற்றுமையாயிருந்தார்கள். ஒவ்வொருவராய்ப் பிரிந்தார்கள். பாவம் அந்த மஞ்சவண்ணாமரங்கள் கூட, இந்நேரம் வெடித்துப் பிளந்த அதன் மஞ்சள் பட்டைகளின் உள்ளே கட்டெறும்புகள் ஊர்ந்து திரியும்.

* 1996 ஆம் ஆண்டு சுதந்திர இலக்கிய விழாவில் முதல் பரிசு பெற்றது.

சரிநிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறகும் நாலைந்து வண்ணத்துப் பூச்சிகளும்

உடைபட்டு ஒட்டுண்டு போய்க்கிடக்கும் இந்த மனசுக்குள் அப்படி என்னதான் கிடக்கிறதோ தெரியவில்லை. எந்த அதிர்வுகளையும் தாங்கக்கூடிய வல்லமையும், திடமும் அதுக்கு எப்போது வந்தது என்பது தான் எனக்கு இன்னும் ஞாபகமேயில்லை?

முந்திய ஒரு காலத்தில் மெல்லென அசைதலுக்கும் கரைந்தொழுகி, ஓவென்று அழ எழும் மனசு இப்போது உடைபட முடியா பாறாங்கல்லாய் திரண்டு போனது எப்படி ...

அழுகை விம்மல், கவலை, ஆற்றொணாத்துயரையே பார்த்து சிரித்தோ அல்லது ஒரு சிகரட்டை ஊதித்தள்ளி வீசுவதைப் போலவோ நினைக்கத் தோன்றுகின்ற, அப்படியே நடந்து கொள்ளுகின்ற பக்குவம் எப்படி வந்தது?

சரியை, கிரியை,யோகம், ஞானம், எல்லாம் கடந்தே போன வாழ்தல், இந்த வாழ்தலே ஒரு பொய்மை தானே.?

முகம் திருப்பிச் சிரித்தலிலும், வாய்பிளந்து பேசுதலிலும், அணைத்துக் கடித்து, புணர்ந்தே, எழுதலிலும், வாழ்க்கை உண்டென்பது, எந்தப் பைத்தியக்காரர்களின் உளறல்.....

மாற்றங்கள் என்பது மனித மனங்களுக்குள்ளும், ஓராயிரம் கோடி எண்ணத்துகள்களின் தேக்கங்களின் பரிணாமம் என்பதை எப்படி சொல்ல வைப்பது. தொடர்பில்லாத வார்த்தைகளாய்..... விடுபட்டு போன உறவுகளாய்......

மனசுக்குள் உறைந்து போய்க் கிடக்கிற ஒரு பழைய எஸ்.எம்.ஜி., நைன். எம்.எம்., நாலைந்து தேட்டிசிக்ஸ் கிரனைட், பழைய சாக்கு, நைலோன் கயிறு, பைனைட் கத்தி ...

கட்டியாய் உறைந்த இரத்தம் காய்ந்த சேட்டும் ரவுசரும், கூரிய வாயை இழுத்தபடி கிடக்கும் மண்வெட்டி, கிரவல் மண்ணும் கிடங்கும், சுற்றிச் சுற்றித் திரியும் அந்தப் பேய்கள் எல்லாம் இன்னமும் மனசுக்குள் உறைந்தே கிடக்கின்றன.

மனிதம் தின்ற அந்த சொறி நாய்கள் எங்கே போயின. அந்த நாட்கள் எப்படிக் கழிந்தன. இந்த இத்தனை வருடங்களையும் கொண்டிங்கு வாழ்ந்தேன். இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பதைவிட எதுவுமே இல்லையென்பது யாருக்குத் தான் தெரியப் போகிறது.

கனவுகள் வராத இரவுகளில் நினைத்துப் நினைத்து பார்க்கிறேன். எப்படி எங்கிருந்து வந்தன. அத்தனை கொடூரங்களும்.... எரிமலையின் குமுறல்களுக்குள் முகம் அழுத்தி எரிந்து சாம்பல் ஆகிறேன்.

புழுக்கமும் அவிச்சலும் நிறைந்த அறைக்குள் எதிர்வீட்டு அணையா இரவு விளக்கின் ஒளித்துகள்கள் மட்டும் கதவிடுக்கின் உள்ளால் உள்ளே எட்டிப்பார்த்தன.

கழுத்து மடிப்புக்களுக்கிடையேயும், கவட்டுக்குள்ளேயும் வடிந்து கசியும், வேர்வைத் துளிகள்... சுருண்டும் நிமிர்ந்தும் கவட்டுக்குள் கைபோட்டும் படுத்துத் தூங்கியபடி கழிந்தே போகிற இரவுகள்...

இருள் மண்டி ஊர் உறங்கிக் கிடக்கிறது. கோவிலடிச் சந்தியிலும் சுந்தரண்ணையின்ர கடையடியிலும் குரைத்தோய்ந்த நாய்களின் குரல்கள் மெல்ல மெல்ல மூடிமூடி எழுகின்றன. பசைவாளியும், போஸ்டருமாய் அரைவாசி இரவு முடிந்து போகிறது. யாரும் கதவைத் திறந்தோ, அல்லது ஜன்னல் இடுக்குகளின் ஊடாகவோ பார்க்க அஞ்சுகிற இரவு. நாய்கள் வேண்டிய மட்டும் குரைக்கும். அருகே வந்து வால் ஆட்டியபடியே நகரும். கோயிலடி வெட்டையில் படுத்துத் தூங்குகிற மாடுகள் வாலால் முதுகுரஞ்சி முகம் நிமிர்த்திப் பார்க்கும்.

இன்னும் ஏழெட்டு போஸ்டர்களே மிகுதியாய் இருந்தன. பள்ளிக்கூடச் சுவர் வாசிகசாலையடி, மார்க்கெட், கோயில் மதில், உள்ரோட்டிலுள்ள எல்லாவீட்டு மதில்களிலும் சிவப்பும் மஞ்சளுமாய் இருக்கும். வீசுகிற காற்றில் ஈரம் தெரிகிறது. கோயிலடிச்சந்தியிலுள்ள லைட் போஸ்டில் தொங்கி வழிகிற லைட்டின் ஒளிக்கற்றைகளில் மெலிதாய் சொட்டுகிற பனியின் கசிவு, கண்களுக்குள் விழுகின்றன.

எல்லை வீதியிலுள்ள பள்ளிக்கூடம், ஹனிபாவின் தேத்தண்ணிக் கடை தகரம் மிகுதியாய் உள்ள சுவர்களில் இருக்கிற போஸ்டர்களை ஒட்டிவிட்டு விடிய முதல் வீட்டுக்குள் புகுந்து அயர்ந்து தூங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைய பொழுதில் நிறையவே காத்திருப்புகள் தங்கியிருக்கின்றது. டியூசனுக்கு கட், மதியம் டவுணுக்குள்ள யாழ்ப்பாணத்திலிருந்து புதிதாய் வந்துள்ள அந்த தாடிக்கார அண்ணனைச் சந்திக்க வேண்டும். பின்நேரம் கடற்கரையில் இது பற்றி எல்லோருடனும் நிறையவே பேச வேண்டும்.

இனிவரும் காலங்களில் இவர்களின் மீது எத்தனை பொறுப்புகள், வாழ்க்கை பற்றிய நீண்ட நீண்ட பெரிய கனவுகள். மனசு முழுவதும் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும் சுகம். அவர்கள் எப்படி, இப்படி திடீரென முளைத்தெழுந்தார்கள்? இந்த பிரபஞ்சத்தையே தூக்கி தோளில் சுமக்கிற பலம் எப்படி வந்தது?

உச்சியிலிருந்து நட்சத்திரங்கள் ஒளி சிந்தின. நிலவு உருண்டு திரண்ட மேகங்களால் இடையிடையே தொலைந்து போனது. பம்பல் இருட்டும் மெல்லிய ஒளிகளும் வீதி விளக்குகளும், தெருவோர நாய்களின் உறுமல்களும் வீதியின் குறுக்கே விழுந்து கிடக்கும் மரங்களின் இராக்கால நிழல்களும் அந்த இரவும் அவர்களின் புதிதாய்ப் பிறத்தலின் நண்பர்களாயின.

வரதன் தான் முன்நோக்கி நடந்தான். அவனுடைய கையில் மூன்று பெட்டரிகள் போட்ட டோச் லைற். அவனைத்தொடந்து யோகனின் கையில் நல்லையா மாஸ்டரின் வீட்டில் நாலைந்து நாளைக்கு முன்னர் பறித்தெடுத்த ஷொட் கண். மிகுதியாய் எல்லோரும் பசைவாளியும் போஸ்டருமாய் பின்தொடர்ந்தனர்.

கன்னங்கரேலென்று கிடந்தது இரவு. எல்லோருக்கும் முன்னால் கொஞ்சம். இடைவெளிவிட்டு வரதன். "பொலிஸ்.. பொலிஸ்" அவனுடைய படபடப்பும் அவசரமும் கலந்த தொனியோட சேர்ந்தே எஸ்.எல்.ஆரும், எஸ். எம்.ஜீயும் சீறிப்பாய்ந்தன.

வரதன் அப்படியே விழுகிறான். அவனுடைய கையில் இருந்த டோச் ஒளியைப் பிதுக்கியபடி உருண்டோடுகிறது. நிலத்தில் ஊர்ந்தவாறு யோகன் ஒற்றைக்குழல் ஷொட் கண்ணால் இரண்டோ, மூன்று தடவை எதிரிகளின் திசைநோக்கி வெடிவைக்கிறான்.

அவர்களை ஏமாற்றிய அந்த இரவில் வரதனும் யோகனும் மல்லாந்து கிடக்கிறார்கள்.

நிலமெல்லாம் வடிந்தே காய்ந்து கிடந்தது இரத்தம். டோச் மங்கியது. யோகனின் கையில் இறுக்கியபடி ஷொட் கண் கிடந்தது. பசைவாளியும் போஸ்டர்களும் சிதறுண்டும் கிழிபட்டும் போய்க் கிடந்தன.

பள்ளிக்கூடமும் டியூட்டறியும், ஊரின் ஒவ்வொரு முகங்களும் அவர்கள் பற்றியே பேசிக்கொண்டன. யோகனும் வரதனும் ஏன் இவர்கள் எல்லோருமே ஊரின் எல்லா மனங்களுக்குள்ளும் புகுந்து கொண்டார்கள்.

இவனும் காந்தனும் மதில் தாவிக்குதித்து தசைகிழிபட தப்பினார்கள். ரவியும் சந்திரனும் முரளியும் மெகஸினில் இருந்து கடிதம் எழுதினார்கள். பிறகு கவிதை எழுதினார்கள். இப்படியே வாழ்க்கை உடைபட்டே போயின.

காலம் கடத்தல், வாழ்வின் இறுக்கம் எல்லாம் சேர்ந்தே அலையாய் பெருகி, ஓய்வின்றி தொடர்ந்தன. அந்த இரவு அலையின் உரசலாய் வாழ்வின் மங்கா ஒளியுடன் இன்னும் காலம் கடத்துகிறது.

மழைக்கால இரவுகள் தேம்பித்தேம்பி அழுதன. ஓடைகள் நிரம்பி வடிந்தன. குளங்களில் தாமரையும் அல்லியும் பூத்துக் குலுங்கின. ஆறு கரையையும் தாண்டி வந்தது.

மீண்டும் கடும் கோடை வந்தது. திருவிழாக்கள் குறைந்தன. கோயில்கள் வெறிச்சோடின. பள்ளிக்கூடங்களின் வரவுகள் குறைந்தன.

பண்டிகைக்காலங்களில் பட்டாசுகள் வெடிக்கவில்லை. வண்ண வண்ண ஆடைகளுடனும், சிரித்த முகங்களுடனும் செல்லும் மனிதர்களையும் காணவில்லை. அம்மாக்கள் வீட்டின் மூலைகளில் முகம் புதைத்தழுதனர். பிரேம் போட்ட கண்ணாடிகளில் அண்ணாக்கள் சிரித்தனர்.

தெருவோரச் சுவர்களில் புதிதாய் போஸ்டர்கள் அப்பிக் கொண்டன. தெருவெங்கும் பேய்கள் உலாவின. இடியும் மின்னலுமென கடுங்கோடையாய் இரவுகள் நகர்ந்தன. இரத்தம் பூசிய வீதிகளில் பிணங்கள் எரிந்தன. இப்படியே போயின இந்த நாட்கள்.

நீண்ட இரவொன்றில் மீண்டும் கனவுகள் உடைந்தன. தடதடவென கதவு தட்டப்பட்டது. "கெதர கௌத?" திடுக்கிட்டு எழுந்தான். மீண்டும் பலமாய்த் தட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமும் பீதியும் அவனுள் இறங்கின. கதவைத் திறந்தான். நாலைந்து பேர் ஏ.கே யுடன் உள்ளே நுழைந்தனர். அடையாள அட்டை, பொலிஸ் பதிவு எல்லாம் இருந்தன. கொட்டிக் கிளறினர். பூட்ஸ் கால்களால் உதைத்தே தள்ளிப் பார்த்தனர்.

பொலிஸ் பதிவையும், அடையாள அட்டையையும் ஒருவன் திருப்பித் திருப்பிப் பார்த்தான்.

"கம கொய்த யாப்பணயத?" இவன் எதுவும் பேசவில்லை. சேட்டைப் போட்டுவிட்டு அவர்களுடன் நடந்தான். றூம் விரிந்து கிடந்தது. முன்வீட்டு லைட் வெளிச்சம் உள்ளே புகுந்தது. பக்கத்து வீடுகள் குசுகுசுத்தன. "கொட்டியா கொட்டியா.."

இவனுடன் சேர்ந்து இன்னும் நாலைந்து பேர்களை கூட்டி வந்தார்கள். அந்த சின்ன லேனில் இருந்து பிரிந்து சந்திக்கு வந்தார்கள். அந்த அரச மரத்துக்கு கீழே இன்னும் நிறையப் பேர் சாரத்துடன், சேட் இல்லாமல் பலர், சில பெண்கள் நைட் கவுனுடன் கூனிக்குறுகியபடி நின்றனர். வேறு சில பெண்கள் தங்கள் குழந்தைகளை அணைத்தபடி நின்றார்கள். எல்லா முகங்களிலும் அச்சமும், பயமும் தேங்கி வழிந்தன.

கல்யாண வயசில் லயித்துக்கிடக்கிற பெட்டைகள் மாதிரி அரச மரம் சடைத்து செழித்துக் கிடந்தது. தலைகளின் மேல் காகங்கள் பீச்சியடித்தன. அசையக்கூடாது. அவர்கள் அருகே நின்றார்கள்.

அவன் இங்கு புதிதாய் வந்த போது இந்த அரச மரம் சின்னொன்றாய் இருந்தது. இதன் அடியில் ஒரு பிள்ளையார் தான் சிலையாய் உட்கார்ந்திருந்தார்.

பின்னைய நாட்களில் பிள்ளையாருக்கு என்ன நடந்தது என்று யாரும் அறிய விரும்பவில்லை. ஒன்றில் அவர் எங்காவது ஒரு தேசத்துக்கு புலம்பெயர்ந்து இருக்கலாம். இல்லையேல் அடைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற விடயம் கூட இதுவரை யாருக்குமே அவசியம் இல்லாத ஒன்றாகவே இருக்கிறது. அப்படியான ஒரு அவசரம்.

பிள்ளையாருக்குப் பின்னர் கௌதமர் வந்து அந்த இடத்தை பிடித்துக் கொண்டார். மாலைவேளைகளில் பரவும் விளக்கொளிகளின் ஊடே மௌனம் காத்து கண்மூடி அயர்ந்து தூங்கினார்.

அரச மரத்துக்கு கீழே நின்ற எல்லோரும் ஒரு நீண்ட பஸ்ஸில் அடைக்கப்பட்டார்கள். முன்னேயும் பின்னேயும் ஜீப் வண்டிகள் நகர பொலிஸ் நிலையம் நோக்கி ஊர்ந்தன வாகனங்கள்.

அன்பைப் போதித்த புத்தர் அரச மரத்துக்கு கீழே தனித்துக் கிடந்தார். காற்றில் அசைந்தும் மங்கியபடியும் விளக்கொளி "காகங்கள் அடிபட்டெழுந்தன". புத்தரின் தலையிலும் எச்சம் பிச்சீன. இந்த இரவும் இப்படியே கழிந்தது.

சரிநிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைக்காலம்

மனசுக்குள் கொத்துக்கொத்தாய் வந்து விழுந்தன அந்த மழைக்கால நினைவுகள் ஒவ்வொன்றும். வேலியோரத்து மஞ்சள் அலரிப்பூக்களாய் கிணற்றடி மல்லிகைப்பூக்களாய் மார்கழியில் கடற்கரையோரத்து காயான்பற்றைகளின் உள்ளிருந்து எழும் கார்த்திகைப்பூக்களாய் ஆற்றங்கரை நோக்கி அவசர அவசரமாய் ஓடும் வாய்க்காலோடையின் சளசள சத்தங்களாய் ஓடைக்கரைகளின் ஓரங்களில் குந்தியிருக்கும் கோடைப்பூக்களின் வாசமாய் மனதுக்குள் வந்து இறங்கின அந்த மழைக்கால நினைவுகள் ஒவ்வொன்றும்.

இப்படியென்ன திடீர் திடீரென வந்து கொட்டித் தீர்த்து நனைச்சு நாற்றமெடுக்க வைக்கிற கொழும்பு மழையா அது? மழை என்றால் அதுதான் மழை.

அடை மழையாய் தூறல்களாய் பாட்டம் பாட்டமாய் வந்து ஓவென்ற பேரிரைச்சலுடன் கொட்டித் தீர்த்து கும்மாளமடித்து மனசைப் பிழிந்தெடுக்கும் ஈரமான காற்றின் சுகம், முகத்தில் விழும் தூறல்களின் மென்மை.

கார்த்திகையில் தொடங்கி மார்கழி முழுவதும் முடிந்தும் தையிலும் அடம்பிடிக்கும் அதன் ஆணவம். மார்கழி முழுவதும் ஓயா ல் ஊற்றும், வீட்டுக் கூரைகளின் மேலே சடசடத்து விழும் துளிகள் ஓட்டின் இடுக்கு துவாரங்களினூடே வீட்டின் உள்ளேயும் எட்டிப் பார்க்கும்.

இடையிடையே மழைவிட்டதும் வீட்டு முற்றத்திலும் வெளியேயும் தேங்கியோடும் மழை வெள்ளத்தில் துள்ளியடித்து உடம்பெல்லாம் சொட்டுச்சொட்டாய் ஈரம் வடிய அம்மாவிடம் இன்னொருமுறை அடிவாங்கினால் எப்படியிருக்கும். கிடைக்குமா இனியொரு முறை அந்த சுகங்கள்?

மரங்கள் கிளைகளை முறித்தெறிந்து காற்றை விரட்டும் சடசடப்பு சத்தங்கள் இருண்டு கறுத்து ஓய்ந்து பிலத்து துகள்களாய் பிசிறலடித்து இருள்மேகங்களை பிளந்தெறிந்து கருமேகங்களில் ஒளிபாய்ச்சி என்னென்னமோ மாய்மாலம் காட்டும் வானம்.

சிலவேளை, விட்டுக்கொடுக்காமல் நாலைந்து தினங்கள் தொடர்ந்து ஊற்றிக் கொண்டேயிருக்கும். வானம் பிய்ந்து விடுமளவுக்கு உக்கிரமாய் ஊற்றித்தள்ளும். அந்த நாட்களில் ஊரடங்கி வீடுகளுக்குள் குந்தியிருப்பதில் கூட ஒரு குஷி..

நத்தார் வெள்ளம், காப்பறுக்கிற வெள்ளம், பொங்கல் வெள்ளம் சொல்லி வைத்தால் போல் வருஷா வருஷம் எத்தனை வெள்ளங்கள், குளங்கள் உடைப்பெடுத்து வாய்க்கால்கள் நிரம்பி வழிந்து ஊரெல்லாம் வழிந்தோடும் பொட்டியானும் கெழுத்தியும் கால்களுக்குள் மிதிபடும்.

கிணற்றின் உச்சிவரை நீர் நிரம்பி எட்டிப் பார்க்கும். கையால் நீரை அள்ளி வீச எத்தனை ஆசையாயிருக்கும். கிணற்றடி வாழைகளின் இலைகள் நிலம் நோக்கி சரிந்து கிடக்கும். மாரித் தவளைகள் வாய் திறந்து ஓயாமல் கத்தும்.

கோயிலடி வெட்டையெங்கும் வெள்ளக்காடு நிரம்பிக்கிடக்கும். வில்வமரத்துக்குக் கீழேயுள்ள மண்திட்டுகளில் மாடுகள் போட்ட சாணம் கரைந்தொழுகி குண்டுமணிக்கொட்டைகள் நீரில் மிதக்கும்.

வாசிகசாலையின் வாசலோரத்தில் ஈரம் சொட்டும் குடைகள். 'அமைதி' சிவப்பெழுத்தில் முன்னே தெரியும் வாசகத்தையும் மீறி யமும் மு.க. மாஸ்ரரினதும் மழையினதும் பேரிரைச்சல். அந்த மழையிலும் சுவரில் முதுகை உரஞ்சும் மாடுகள் பின்வீட்டு தென்னையிலோ மாவிலோ உட்கார்ந்தபடி கத்தித் தொலைக்கும் காகங்கள்.

வாசிகசாலைக்கு முன்னாலுள்ள மார்க்கட்டில் படுவான்கரைச் சோழனும் களி அப்பிய மரவள்ளிக்கிழங்கும் ஈரம் சொட்டச்சொட்ட குவிந்து கிடக்கும். விறைச்ச விரல் இடுக்குகளுக்கிடையே அடிக்கொருதரம் பீடியை இழுத்து துடிக்கும் மீனை தூக்கி தூக்கி காட்டியபடி விலை பேசும் சோமண்ணை, வந்து போகும் ஒவ்வொரு முகங்களும் மழையைத் திட்டித்தீர்த்தபடி போகும். கணபதியண்ணையின்ற தேத்தண்ணிக் கடையில கூட்டம் நிரம்பி வழியும்.

வாசிகசாலைக்கும் மார்க்கட்டுக்கும் எதிரேயுள்ள ஓடையில் நீர் நிரம்பி வழிந்து ஓடும். ஊரின் எல்லாப் பக்கமிருந்தும் வழிந்து வருகிற வெள்ள நீர் இதில் கலந்து தான் ஆற்றை நோக்கியோடும்.

ஆற்றுவாழைகளும், நனையாவிராட்டியும், குப்பை கூளங்களும், தேங்காய் மட்டைகளும் இன்னுமென்னென்னவோ எல்லாம் சேர்ந்து கரைகளில் மோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபட்டெழுந்து ஆற்றை நோக்கி ஓடும். அந்த மழையிலும் வோக்கில் ஏறி உட்கார்ந்தபடி அவனுடன் எத்தனை பேர் அதை ரசித்தபடி நிற்பார்கள்.

மழை குறையத் தொடங்கும் நாட்களில் ஆற்றைநோக்கி ஓடும் வெள்ளத்தின் வேகம் குறையும். மழைக்கால மாலைப்பொழுதுகளில் சின்னண்ணனுடன் சேர்ந்து வோக்கில் ஏறியிருந்தபடி தூண்டில் போட்டு மீனுக்காகக் காத்திருந்த நாட்கள்.

முதன் முதலில் சின்னண்ணன் தான் ஊரை விட்டோடினான். அதற்கு பிந்திய நாள்களில் நீண்டதோர் இடைவெளிகளுக்குப் பின்னர் தான் இரண்டொரு தடவை சந்தித்துக் கொண்டோம்.

பெரிதாக ஒன்றும் பேசிக்கொள்ளவேயில்லை. இரண்டொரு வார்த்தைகள் கதிரையில் இருந்த அவனுக்கு முன்னால் குறுக்கும் நெடுக்குமாக குட்டிபோட்ட பூனை மாதிரி நடந்து திரிஞ்சன்.

'இனியென்ன செய்யப் போறாய்' ஒரு கண இடவெளிக்குப் பின்னர் மீண்டும் ' வெளியில போறது தான் எல்லாத்துக்கும் நல்லம்...' இன்னும் ஏதோ சொல்ல எடுத்தவன் சொல்லாமலேயே வெளியில நின்ற அவனின் நண்பர்களுடன் போய்விட்டான்.

குறுக்கும் நெடுக்குமாக அவன் நடந்து திரிந்த போது அவனின் ரீசேட்டின் உள்ளே இடுப்பில் கனமாக ஏதோ தொங்கிக்கொண்டிருந்தது. நைன். எம். எம். ஆகவோ திறி எய்ட்டாகவோ அது இருந்திருக்க வேணும்.

அந்த சில நிமிடநேர சந்திப்புக்குப் பின்னர் அவனைச் சந்திக்கவே முடியவில்லை. எல்லாம் முடிந்து போன மீண்டுமோர் நாளையில் வீட்டிலிருந்து வந்த கடிதத்தில் அவனுடைய போட்டோவும் இருந்தது. அவனுடைய போட்டோவை தாங்கிய முப்பத்தியோராம் நினைவுநாள் பேப்பரில் வந்ததுக்கு பின்னர் தான் அவன் மறைந்து விட்டதாக ஊரில் கூட எல்லோருக்கும் தெரிந்திருக்க வேணும். அவன் இறக்கும் வரையும் அவனுடைய பாதையில் உறுதியாகவே இருந்தான் என்பதை நினைக்கும் போதெல்லாம் உளம் பூரிக்கிறது.

நானும் ஒரு மழைக் காலத்தில் தான் ஓ.எல். எழுதி நாலைந்து நாட்களில் யாருக்கும் தெரியாத ஒரு இரவில் ஊரைவிட்டு பாய்ந்தோடினேன்.

சில ஆண்டுகள் உருண்டோடிய பின்னர் முழுவதுமாய் மாறி இமாலயக்காடுகளில் தவமிருந்தும் ஞானம் கிடைக்காத ஓர் முனிவனைப் போல் வீடு வந்து சேர்ந்தேன் அதுவும் ஒரு மழைக்காலத்தில் தான். மிகவும் சோர்ந்து போய் களைப்புற்றிருந்தேன்.

சில நாட்கள் தான் ஊரிலும் வீட்டிலும் வாழக் கிடைத்தது. அந்த நாட்களிலும் கூட தனியே எங்கே போவதும் கிடையாது. எங்கே போவதென்றாலும் அம்மாவுடன் தான். ஒரு நாள் மாமாவீட்ட போய்விட்டு வரும்போது அந்த வாசிகசாலையின் அருகே நிறைய புதுமுகங்கள் அந்த வோக்கிலும் இன்னும் பலர் அம்மாவைப் பார்த்து சிரித்தார்கள். இவனைப் பார்த்து ஏதேதோ சொன்னார்கள் தங்களுக்குள். அவர்களின் கைகளையும் முதுகையும் அணைத்தபடி 'ஜீ.திரியும் கோல்கொமாண்டவும்' இருந்தன. அந்த மழைக்கால மாலையிருட்டிலும் கூட அவர்களின் முகங்கள் பசுமையாகவே மின்னின.

இப்பவெல்லாம் எப்போதாவது மழை தூறத்தொடங்கினால் அந்த ஞாபகங்கள் தான் முன்னெழுந்து விடுகின்றன. மனிதர்களின் முகங்களைப்போல் இயற்கையும் தன்னை மாற்றிக் கொள்ளத் தொடங்கி விட்டது.

காலம், காற்றைவிட மிக மிக வேகமானதோ? நேற்றின் முகங்கள் ஒவ்வொன்றும் எவ்வளவு விரைவாக ஓடித்தப்புகின்றன.

'ஊரில் இப்ப மார்கழியில கூட மழைபெய்யுற தென்பது எவ்வளவு கஷ்டமாக இருக்குது.' அம்மா அவனைச் சந்திக்க வரும்போதெல்லாம் அடிக்கடி சொல்வாள். வறுபட்ட மணல்தரையாய் ஓடையும் அதன் கரைகளும் கிடக்க இடையிடையே நிற்கும் நாவல்மர நிழல்களின் கீழே ஆடுகளும் மாடுகளும் வாயை மென்றபடி திரியுதாம். இதுவும் அம்மா தான் சொன்னாள்.

மாலையில் கொட்டிய நாற்றமெடுக்க வைக்கிற மழையில் வீதிகளெங்கணும் சேறும் சகதியுமாய்க் கிடக்கிறது. ஒவ்வொரு முடுக்குகளிலும் குவிந்து கிடக்கும் கழிவுப் பொருள்களை நாய்களும் பூனைகளும் அடிபட்டு கடிக்கின்றன. அடிக்கொரு தரம் மூக்கைப் பொத்தி பிதுக்கியபடி அவசரமாய் மீண்டும் உயிரைப் பிடிக்க அந்த நாற்றத்தை உள்ளிளுத்து போகவேண்டியிருக்கும். உயிர் என்றதும் ஊர்தான் மனசுக்குள் பிழிந்தெடுக்கிறது. அடைமழைக் காலங்களைப் போல் இந்நேரம். ஊரடங்கிப் போய்க்கிடக்கும். இடையிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைக்கால இடியைப் போல் பிரளயமென கிளர்ந்தெழும் ஷெல்லும் வேட்டொலிகளும் மனிதர்களைத் தின்னும். ஊரிலுள்ள எல்லா பனை, தென்னை, மரங்களும் வீதியின் சென்றிகளில் அடுக்கிய பிணங்களாய்க் கிடக்கும்.

வேலிக்கரைகளில் பூக்களும் பழுத்த இலைகளும் உதிர்ந்து கிடக்கும். வீதிகளும் கோயிலடி வெட்டையும் வாசிகசாலையும் ஓடையும் வோக்கும் ஆற்றங்கரையும் மனிதர்களைத் தொலைத்து வெறித்தபடி கிடக்கும்.

பிணம் தின்னும் பேய்கள் சென்றிகளின் உள்ளிருந்து எழுந்து உலாவரும். இறுகப் பூட்டிய ஒவ்வொரு வீடுகளின் உள்ளேயும் அச்சமும் துயரும் மனிதர்களை மொய்த்தபடி இருக்கும். கலகலப்பாயிருந்த மனிதர்களின் மேல் கண்ணீரை வாரியிறைத்தபடி காலம் மட்டும் கவலைகளின்றி விரைவாய் நகர்ந்து கொண்டேயிருக்கிறது.

உள்ளிருந்து எழும் ஒவ்வொரு நினைவுகளும் எத்தனை காத்திரமானவை. மண்டை விறைத்து காய்ச்சல்வருமாப் போலிருக்கிறது. நாற்றமடிக்கும் மழைத்தூறல் இனிப்போதும். எங்காவது போய் சுருண்டுவிட வேண்டும்.

தினக்குரல்

துயில் தொலைந்த இரவாகி ...

எல்லாப் பதில்களுமே அவனின் ஒற்றைக் கேள்வியினால் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தடை செய்யப்பட்டிருந்தன. அந்தக்கணங்கள் ஒவ்வொன்றும் ஓராயிரம் ஆண்டுகளை உள்ளிழுத்துக் கொண்டோடின.

கண்களை உருட்டியபடி விரித்தும், நெளித்தும் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை உற்றுப் பார்த்தான். மீண்டும் மீண்டும் கண்களை உருட்டியபடி பார்த்தான். மறுபடியும் கேள்விகள் கேட்காதிருப்பதில் மிக மிகக் கவனமாகவேயிருந்தான்.

அவனுடைய அந்த ஒற்றைக் கேள்வியைத் தவிர, அவனுக்கு வேறெதுவும் தெரிந்திராத ஒன்றாகவோ, இல்லையேல் இப்படியான மன உளைச்சலில் மிகவும் நோய்வாய்ப்பட்ட ஒருவன் ஆகவோதான் அவன் இருந்து வருகிறான் என்பது மிகத் தெளிவாகவே புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

ஒரு சீனக்காரனைப் போல குட்டையாகவுமிருந்தான். நேற்றோ, அதற்கு முதல் நாளோ தான் சேவ் பண்ணியிருப்பான் போலிருக்கிறது. குட்டைகுட்டையாகப் பள்ளங்கள் இருந்தன முகமெங்கும். நாலைந்து வருடங்களுக்கு முன்னரோ அல்லது அதற்கும் இன்னும் முந்திய வருடங்களிலோ தான் அவன் புன்னகையை முழுமையாக மறந்திருக்க வேணும்.

இந்தியன் ஆமியைப் போல இவனிலும் ஏதோ ஓர் நெடி வீசியது. அருகருகே நின்ற போது மூக்குக்குள் புகுந்து அடிவயிறு வரை நுழைந்து அருவருப்பூட்டியது. அவர்களைப் போலவே இவனின் முகமும் இருண்டு கிடந்தது. முரடனாய்... கொலைகாரனாய்... இருப்பதற்கான எல்லாத் தகமைகளுமே இவனிலும் தெரிந்தன.

இடையிடையே தலையில் போட்டிருந்த தொப்பியைத் தூக்கி கையால் தடவிக் கொண்டான். இந்தக் கை எத்தனை மனிதர்களை கொன்றொழித்திருக்கும். எத்தனை ஆயிரம் 'ரவுண்சை' 'ரிகர்' அழுத்தி இந்த தேசமெங்கும் விதைத்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசை பிளந்து, ரத்தம் தெறித்தெங்கும் பரவி, முதலில் சிவப்பாயும் பின்னர் கறுப்பாயும் உறைந்தே மண்மூடி, பூட்ஸ் கால்கள் மிதித்தோ, புதையுண்டோ எரிந்தோ போயிருக்கும். அதே கை தொப்பியை எடுத்து மீண்டும் தலையை தடவிக் கொண்டது.

முகம் உம்மென்றிருந்தது. மூக்கின் நுனியிலும் இரு பக்கங்களிலும் எண்ணெய் பிசுப்பாய் தெரிந்தது. உதடுகள் தடித்தே கறுத்து மென்மை மயற்றிருந்தது. விழிகளால் அறைந்தே வீதி நெடுகிலும் பார்த்தான். இன்னும் ஏதாவது வாகனங்கள் வருகின்றனவா அவன் எதிர்பார்க்கும் யாராவது மனிதர்கள் வருவார்களா?

ஒடுங்கி நீண்டு போகிறது அந்த வீதி இருபக்கமும் மதில் தரித்த வீடுகள், வீடுகளின் உள்ளே அயர்ந்து தூங்கும் மனிதர்கள். உருண்டும் பிரண்டும், நிமிர்ந்தும் கட்டியணைத்தும் இறுக்கியபடியும் இனிதே போகலாம். அவர்களுக்கு அந்த இரவுகள்.

முன்னால் கிடந்த 'முனிசிபல்' குப்பைத் தொட்டி நிரம்பிக் கிடந்தது. மிகுதிகள் எல்லாம் கலந்தே கிடக்கும். குட்டியும் தாயுமென அந்தப் பூனைக் கூட்டம் அச்சமற்று கடித்து பிரண்டு உருண்டு மகிழ்ந்தது.

முந்தி ஒரு காலத்தில் இந்தக் குப்பைத் தொட்டிகள் பச்சையாய்க் கிடந்தன. இப்போது நீலமாயும் இனிவரும் நாட்களில் என்ன நிறம் தரிக்குமோ யாமறியோம். பூனைகளாவது அச்சமற்று விளையாடட்டும்.

கட்டிட நெரிசல்களுக்குள் எல்லாமே மறைந்து போயின. அருகிலும், தொலைவிலும், இன்னும் கொஞ்சம் அருகிலும் எழுந்து பார்க்கின்ற அண்டெனாக்கள், பளிச்சிடும் மின்குமிழ்கள், தலையாட்டுகின்ற ஒற்றைத் தென்னை, பெயர் சரியாகத் தெரியாத இன்னுமென்னென்னவோ மரங்கள் இருளும் ஒளியும் சேர்ந்தே கலந்திருந்தன.

விழிபிதுக்கியபடி வந்த ஓர் ஓட்டோவை மறித்தான். ஆட்டோ றைவர் சிங்களத்தில் பேசினான். அதிலிருந்து இறங்கிய ஒரு தாயும், மகளும், தந்தையும் விழி பிதுங்கியபடி நின்றனர்.

ஓட்டோ வந்த வழியே ஓடித்தப்பியது. அவர்களிடமும் அந்த ஒற்றைக் கேள்வியைக் கேட்காமலேயே பதிலை தேடிக் கொண்டான். முகம் திருப்பி

உதடு கடித்தான். அந்தப் பெட்டையை விழுங்கி விடுமாப்போல் பார்த்தே பெருமூச்செறிந்தான்.

வந்து போகிற எல்லா வாகனங்களையும் நிறுத்தி சோதனையிட்டான். எல்லோரிடமும் அதே ஒற்றைக் கேள்வியை கேட்டே தொலைத்தான். அவன் நின்ற இடமெங்கும் வீதியோர மின்னொளி பகலாய்க் கசிந்தது.

ஒரு கரடிக்குட்டியைப் போல அசைந்தே நடந்தான். பிடுங்கிய எல்லா அடையாள அட்டைகளையும் மடித்து நசித்து புரட்டிப்புரட்டிப் பார்த்தான். வீதியோர மதில் கரையோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எல்லா முகங்களையும் முறைத்துப் பார்த்தபடி நகர்ந்தான்.

நாக்கை தொங்கப் போட்டபடி மாமிசம் தின்னக் காத்திருக்கும் ஒரு வேட்டைக்கார ஓநாயைப் போல வந்துபோற எல்லா வாகனங்களையும் மோப்பம் பிடித்தபடி துருவித்துருவிப் பார்த்தான். அவன் எதிர் பார்த்துக் காத்திருந்தவர்களை இறக்கியெடுத்தான்.

முதலில் அடையாள அட்டையை பறித்தெடுத்தான். அந்த ஒற்றைக் கேள்வியைத் தவிர வேறெதுவும் கேட்காதிருந்தான். மதிலோரம் நிறுத்தி வைக்கப்பட்டவர்களை அவனும், இன்னுமொருவனும் சேர்த்து எண்ணிக் கணக்கெடுத்தனர்.

எல்லோருமாய் முப்பதுக்கு மேல் வரும் பெட்டையள், பெடியள், பெண்கள், வயோதிபர்கள் என எல்லோரும் மௌனம் காத்தனர், மிரண்டனர், அச்சமுற்றனர், சிலரின் கண்ணோரம் ஈரம் பூத்தது. அழுக்குப் படிந்த அந்தச் சுவரில் 'ஒரே தேசம் ஒரே மக்கள்' போஸ்டர் கிழிந்து தொங்கியது.

மரணம் பற்றிய பயம், தொலைதல் பற்றிய பழைய ஞாபகங்களும், ஆறுகள் பிணங்களை இழுத்து வந்து கரைகளில் தள்ளுவதாயும், செவிப்பறைகளில் பேனைகளை வைத்து அறைவதாயும், ஓவென்று அலறுவதாயும்...... எல்லாம் அருகே மிக அருகே தெரிவதாயும் கேட்பதாயும் விளங்கின. கண்கள் பளிச்சிட்டு எல்லாம் குருட்டு மங்கலாகவே தெரிந்தன.

சமாதானம் பற்றியதும் ஐக்கியம் பற்றியதுமான பாடல்கள் ஒரே உச்சஸ்தாயில் எங்கும் ஒலிக்கின்றன. நீண்ட கூந்தலும் கனத்த மார்பகங்களும் கொண்ட பெண்டிரும், ஆடவரும் தெருக்களில் இறங்கி ஆடினர். ஆடைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைந்து களைப்புற்றே விழுந்தனர். கூத்துப் பார்த்த அனைவரும் மார்பு கிழிந்து ரத்தம் கசிந்தோட வீதிகளில் கிடக்கின்றனர்.

மதம் பிடித்த கொம்பன் யானையொன்று பிளிறியபடி வருகிறது. அதன் மேல் ஒரு பழைய பெட்டகம் ஒட்டறை பிடித்து, தூசி படிந்து போயிருக்கிறது. உள்ளே மண்டை ஓடுகளும், எலும்புக் கூடுகளும் கூடவே எல்லாளனைக் கொன்று பழி தீர்த்த பழைய கறள் பிடித்த கத்தியும்...

உச்சிவானில் வானவில் ஒன்று வளைந்து கிடக்கிறது ஏழுநிறமற்று. தொடுவானம் வரையும் குங்குமச்சிவபபாய், குட்டிப் பிசாசின் முகம் தரித்து பார்க்கிறது. அச்சம் கொண்டேகி மேகங்கள் மண்ணில் துண்டு துண்டாய் விழுந்தன.

பூக்களின் தலைகள் தெறித்து வீழ்ந்தன. மரங்கள் அசைவற்று மௌனம் கொண்டன. ஒவ்வொரு மனிதரும் வெடித்து வெடித்து சிதறி வீழ்ந்தனர். மண்ணில் மதம் கொண்ட யானையொன்று வேண்டிய மட்டும் பிளிறியது. அதன் கால்களில் மிதிபட்ட மனிதர்களின் சசையும், ரத்தமும் சேர்ந்தேயிருந்தது.

'யாரும் அஞ்சத் தேவையில்லை, மிரண்டு பதற்றமடையாதீர்கள், குழந்தைகளின் வாய்களிலிருந்து உங்கள் கைகளை எடுங்கள், அழாதிருக்கும்படி கட்டளையிடுங்கள், பொற்காலம் பிறக்கிறதென குழந்தைகளிடம் திரும்பத்திரும்ப கூறுங்கள்.' வானொலியும் தொலைக்காட்சியும் ஓயாமல் கத்தித் தொலைக்கின்றன.

மீட்பர்கள் வருகிறார்கள் வானெங்கும் கிபீரும், எம்.ஐ. 24ம் சுற்றிச்சுற்றி நெருப்புத் துண்டங்களை ஊர்மனைகள் மீது கொட்டித் தீர்க்கின்றன.

கபரக் கொய்யாக்களைப் போல மேடுகளில் ஊர்ந்தும் பள்ளங்களில் வீழ்ந்தெழும்பியும் டாங்கிகள் நகர்கின்றன. ஆட்லெறிகள் வாய்பிளந்து குடிமனைகளை நோக்கியபடி கதறுகின்றன.

சினைப்பர்கள் தொலைதூரம் வரையும் அசைந்தசைந்து வெடித்துச் சிதறுகின்றன. மண்ணில் ஊர்ந்தும், தவழ்ந்தும் குண்டுகளை பொழிந்தபடி மீட்பர்கள் நகர்கிறார்கள். அதிர்ந்ததிர்ந்து குலுங்குகிறது தாய்நிலம்.

புல்டோசர்கள் இடித்து தரைமட்டமாக்கிய வீடுகள், கட்டிடங்கள், கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் மண்ணில் முகம் பதித்து

நொருங்குண்டு கிடக்கின்றன. செடி கொடி மரங்கள் எரிந்தும் கருகியும் வீசும் காற்றில் சாம்பல் கனக்கின்றது.

நிலமும், வானும் புகைமண்டிப் போய்க்கிடக்கின்றன. கந்தக நெடியில் கலந்தே நுகரும் காற்று, குழந்தைகளும், பெண்களும் விம்மி விம்மி அழுதார்கள். டாங்கிகள் நகர்ந்தன. குண்டு வீச்சு விமானங்கள் மீண்டும் மீண்டும் வட்டமிட்டன.

வெறிபிடித்த முகங்களுடன் மீட்பர்கள் வந்தார்கள். கைகளில் துப்பாக்கிகளும், பைனட் கத்திகளும் இருந்தன. குழந்தைகள் முகங்களை திருப்பி விம்மி விம்மியழுதன. வயோதிபர்கள் கையெடுத்துக் கும்பிட்டார்கள். "நாம் உங்களை மீட்பதற்காகவே வந்தோம்" வெறிபிடித்தபடி உரத்துக் கத்தினார்கள். பைனட் கத்திகளில் ரத்தம் தெறித்து வழிந்தது.

இரவுகள் கூனிக்குறுகி நீண்டன. ஊரெங்கும் பேய்கள் உலாவத் தொடங்கின. துவக்குகள் வெடித்து வெடித்து பயமூட்டின. வாழ்க்கை ஒடுங்கிக் கொண்டே போனது. துயரம் மீண்டெழுந்து வடிந்தது.

வீதியைக் குறுக்கறுத்தபடி பிரேக் போட்டு வந்து நின்றது அந்த நீண்ட பஸ் வண்டி. உள்ளிருந்து இன்னும் நாலைந்து பேர் கீழே குதித்தார்கள். கைகளில் ரி-56 மின்னொளியில் பளிச்சிட்டது. இன்று தான் கிறிஸ் போட்டு துடைத்திருப்பானுகள் போலிருக்கிறது.

எல்லாம் மங்கலாய் மெல்லிய மங்கலாய் கரைந்தொழுகிறது. இவ்வளவு நேரமாய் எங்கிருந்தேன். மனசு கனக்கிறது. ஒற்றைக்கால் வலிக்கிறது. துயில் கலைந்த விழிகளுக்குள் கனவுகள் தேங்கிக் கிடக்கின்றன. அந்த இரவிலும் எங்கோ தொலைவில் காகமொன்று தனியாய் கத்தித் தொலைக்கிறது.

ஏழெட்டு நாட்களாய் கொட்டி தீர்த்து இன்று மட்டும் ஓய்ந்து கிடக்கிற வானம். இந்த இரவிலும் பசுமையாய் கிடக்கிறது. மெலிதாய் கருமை படிந்து, நட்சத்திரங்கள் அற்று பெருங் கவலை கொண்ட தனிவெளியாய் வானம்.

சுவரோரம் தடுத்து வைக்கப்பட்டவர்களில் ஒருவர் ஏதோ பேச முற்பட்டார். அந்த ஒற்றைக் கேள்விக்காரன் பல்லைக்கடித்தபடி "வாயை மூடடா நாயே" என்றபடி கையிலிருந்த ரீ-56 இனை லோட்பண்ணி சடாரென இழுத்து அடித்து எச்சரித்தான். ஒரு கணம் அதிர்ந்தபடி நின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்ஸில் ஒன்றின் பின் ஒன்றாய் எல்லோரையும் நெருக்கி ஏற்றினான். உள்ளேயும் வெவ்வேறு இடங்களில் பிடிபட்டவர்கள் நிறையவே இருந்தார்கள். ஈரம் இன்னும் உலராத அந்த வீதியை மிதித்தபடி பஸ்வண்டி பறந்தது

நகரத்தின் நடுமத்தியிலிருந்த அந்த பொலிஸ் நிலையத்தின் முன்பாக பஸ்வண்டி நின்றதும் ஒருவர் பின் ஒருவராய் இறங்கி நகர்ந்தனர். வாசலில் நின்ற ஒரு ஒல்லியான பொலிஸ்காரி இரும்புக்கதவை கொஞ்சம் சிரமப்பட்டே திறந்து விட்டாள். விழித்திருந்ததால் அவளின் முகம் கொஞ்சம் சிவந்தேயிருந்தது. கவலையும் கடுப்பும் தெரிந்தன.. ஆத்திரமேலீட்டையோ புன்னகையையோ காணமுடியவில்லை. சிலநேரம் அவளுக்கு தெரிந்திருக்கலாம் இவர்களெல்லாம்.....

அவளருகே இன்னும் ஒரு பொலிஸ்காரி வந்திருந்தாள்.

அவர்கள் எல்லோரும் சுவரருகே வந்தார்கள். அந்த ஒற்றைக் கேள்விக்காரன் எல்லோரையும் உறுத்தியபடி பார்த்தான்.

எக்காளமிட்டு சிரித்தான்.

அவனைத் தொடர்ந்து எல்லோரும் சிரித்தார்கள். அவர்கள் சிரிப்பின் முன் ஹிட்லரும், முசோலினியும் தோற்றே போனார்கள். பெட்டைகளிடம் பெயர் கேட்டார்கள். இன்னும் ஏதோ கேட்டார்கள்

ஒருவரையொருவர் பார்த்து மீண்டும் சிரித்தார்கள்.

இன்னும் ஒரு பொலிஸ்காரி வந்தாள். கறுப்பாயிருந்தாள், முன்னர் அவள் சிவப்பாயிருந்திருக்கலாம். மயிர்க்கற்றைகள் கலைந்து முகத்தில் பரவியிருந்தன. யூனிபோர்ம் உடம்பை இறுக்கியபடி வெடித்து விடும் போலிருந்தது. குரூரம் தெரியாதபடி எல்லோரையும் பார்த்து மெலிதாய் சிரித்தாள்.

பொலிஸ் நிலையத்தின் முன் அறையில் இருந்த வாங்குகளில் பெண்கள் நெருக்கியபடி இருந்தார்கள். புதிதாய் வந்தவர்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

மற்றவர்களை இரும்புக்கூடுகளை திறந்து உள்ளே தள்ளினான் இன்னொரு பொலிஸ்காரன். உள்ளே கையில் முகம் புதைத்து குந்தியிருந்தபடி

தூங்கியவர்கள் திடுக்கிட்டெழுந்தார்கள். கூண்டு நிரம்பியது. ஒருவரில் ஒருவர் முட்டியபடி நின்றனர்.

கூண்டை இழுத்துப் பூட்டியபடி நகர்ந்தான் அந்தப் பொலிஸ்காரன். கனத்த சுவரும், கொங்கிறீற் அடைப்பும் இரும்புக்கம்பியும் வியர்வை நாற்றமும், புழுக்கமும், அவிச்சலும் எல்லாம் சேர்ந்தே எரிச்சலூட்டின.

"தம்பி உங்களை பஸ்ஸால இறக்கினவங்களோ, வீட்டில வச்சோ...." தெரிந்த முகமொன்று, "என்ன நேற்று காலையில.........இன்னும் வீட்டை தெரியாது ஒருத்தரும் வரல்ல......" எல்லாம் தெரிந்ததும் தெரியாததும் மாதிரி நின்றனர்.

அப்பரை பிடித்து சுண்ணாம்புக்காழையில் அடைத்த போது முதலில் இப்படித்தான் கஷ்ரப்பட்டிருப்பார் போல். மூச்சடைத்து வியர்வையும், புழுக்கமும் உடம்பெல்லாம் வழிந்தோட மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்..... மனனஞ்செய்தது மனசு, அடி வயிறு முட்டி சிறுநீர்ப்பை வெடித்து விடும் போலிருந்தது.

எதிர் றூமில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்கள் மின்னொளியில் பளிச்சிட்டன. சுவரில் தேசியத்தலைவர்கள் கவலையற்றுச் சிரித்தார்கள். பல்லிகள் கீச்சிட்டபடி ஊர்ந்தன. ரெலிபோன் அலறியது. பொலிஸ்காரர்கள் தூங்கி வழிந்தபடி குறுக்கும் நெடுக்குமாக நகர்ந்தார்கள். கூண்டுக்கு வெளியே செருப்புகளும், வெல்ட்டும், ரவலிங்பேக்குகளும் இன்னும் என்னென்னவோ கிடந்தன.

வெளியே பஸ் உறுமிக் கொண்டு போகிற சத்தம் மெதுவாய் கேட்கிறது. ஒரு நாளைய ஓய்வுக்கு பிறகு வானம் மீண்டும் கொட்டத் தொடங்கியது. மழை இரச்சல் சடசடத்துக் கேட்கிறது. அடிவயிறு முட்டிக் கொண்டு வருமாப் போலிருக்கிறது. அவிச்சலும், புழுக்கமும் நிரம்பியபடி, மானுட உயிர்ப்பிற்கான எந்த நம்பிக்கைகளுமற்று இப்படியே கழிந்து போகின்றன இந்தக் கணங்கள்.

தினக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ப்பட புரிதல்

முழுவதுமாய் வெறுமை படிந்து ஒரு மழைக்காலத்தின் வெப்பு வானமாய் பீறிட்டு வழியும் துயரினையெல்லாம் அள்ளியெடுத்து தொடுவானின் உள்ளடங்கல்களில் கொட்டித் தொலைத்துக் கொண்டிருந்தது அந்த மாலைப் பொழுது.

இப்போதெல்லாம் எதனிலும் முழுவதுமாய் உள்நுழைந்து வாழ்க்கை பற்றிய படிப்பினை அறிதல் இல்லையேல் அதனை அனுபவிக்க வேண்டுமென்ற ஆர்வமென்பது துளியளவும் இல்லையென்பதைக் கூட எப்படி உணர்த்துவது?

வெகுகாலத்திற்கு முன்னரே தோன்றி மனப்பெருவெளியெங்கும் உடைந்து கொட்டுண்டு கூட்டிப் பெருக்கிய கூழங்களாய் பெருகிய எதை எதையெல்லாமோ போட்டுப் புதைத்த பெருங்கிடங்காய் உள்நிறைந்து கிடக்கிறது.

ஒருதரமல்ல, பலநூறு தடவைகளுக்கு மேல் பட்டுத்தேறிய அனுபவக் கிடக்கைகள். முழுவதும் முள்தரித்துப்போன நட்புகள். மெல்ல மெல்ல விடுபட்டே தலைகுனியும் துரோக நிகழ்வுகள் அப்பிய முகங்கள் எல்லாம் கனவுகளாகவே இருந்து விட்டுப் போகட்டும்.

காலம் கடத்தலிலும் மூட்டைப் பூச்சிகளைப் போல் வாழ்வினை நசுக்கி மணத்தலிலும் ஆயிரமாயிரம் பொய்களை ஒவ்வொரு வார்த்தையிலும் பூசிமெழுகி வீரம் பேசியதிலும் வாழ்வு கடத்திப் பொய்த்துப் போன நாட்களிடம் என்ன சொல்வது?

வேரிடம் நம்பிக்கையற்றுப் போன பெருவிருட்சங்களின் கோபாவேசங்களாய் எண்ணங்களில் பட்டுத் தெறித்த பார்வைகளில் தோல்விகளும் நம்பிக்கையீனங்களும் சேர்ந்தேயெழுகிறபோது எதைத்தான் உள்ளடங்கல்களில் போட்டு அடைத்து வைப்பது?

துயரங்கள் பீறிட்டு வழிகிற இரவுகளில் மட்டுமல்ல, எல்லாப் பொழுதுகளிலும் எதையோ என்னிலிருந்து இழப்பதாய் உணர்கின்ற போது வீட்டிலிருந்து விடைபெற்ற ஒரு மார்கழியின் ஈரம் கசிகின்ற நாளொன்றின் உடைந்து நொருங்கிப்போன நம்பிக்கைகளை இனி எங்கு பொறுக்கியெடுப்பது?

சைக்கிள் மிதித்து மிதித்து அவர்களைத் தேடி அலைவதே பெரும்பாடாய் இருந்தது ஒரு காலம். என்னிலிருந்த எல்லா முகங்களும் எப்படியோ போயிற்று.

வெட்கித் தலைகுனியட்டும், வேரோட அழியட்டும், வேண்டாம் இனியும் அந்த நட்புகள். மனம் கூனிக்குறுகி விரிகிறது. ஊரில் தொடங்கி அண்டார்டிக்கா வரை இடம் தேடி, தனிமை வேண்டி அலைகிறது.

ஊர் பற்றிய நினைவுகளும் அவர்கள் பற்றிய பிரமைகளும் தோன்றியெழும் போதெல்லாம் வெப்புசாரம் கொள்கிறது. சிலவேளைகளில் வேண்டா வெறுப்பாய் அருவருப்புக் கொட்டுகிறது.

பள்ளிக் கூடத்தில் பாடங்கள் ஓட மறுத்த நாட்கள் புத்தக அட்டைக்குள்ளும் கொப்பி ஒற்றைக்குள்ளும் ஒளித்து வைத்திருந்த பிரசுரங்களை உட்சுற்று வட்டங்களுக்குள் ஓடவிடுவதிலேயே அநேகமான பாடநேரங்கள் கழிந்து போயின.

யாரை யார் விட்டு விட்டு முந்தியோடுவது என்பதிலேயே முழுநேரச் சிந்தனைகளும் நரம்புமண்டலம் முழுவதிலும் சுற்றிச்சுற்றித் திரிந்தன.

"டேய் என்னையும் இந்த 'பச்'சில எப்பிடியாவது அனுப்பிப்போடு." பதினைந்து வருடங்களிற்கு முந்திய ஏதோ ஓர் நாளில் கெஞ்சிக்கெஞ்சி கேட்டது இன்னமும் மனத்திரைகளில் விரிந்தோடிக் கண்முன்னே பளிச்சிடுகிறது.

கொஞ்சம் கொஞ்சமாய் உள்ளே கிளர்ந்த பொறிக்கிடங்கு ஒன்றாய்த் தீப்பற்றிக் கொண்டது. கண்களில் புதிய உலகு ஒன்று பிரகாசமாய் எழுந்தது. நரம்புகள் புடைத்துக் கொண்டு குறுகுறுத்தன.

ரத்தம் வேகமாய் ஓடியது. வெடித்துப் பிளந்துவிடுமாப்போல் இருந்தது. சிலவேளைகளில் யாரையாவது தேடிப்பிடித்து மண்டையில போடவேணும்போல் இருக்கும். ரத்தம் கருஞ்சிவப்பென்பதைத் தொட்டுப் பார்த்தே தெரிந்து கொள்ள வைத்த ஒரு வாழ்க்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலையின் பேரால் நாம் கற்றுக் கொண்ட பாடங்கள் எத்தனை அற்புதமானவை. மின்கம்பங்களுக்கே அழுகையையும் துயரையும் வெறுப்பையும் உண்டு பண்ணி பங்கர்களில், இருட்டறையில் மனிதர்களையும், விஷ ஜந்துக்களையும் ஒன்றாகப்போட்டு அடைகாக்க வைத்த வாழ்க்கை எத்தனை அற்புதமானவை. முழுவதுமாய் இருண்டு போன ஒரு மாலை நேரத்துக்குப் பிந்திய ராத்திரி. ஒருத்தரின் முகம் ஒருத்தருக்கு இதுவெனத் தெரியாத கரிய இருள்.

வங்காள விரிகுடா அலைகளை அள்ளியெறிந்து கரைமுழுவதும் நனைத்துக் கொண்டிருந்தது. உயர எழுந்து உடைகிற அலைகளின் பேரிரைச்சல். வங்காள விரிகுடா எப்போதுமே அயர்ந்து தூங்கியதாய் யாருமே கண்டதில்லை.

கொடூரம் கொண்டு ஆவேசமாய் எழுகின்ற அலைப்படுக்கைகள் தொடுவானின் தொலைதூரம்வரை எழுந்தும் மடிந்தும் கண்ணுக்குள் மறைந்து போகிற கரும் இருள்.

கருஞ்சுழியும் பேரலையும் அறிய முடியா ஆழமும் கொண்டே வயிறு பிளந்து வான் பார்த்தே மல்லாந்து கிடந்து மல்லுக்கட்டும் அதன் பெரும் துயரை யாரறிவார்? அழகென்பர். அற்புதமென்பர். அதையும் மீறி அதன் அலைகள் எழுப்பும் பெருங்குரல் யாரையாவது தொட்டதுண்டா?

கடற்கரையையொட்டிய அந்தத் தென்னந்தோப்புகளுக்குள் தான் 'வகுப்புக்கள்' நடக்கும். மந்திரத்தால் கட்டுண்டுபோக வைத்த அந்த வார்த்தைகள் எங்கிருந்து வந்தன? இப்போதெல்லாம் அவர்கள் எங்கே போனார்கள்?

ஒவ்வொரு வார்த்தையையும் உள்வாங்கி உள்வாங்கிப் பிடிப்புற்று அதீத நம்பிக்கை கொண்டு துரோணாச்சாரியார்களின் முன்னால் மண்டியிட்டு எழுகின்ற ஏகலைவன்களாக கட்டை விரலை மட்டுமல்ல உடலையும் உதிரத்தையும் உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருந்த நாட்கள்.

அந்தக் கடலின் பேரலைகளில் அடிபட்டு, சுவடே தெரியாமல்போன காலடிச்சுவடுகளில் எதுவுமற்று பெருங்குரலெடுத்து அழுகின்றது வாழ்க்கை.

பேரலைகளின் பிடிமானம் தளர்ந்துபோய் குளக்கட்டுகளில் பாசிபடிந்து, ஓடைகளில் நீரவற்றி, ஆற்றங்கரைகளில் செத்து அழுகிய மீன்களும் கவிழ்ந்த தோணிகளும் கரையொதுங்கும். வாசற்படிகளில் தூசுபடிந்து, பூட்டிய வீடுகளின் முன்முகப்புகளில் ஒட்டறைபடிந்து சிலந்திக் கூடுகள் தொங்க, வெளிறிய முற்றத்து மணல்மேல் சருகுகள் நெரிபட, தீண்ட உயிர்தேடி கருநாகங்கள் நுழையும்வரை.... எல்லோரும் எங்கே போனோம்?

விடுபட்டோம், விதைகளில் விஷம் பூசி ஒருத்தரில் ஒருத்தர் தொட்டுப் பார்த்தோம். உடன்பிறப்புகளின் ரத்தம் சுவையென்றோம், எரியும் டயர்கள் அழகென்றோம். எப்படிப் போயிற்று எங்கள் வாழ்க்கை? வாசலில் மழைக்குக் கொட்டிய பூவும் பிஞ்சுமாய் உதிர்ந்துபோயிற்று வாழ்க்கை.

என்ன நடந்தது? எல்லாம் வியப்பாகவே இருக்கிறது. உயிரின் நுனிவரையும் வேதனை வழிகிறது. இயலாமையின் நெகிழ்வுகளும், சுமைகளின் அழுத்தங்களும் எதிரும்புதிருமான மாற்றீடுகளின் பொய்மைகளும் எல்லா முன்னிகழ்வுகளும் தவறின் கசிவுகளாய் மேய்ப்பர்களால் வெட்டித்தறிக்கப்பட்ட மந்தைகளின் உயிர் ஒடுங்குதல்களாய் உள்நுழைகிறது.

தொண்டைக் குழியில் நீரவற்றி எழுகிற வறண்ட வார்த்தைகளிலும் இன்னும் நம்பிக்கை கொள் என இனியாகிலும் யாரும் சொல்லாதீர்கள்.

இப்படித்தான் அநேகமான நாட்களில் உள்மனசு இன்னும் இன்னும் அடைத்துக் கொண்டே போகிறது. முகம் இறுகிக் கடுப்பாகிறது. எதிர்ப்படும் எல்லாமே பழைய ஞாபகங்களின் கொடுக்குகளாய் எதிர்கொள்கிறது.

சிரித்துக் கலகலப்பதென்பது சுகமான விடயமெனிலும் எல்லா நாட்களிலும் முடிவதில்லை. ஆதிக்கம் கொள்ளும் நினைவுகளின் கணங்கள் எதிர்மாறானவையாகவே சுழல்கின்றன.

எத்தனையெத்தனை ஆயிரம் முகங்கள்? எல்லாம் எங்கே போயின? நம்பிக்கை கொண்டு வாழ்வின் முகங்களில் மரணத்தை எதிர்கொண்டு, நம்பிக்கைகளின் மேல் தீரா அவா கொண்டு, இழந்துபோன முகங்களை எப்படி எம்மிலிருந்து பிரிப்பது? நரம்பு மண்டலங்களின் உள்சுற்றில் ஓடிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு குருதித் துணிக்கைகளிலும் அந்த முகங்கள் அடைகாத்துக் கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைகளையும் உடைத்துக் கொண்டு ஓடுகின்ற பெருவெள்ளத்தின் ஆவேசமாய், எதிர்ப்பட்டதையெல்லாம் இழுத்துக் கொண்டோடிய கலங்கிய நீராய் அந்தக்கால வெள்ளம் வேகமாய் ஓடிற்று. உயிர்தப்பி கரைகளில் கிடந்து துடிக்கும் மீன் குஞ்சுகளின் ஞாபகங்களாய் எதைச் சொல்வது?

இயல்பாகவே வரம்புகளை மீறி உடைத்துக் கொண்டு கொட்டுகின்ற ஒரு கோடைகாலத்தின் கடும் மழையாய் உள்இறங்கிய நினைவுகளின் வெப்பம் பீறிட்டுக் கிளம்புகிறது.

உடைதலால் அடங்கிப் போகின்ற குரலின் உச்சஸ்தாயி அடங்கிப் போய், உயிரின் ஆன்மா களைப்புறுகிற இறுதி நேரமா இது எனக் கொள்ள முடிகிறது.

தேகம் முழுவதும் துணுக்குற்று உடல்முழுவதும் வியர்த்துக் கொட்டுகிறது. கமக்கட்டுகளிலும் கழுத்து மடிப்புகளிலும் வெப்பிசாரமாய் வியர்வை ஊற்றாய் வழிகிறது.

மயிர்க்கணுக்கள் ஈட்டிகளாய்க் குத்திட்டு நிற்கின்றன. உடல் முழுவதும் அனல் பரவுகிறது. இதயம் அடித்துக் கொள்கிறது. கண்கள் தப்பிக் கொள்ள முடியா குரூரமொன்றின் துயரையும் அச்சத்தையும் தவிப்பையும் உள்வாங்கி அசைவற்றுப் போயின. நாவறண்டு உதடுகள் காய்ந்து ஒட்டிக் கொள்கின்றன.

இப்படித்தான் இருந்தது அந்தக் கணங்கள் ஒவ்வொன்றும். வேட்டை நாய்களின் கோரப்பிடி. பற்களில் கிழிபட்டுடைமும் தசையும் வழியும் ரணமுமாய் ஆன்மா தவிக்கிறது.

கண்பொட்டுக்குள் இன்னமும் அப்படியே உருகி வழிகிறது. அந்த ஒற்றை அலரிக்குக் கீழே சைக்கிள் சாத்திக்கிடக்கிறது .

மங்கல்பொட்டாய் முகம் தெரிகிற மாலைநேரம். மேசை விளக்கொளியில் படித்துக் கொண்டிருந்த அவனைச் சைகை கொடுத்துக் கூப்பிட்டு வெளியே வந்து ரகசியம் பேசி தொலைந்து போன நாள் இன்னமும் கண்ணுக்குள் நினைவழியாத் தடங்களின் ஞாபகங்களாய் நீள்கிறது.

பஸ்ஸில் ஒருநாள் பொழுது கழித்து தெரியா ஊர்மனைகளின் ஒதுக்குப்புற மறைவிடங்களில் பேர் மாற்றி ஊர்மாற்றி வாழ்வின் முகங்களில் பொய்புனைந்து அவனும் நானும் பிரிந்தோம்.

கட்டையாய் முடிவெட்டி, முகம் இறுகி, தசை முறுக்கேறி, முழங்காலும் முழங்கையும் அரைபட்டு, தோல்கிழிந்து, தசைநெரிய, கருவேலங்கட்டைகளின் நிறமாய் சரீரம் மாறிப்போன ஒரு அரைவருடத்தில் சந்தித்துக் கொண்டோம். பழைய நட்பையும் பழைய பெயரையும் உருமாற்றிக் கொள்ள பெரும் பிரயத்தனப்பட்டோம்.

முகம் தெரியா இருளில் வழிகிற பனியில் உடல் நனைய ஓடி ஓடிக் களைப்புற்றோம். கிறவல் மணல் தோல்கிழித்து தசையில் ஒட்டிக் கொள்ள முகத்தில் கொட்டுகிற பனி மறைந்து வியர்வை நெடி உள்நுழையும்.

பகல் பொழுதுகளில் வகுப்பு நடக்கும். மக்சிம் கோர்க்கியும் தல்ஸ்தோயும் படித்தோம். சில நேரங்களில் நிரம்பி வடிந்தும் சிலநேரங்களில் கணுக்கால் தொடுகிறவரையும் ஓடிக்கொண்டிருக்கிற காட்டாறுகளில் உடல்நனைத்தும் நீரின் பீச்சல்களில் இழுத்துக் கொண்டோடுகிற குறுணிக் கற்களும் வெண்மணல் துளிகளும் உரஞ்சிக்கொண்டு நழுவும்.

மகிழ்ச்சியும் உறுதியும் மனப்பிரவாகமெங்கும் பளிச்சிட்ட நாட்கள் ஓடிமறைந்து பழைய குற்றங்களின் நம்பிக்கையீனங்களின் வெறுப்பூட்டல்களாய் ஒவ்வொரு கண நினைவுகளும், கொத்திப் பறக்கிற காகங்களாய் கண்ணுக்குள் எழுகின்றன.

ஓடிக்களைத்து உருண்டு பிரண்டு எல்லாம் முடிந்து, கடலை கொறித்து, சர்க்கரையோடு கடித்துக் கொண்டு தேத்தண்ணி குடித்துக் கொஞ்சம் களைப்புத் தணிந்து, மீண்டும் எல்லோரும் ஒதுங்கிக் கொள்ள, சற வடிவில் வெட்டிய பங்கர், இரு பக்கமும் சிதறிக் கிடக்கும். காட்டுக் கொடிகள் இலையுதிர்த்தி அங்கொன்றும் இங்கொன்றுமாய் நிற்கும் கருவேல மரங்கள். கண்ணுக் கெட்டிய தொலைவு வரையும் ஓடி மறைகிற, சிற்றாறு புழுதி பறக்கிற காற்றில் செம்மண் தூசுகள் சருகோடு சேர்ந்தே பறக்கும்.

பங்கருக்குள் பாய்ந்து இறங்கிய அவன் எதிரிகளை எவ்வாறு எதிர்கொண்டு தாக்குவது என விளக்கினான். எதிர்ப்புறமும் பின்பக்கவாட்டிலும் எதிர்கொள்ளும் எந்தத்திசையெனிலும் எதிரிகளை எவ்வாறு இனங்கண்டு தாக்குவது என்பது பற்றி செய்து காட்டினான்.

பங்கருக்குள் பாய்ந்து உருண்ட அவன் மீண்டும் எழுவதற்கு அவகாசமில்லாத கணங்களில் பங்கருக்குள் இருந்து பலத்த சத்தத்துடன் கருந்தீப்பிளம்பாய் பெரும் புகை கிளம்பியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் புகையும் கந்தக நெடியும் செம்மண்புழுதியும் மண்ணும் சேர்ந்தேயெழ செவிப்பறைகள் பிளந்தன. நிலம் அதிர்ந்து குலங்கியது. ஆயிரமாயிரம் எண்ணங்களில் துளிர்கொண்ட ஒரு வாழ்வு ஒரு சில கணங்களில் முடிந்து போயிற்று.
இருகைகளும் பிய்த்து வீசுண்டு முகமும் கழுத்தும் கிழிபட்டுத் தசைகள் தொங்க தேகம் முழுவதும் ரத்தம் கொட்ட செம்மண் புழுதியில் அவன் கிடந்தான்.

சுற்றி நின்ற எல்லோரும் ஓவென்று அலறிப்பிடித்துப் பாய்ந்து விழுந்து அவனைத் தூக்கிக் கொண்டோம். கந்தக நெடியும் கரும்புகையும் கண்ணுக்குள் புகுந்து இருண்டு கொண்டு வந்தது. எல்லோருடைய உடம்பிலும் சின்னக்கீறல்கள் என்ற எந்த உணர்ச்சியுமற்று அவனிலேயே முழுமனது கொண்டிருந்தோம்.

கரும்புகை மேலே மேலே போய் வானெங்கும் படிந்து போயிருந்தது. கிழிபட்ட தசைகளில் இருந்து கருஞ்சிவப்பாய் ரத்தம் கொட்டியது. தலைமயிர் முழுவதும் கருகிப் போயிருந்தது.

அவனுடைய ஒற்றைக் கண் மட்டும் லேசாய் திறந்திருந்தது. ஏதோ பேசவேண்டும் போலிருந்திருக்கும். வாயைத் திறந்து பிரயத்தனப்பட்ட போதெல்லாம் குபுகுபுவென கருஞ் சிவப்பாய் ரத்தம் கொட்டியது.

சற்று நேரத்திற்குள்ளேயே அந்த ஒற்றைக் கண்ணையும் மூடிக் கொண்டான் காந்தன் என்ற ஆதம்பாவா ஷாஜகான். அந்தக் கணங்களில் கரும்பாறையாய் திரண்டு போயிருந்த மனசு வெடித்துப் பிளந்து துயர்கொண்டது.

கருவேல மரங்களுக்கும் பற்றைக்கொடிகளுக்கும் சற்றே தள்ளியுள்ள பெருவெளியொன்றில் அவனைப் புதைத்த போது வானம் இருண்டு கிடந்தது. அந்த இரவுகளில் யாரும் தூங்கியதாய் ஞாபகமில்லை.

திசையற்று சிறுகுருவிகளாய் சிதறுண்டு கலந்தோம். அவனை நினைக்கும் போதெல்லாம் சோனிகளைத் துரோகிகளென்று சொல்லும் இந்நாளொன்றில் வெட்கித் தலைகுனிய இறுகிய மனப்பெருவெளி வெடித்துச் சிதறிவிடுமாப்போல் கனம் கொள்கிறது.

உள் நிறைந்து கிடக்கும் அவனின் நினைவுகளை ஒவ்வொன்றாய் அசை போட்டுப் பார்க்கும் போது மனசு வெட்கித் தலைகுனிகிறது. துயர்கொண்டு காலம் நழுவுகிறது.

பேரலையெனப் பெருந்துயர் கொண்டு மனப்பெருவெளியெங்கும் வங்காள விரிகுடா கருஞ்சுழி கொண்டேயெழுகிறது.

யுகம் மாறும் (லண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றாய் இன்றும் ...

இந்தப் பிரபஞ்சத்தின் எங்கோ ஒரு தொலைவில் பரந்த வெளிகளையும் பெரும் மலைகளையும் நீண்ட ஆறுகளையும் அலையெழுப்பியெழுப்பி அகோரமாய் மீண்டும் மீண்டும் துள்ளியெழும் ஆழமறியா சமுத்திரங்களையும் தாண்டி நிச்சயமற்ற நீண்ட வெகு தொலைவில் மூர்ச்சையுற்று கொஞ்சம் கொஞ்சமாய் அழிந்து கொண்டு போவதான அதே உணர்வுகள் அவனின் மனப்பெருவெளியெங்கும் விஷமாய் ஊறத் தொடங்கின.

பெருமரங்களிலிருந்து சருகுதிர்த்தும் மாலை நேரக் காற்றாய் ஒவ்வொரு நினைவுகளும் கழன்று விழுகின்றன. விழுகின்ற ஒவ்வொன்றும் மீண்டும் எப்படி ஒட்டிக் கொள்ளும்? எதை விடுவது எதை மறப்பது? எல்லாம், எல்லாமே அவனில் செட்டை கழட்டிய நினைவுகளே.

வாழ்வின் முகங்களில் கறுப்புத் துணிகளைக் கட்டிக் கொண்டு இன்னும் எத்தனை காலம் இப்படியே வாழ்ந்து கொண்டிருப்பது? கும்மிருட்டில் எட்டாப் பெருவெளியெங்கும் தேடல்களும் நம்பிக்கைகளும் அருகிக் கொண்டே போவதான மனப்பிரமை பிரவாகித்தெழும். மன அழுத்தங்களின் விரிசல் எல்லாம் சேர்ந்தே எழ கண்களை மீண்டும் இறுக மூடிக் கொண்டான். கனவுகள் உள்ளே நுழையட்டும்.

இந்தப் பிரபஞ்சத்தையே தன்னுள் ஒடுக்கி சுருட்டி வைத்திருப்பதான மயக்கம் கலந்த உணர்வு. எத்தனை எத்தனை ஆயிரம் முகங்கள். கோடிக்கணக்கான நினைவுகள். சல்லடை போட்டுத் தேடியும் கிடைக்காத அரிய பொக்கிஷங்கள். அந்தரங்கமான உணர்வுகள். அசிங்கமாய் குரூரமாய் தூண்டல் பேறின் முடிவிலிகளாய் இன்னும் இன்னும் விளைந்து கொண்டேயிருக்கின்றன.

வாழ்க்கை மட்டும் வற்றாத நதியைப் போல, வளைந்தும் நெளிந்தும் ஓடிக்கொண்டேயிருக்கிறது. அது சுமந்து கொண்டோடும் குப்பை கூழங்களையோ இலைகுழைகளையோ குச்சிகளையோ இல்லையேல் அசிங்கங்கள் பற்றியோ யார் தான் கவலைப்படுவர்? நதி தடவிய கரைகளில் முளைத்தெழும் பசும் புற்களை கொறிப்பதற்கு வரும் ஆடுமாடுகளைப் போல் யார் யாரோ வந்து போனார்கள். வாழ்க்கை மட்டும் இன்னமும் அப்படியே...

இப்போதெல்லாம் அவனுக்கு எதையாவது எழுத வேண்டுமென்றால் கூட முடிவதில்லை. மிக மிக சிரமப்பட்டே... அதுவும் எதையாவது கிறுக்கி விட்டு ஒரு முறையேனும் திரும்பிப் பார்க்காமலேயே கசக்கியோ கிழித்தோ வீசிவிடுவதென்பது பிரியமில்லாத விடயமெனினும் அப்படித்தான் செய்ய முடிகிறது.

கனவுகள் எப்படி இப்படி திடீர்திடீரென வந்து போகிறது? ஆழ்மனதின் அடியில் படிந்து போயுள்ள நினைவுப் பதிவுகளின் தூசுதட்டல்களா? எதாகவோ இருந்து விட்டுப் போகட்டும். ஏன் சிவாண்ணை திடீரென வந்து போனார்? எல்லாம் மயக்கமாகவே இருக்கிறது.

இன்னும் கொஞ்ச நேரம் இருந்திருந்தால் எவ்வளவோ விஷயங்கள் பேசியிருக்கலாம். ஆனால், அவன் எப்போதோ நினைத்த, கேட்க வேணுமென்று மண்டையைப் போட்டுக் குழப்பிய எதையுமே அவரிடம் கேட்க முடியாமல் போய் விட்டதே. அவர் கூட அதைப்பற்றி எதுவும் சொல்லவில்லையே? யாருக்கு அவசரம் அவனுக்கா இல்லை அவருக்கா?

மீண்டும் கண்களை இறுக மூடிக் கொண்டான். கனவுகள் வராதா? சிவாண்ணை வரமாட்டாரா? மறுபடியும் தூக்கம் வந்து கனவுகள் வந்தால் கூட சிவாண்ணையிடம் கேட்க வேண்டிய கேள்விகளையும் பதில்களையும் சொல்லாமலும் கேட்காமலுமே போய் விடுவாரோ என்ற குழப்பமே அவனைத் தூங்க விடாமல் தடுத்தன.

எப்ப கேட்டாலும் அவனுக்கு இல்லையென்டு சொல்லாமல் தர்ர பொணிக்ஸ் நீலநிறச் சைக்கிளை உருட்டிக் கொண்டு வாறார். தம்பி டேய் எழும்புடா... மதில் கரையோரம் சைக்கிளைச் சாத்திக்கொண்டே குரல் கொடுக்கிறார்.

கலைந்து கிடந்த பெட்சீற்றால் உடம்பு முழுவதையும் மறைத்தபடி கவட்டுக்குள் கைபுதைத்து சரிந்து படுக்கிறான் இவன். "டேய் பள்ளிக்கூடம் போறல்லையாடா..." சிவாண்ணையின் குரல் கேட்டு உள்ளே எட்டிப் பார்த்த அம்மாவின் முகமெங்கும் கோபக்கனல். "உனக்கு ராவெல்லாம் எங்கடா வேல... சித்தப்பா வந்து எல்லாம் கதைச்சிருக்கிறார். நீ செய்யிற வேலை என்னெண்டு எங்களுக்கு நல்லாத் தெரியும்..." அம்மாவிலிருந்து எகிறித் தெறித்தன நெடும் வார்த்தைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாண்ணை எதுவுமே பேசவிலலை. சேட்டைக் கழட்டி வீசிவிட்டு கட்டிலில் விழுந்து படுத்தபடி முகட்டை உற்றுநோக்கியபடி கிடந்தார். அம்மா அனல் பறக்கும் வார்த்தைகளை அள்ளிக் கொட்டிக் கொண்டேயிருந்தார்.

சிவாண்ணை முற்றிலுமே மாறிப் போய்விட்டார். எடுத்ததுக்கெல்லாம் புற்றிலிருந்து கிளம்பிய நாகமாய் சீறியெழுந்து பேசுகிற வார்த்தைகளையும் கடுகடுப்பையும் பொறுப்பற்ற தன்மைகளையும் எங்கே எப்போது கை கழுவினார்?

சிவாண்ணைக்கும் இவனுக்கும் சாப்பாடு போட்டுக் கொண்டே அம்மா நிறையச் சொன்னாள். "தம்பி இதெல்லாம் உனக்குச் சரிவராது. நமக்கேன் தேவையில்லாத ஊர் வேலையெல்லாம். நீ படிச்சது போதும். வெளியில போறதப் பாப்பம். உன்னைப் பார்த்து இவன் சின்னவனும்..." சொல்லிக் கொண்டிருக்கும் போதே அம்மாவின் கண்கள் கலங்கி வார்த்தைகளில் முன்பிருந்த வேகமும் கோபமும் தணிந்து சாந்தமாய் கெஞ்சலாய்க் கரகரத்தன.

முன்ஹோலுக்குள் கால்மேல் கால்போட்டு சாய்மனைக் கதிரைக்குள் உடம்பு முழுவதையும் திணித்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த அப்பா அம்மாவின் வார்த்தைகளையே காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அப்பாவைப் பொறுத்தவரை எந்தப் பிரச்சினையெனினும் வாய் திறந்து பேசவே மாட்டார்.

எதுவென்றாலும் அம்மா தான். சிவாண்ணையின் அண்மைக்கால மாற்றமும் போக்கும் அப்பாக்கு நல்லாவே தெரியும். சிவாண்ணையின் மாற்றமும் அவரில் நோவைத் தந்தாலும் மனித வாழ்வியல் பற்றியும் நெரிபடும் சமூக சிக்கல்கள் பற்றியும் அப்பாவுக்கு நல்லாவே தெரியும். அதனால் அவர் மௌனம் இன்னும் அழுத்தமாகவே இருந்தது.

சில நேரங்களில் அப்பா அம்மாவுடன் தனியாகப் பேசும் போது சிவாண்ணையைப் பற்றி புகழ்ந்து தள்ளுவார். பெருமிதப்படுவார். பகவத்சிங்குடன் ஒப்பிட்டுப் பேசுவார். பழைய அலுமாரியிலிருந்த புத்தகமொன்றை எடுத்து பக்கங்களைப் புரட்டி பகவத்சிங்கின் படத்தைக் காட்டிய போது அம்மா அப்பா மேல் எரிந்து விழுந்தாள். உங்கட ஊமைத்தனம் தான் அவன அவன்ட பாட்டில எல்லாம் ஆடித்திரிய வைச்சிருக்குமென்பாள். இருந்தாலும் உள்ளுக்குள் ஓர் சந்தோசமே. இருப்பினும் பயம் கவ்விக்

கொள்ளும் போது தான் முகமிறுகி ஆவேசம் கொள்வாள். பயந்தொடுங்கி கலங்குவாள். எந்தத்தாய் தான் தன் குஞ்சுகளை பருந்துகளின் வெறியாட்டத்துக்குத் தீனியாக்குவாள்.

சில நாட்களாக சிவாண்ணை வீட்டுப் பக்கம் வரவேயில்லை. அம்மா முகத்தைத் துடைத்தபடி அழுதபடியே மூலையில் குந்திக் கொண்டிருந்தாள். அப்பா அந்த சாய்மனைச் கதிரைக்குள் தன்னை அமிழ்த்தியபடி பழைய புத்தமொன்றையோ பேப்பரையோ புரட்டிக் கொண்டு மனசு முழுவதிலும் நோவை அப்பியபடி இறுகிய மௌனத்துடன் கால்களை மட்டும் இடையிடையே ஆட்டிக் கொண்டிருந்தார். அதுதான் சிவாண்ணையின் நீண்ட பயணத்துக்கான ஆரம்பம்.

வீட்டில் யாரும் சாப்பிடவேயில்லை. மாமாவும் மாமியும் நேரம் தவறாமல் சாப்பாடு கொண்டு வந்தார்கள். வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்க முதலே சித்தப்பா சீறி விழுவார். "எல்லாம் நீங்கள் அவனுக்குக் கொடுத்த இளக்காரம் தான். எங்க அவன் சின்னவன். அவனையும் அவன்ரை இஷ்டத்துக்கு ஆடவிடுங்க. அவனும் ஓடிப்போகட்டும்..." என்ன பேசுவதென்றே தெரியாமல் தொண்டை கிழியக் கத்தித் தள்ளுவார்.

சிவாண்ணை போன விஷயம் மெல்ல மெல்ல ஊருக்குள் எப்படியோ கரையத் தொடங்கிற்று. தெரிஞ்சவங்க எல்லோரும் வீட்டை மொய்க்கத் தொடங்கினார்கள். அம்மா ஏதேதோவெல்லாம் சொல்லி மழுப்பினாள். அப்பா ஒரு புன்சிரிப்புடன் தலையை மட்டும் ஆட்டிக் கொண்டார்.

நாட்களின் விரிசலில் சிவாண்ணையைப் பற்றி நிறைய கதைகள் உலாவின. எங்கெங்கோ தொலைவில் கண்டதாக யார் யாரோ சொன்னார்கள். நாட்களின் இடைநடுவில் ஓர் நாள் சிவாண்ணையிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது. இவனுக்கு நல்லாவே ஞாபகமிருக்கிறது. அதில் பெரிதாக ஒன்றுமில்லை. நாலைந்து வரிகள். சின்னவனை ஒழுங்காக பள்ளிக்கூடம் போய் படிக்கச் சொல்லுங்கள். அம்மா அழாமல் இருங்கோ. ஒழுங்காகச் சாப்பிடுங்கோ. அப்பாவுக்குத் தெரியும் நான் தவறான பாதையில் செல்லவில்லையென்று. விரைவில் சந்திப்பேன். அலட்டலின்றி அழகாக எழுதியிருந்தான். குறுணிக்குறுணி எழுத்துக்கள். அவன் கைபடவே எழுதியிருந்தான். கடித உறையில் ஒட்டியிருந்த முத்திரையில் காந்தி தலையைத் தொங்கப் போட்டபடி இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்ததுக்கெல்லாம் சீறி விழுகிற சித்தப்பா இப்போதெல்லாம் அம்மாவின் காதோடு காதாய் பெருமையாகப் பேசிச் கொள்வார். "சிவாட பொடியள் தான் செய்தவையாம்..." பெருமிதத்தால் உளம் நெகிழ்வார். அப்பா முன்னைய விட உற்சாகமாகவும் தெம்பாகவுமிருந்தார்.

விடுபட்டுப்போன நீண்ட நாட்களின் பின்னரான ஒரு நள்ளிரவில் வீட்டின் பின்பக்கக் கதவு தட்டப்பட்டது.

"அம்மா... அம்மா..."

"யாரது?" முன்ஹோலுக்குள் தூங்கிக் கொண்டிருந்த அப்பா குரல் கொடுத்தார்.

"நான் தான் சிவா. கதவைத்திறவுங்கோ" லைற் போடுவதற்கு கூட அவகாசமில்லாத அவசரத்தில் அப்பா கதவைத் திறந்தார். அம்மா சுவரில் முட்டுப்பட்டு பின்பக்கம் ஓடி வந்தாள்.

"தம்பி சிவா.." என்றாள் தழுதழுத்த குரலில். "முதல்ல உள்ளுக்க வாங்கோ" என்றார் அப்பா.

சிவாண்ணையோட இன்னும் மூன்று பேர் வந்திருந்தார்கள். அவர்களும் சிவாண்ணையோட வயதையொத்தவர்களாகத் தானிருக்க வேணும். நின்று கொண்டிருந்தவர்களை கதிரையில் இருக்கச் சொன்னார் அப்பா. சிவாண்ணையை கட்டிப்பிடிச்சுக் கொண்டு அம்மா அழுதாள். ஏதேதோ கேள்விகள் கேட்டாள். சிவாண்ணை உறுதியாகவே நின்றார்.

அப்பா அம்மாவை கண்களால் அழைத்தார். உள்ளே கூப்பிட்டார். "சிவா மட்டுமில்ல மற்றதுகளும் நம்மடை பிள்ளைகள் மாதிரித்தான். இந்த இரவுலை அதுகள் எங்கெங்கோ எல்லாம் அலைஞ்சு போட்டு பசியோடும் களைப்போடும் வந்திருக்குதுகள். முதல்ல அதுகளுக்கு ஆறுதலா எதையாவது சாப்பிடக் குடு..." அப்பாவின் வார்த்தைகளில் கடுமை தொனித்தது. இருப்பினும் எந்தத் தாய் தான் தன் குஞ்சை பிரித்தெறிந்து வாழப் பிரியப்படுவாள்.

அம்மா அப்பாவின் வார்த்தைகளுக்குப் பின்னால் ஞானம் பெற்று புதிதாய் உயிர்த்தெழுந்தவள் போலானாள். அழுகையை கொஞ்சம் கொஞ்சமாய் அடக்கிக் கொண்டாள். குசினிக்குள் விரைந்தாள். அடுப்பை மூட்டி முதலில் கோப்பி போட்டாள்.

சிவாண்ணை இவனின் தலையைத் தடவினான். சிவாண்ணையோடு வந்திருந்தவர்கள் இவனைப் பார்த்துச் சிரித்தார்கள். அப்பா சிவாண்ணைக்கு மிக அருகில் நெருக்கமாக இருந்தார். எல்லோருடனும் நீண்டகால உறவுகளின் பின்னால் வந்தவர் போல் பேசிக்கொண்டிருந்தார். "எதிலும் நிதானம் தேவை. என்றைக்கும் இலக்குகளைத் தவற விடக்கூடாது" என்றார்.

அம்மா எல்லோருக்கும் சுடச்சுட கோப்பி கொடுத்தார். எல்லோரும் உறிஞ்சி உறிஞ்சி கோப்பி குடிப்பதை அப்பா இமை வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். "நீங்க ஆர்ர பிள்ளைகள் தம்பி ? எந்த ஊர்?" அம்மா கேட்டாள். "நாங்க எல்லாம் உங்கட பொடியள் தான். நீங்களும் எங்களுக்கு ஒரு தாய் தான். "சிவாண்ணைக்கு இடதுபக்கமிருந்த ஒரு அண்ணா சிரித்துக் கொண்டே பதில் சொன்னார். உண்மையாகவே அதெல்லாம் அப்போதைய நாள்களில் தேவையற்ற ஒன்றே தான்.

மெயின் றோட் பக்கம் வாகனமொன்றின் உறுமல் சத்தம் கேட்டது. எங்கோ தொலைவில் பெருங்குரலெடுத்து நாய் ஒன்று ஊளையிட்டது. காற்றில் மாமரத்தின் கிளையொன்று வீட்டின் மேல் ஓட்டில் உரசுகின்ற சத்தம். இவை தவிர அந்த நள்ளிரவு கருமை படிந்து அமைதியாகவே தூங்கிக் கொண்டிருந்தது.

சிவாண்ணைக்கு எதிரே இருந்த ஒரு அண்ணா கடிகாரத்தைப் பார்த்தபடி சிவாண்ணையைப் பார்த்தார். சிவாண்ணை தடவிக் கொண்டிருந்த இவனின் தலையிலிருந்து கையை எடுத்தார். எல்லோரும் எழும்பினார்கள். "நாங்க போயிற்று வாறம்" அம்மா கண்கலங்கினாள். அப்பா அவர்கள் ஒவ்வொருவரின் கைகளையும் தடவிக் கொடுத்தார்.

அப்பா தான் முதலில் றோட்டில் இறங்கி இருபக்கமும் நோட்டம் விட்டார். சைகையால் கூப்பிட்டார். சிவாண்ணையும் அவர்களும் றோட்டில் இறங்கி நாலைந்து வீடுகள் தள்ளியிருந்த ஒழுங்கைக்குள் சாத்தியிருந்த சைக்கிள்களில் ஏறித் தாவினார்கள். அந்த இரவில் அவர்கள் மறைந்து போனார்கள். சைக்கிள்களின் கீறிச் கீறிச் சத்தமும் சிறிது நேரத்தில் ஓய்ந்து ஒடுங்கி இல்லாமல் போனது.

றோட் கதவைச் சாத்திவிட்டு முற்றத்து மணலில் பதிந்து போயிருந்த காலடிகளையெல்லாம் காலால் தடவித் தடவித் அழித்தார் அப்பா கலங்கிய கண்களை சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டிருந்தாள் அம்மா. அருகில் இவன் நின்று கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளரவம் கேட்டு பக்கத்து வீட்டு வடிவேல் மாமா எட்டிப் பார்த்தார். "என்னடா தம்பி, இந்த நடுச்சாமத்தில. ஆரது நாலஞ்சி பேர்ர சத்தமெல்லாம் கேட்டுது."

"அது இவன் சின்னவனோட படிக்கிற பொடியள் வந்து ரீ.வி.யில படம் பார்த்துட்டு போறானுகள்"

"இண்டைக்கு அப்படி என்ன விசேசமான படம்?"

" நாம் பிறந்த மண்"

வடிவேல் மாமாவின் அடுத்த கேள்விக்கு இடம் குடுக்காமலேயே அப்பா கதவை அடித்துச் சாத்திவிட்டு உள்ளே வந்து சாய்மனைக் கதிரைக்குள் குந்திக் கொண்டார்.

சிவாண்ணை விட்டுப் பிரிந்து போன இந்தக் கொஞ்ச நாட்களில் எப்படி மாறிப் போயிட்டார். முகமெல்லாம் கறுத்து கொஞ்சம் மெலிந்து... அதையெல்லாம் விட சிவாண்ணையோப் வந்த இரண்டு பெடியளுக்கு மீசை கூட முளைக்கவில்ல. ஏன் இவர்களெல்லாம் வீடுகளை விட்டுப் பிரிந்து பசியும் களைப்பும் சோர்வும் துயரும் இழப்பும் உண்டெனத் தெரிந்தும் வாழ்வினைத் தூக்கி வீசியெறிந்து விட்டு குறுணிககற்களிலும் நெருஞ்சி முட்களிலும் வாழத்தலைப்பட்டனர். இவனுக்கு இதுவொன்றும் எதுவென அப்போதைய நாட்களில் தெரிந்து கொள்ள முடிந்ததில்லை.

அதுக்குப் பிந்திய எல்லா ராத்திரிகளிலும் அப்பா நீண்ட நேரம் துாங்காமலேயே விழித்துக் கொண்டிருந்தார். இவன் ராத்திரிகளில் எழும்பிக் கதவைத் திறந்து கொண்டு வாசலிலே எட்டி நின்றபடி சாறத்தையுயர்த்தும் போதெல்லாம் "தம்பி கொஞ்சம் தள்ளிப்போடா காலையில வாசலெல்லாம் மணக்கப்போகுது" என்பார் அப்பா.

அம்மாவும் அப்படித்தான். சின்ன ஒரு சத்தத்தைக் கேட்டாலும் திடுக்கிட்டெழும்பி விடுவாள். எங்காவது தொலைவில் நாய்கள் குரைத்தாலோ இல்லையேல் றோட்டுப் பக்கம் சைக்கிள் சத்தமோ ஆளரவமோ கேட்டாலோ கூட அப்பா மெதுவாகக் கதவைத்திறந்து வெளியே உற்றுப் பார்த்தபடி நிற்பார். சிவாண்ணை வந்து விட்டுப் போனதுக்கு பின்னரான எல்லா நாட்களும் இப்படித்தான் கழிந்து போயிற்று.

இன்னும் ஒரு நாள் இப்படித்தான். அது ஒரு வெள்ளிக்கிழமை. வீட்டுப்பாடம் மற்ஸ் கொப்பியில் பைதகரசின் தேற்றம் பற்றி மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்த நேரம். பின்னால் யாரோ முதுகில் தட்ட திரும்பிப் பார்த்தான். சிவாண்ணை சிரித்தபடி நின்றார்.

அவருக்கருகில் யாரோ ஒரு புதிய முகம் நிறையத்தாடி வைத்திருந்தார். இவர்களின் குரல் கேட்டு பின்னாலிருந்து எட்டிப் பார்த்தபடி அம்மா வந்தாள். சிவாண்ணையைக் கண்டதும் சந்தோஷ மிகுதியால் கண் கலங்கினாள்.

"அப்பா எங்கே?"

"அவர் கோயிலுக்கு போயிட்டார். இண்டைக்கு வெள்ளிக்கிழமைதானே..."

சிவாண்ணையின் கையைப் பிடித்துக் கொண்டு ஒரு குழந்தையின் பரிவுடன் எதுவுமே பேசாது நின்றாள் அம்மா "என்ன சாப்பாடு இருக்குது..." சிவாண்ணை குசினிப்பக்கம் எட்டிப் பார்த்தார். அம்மாவின் ஓட்டத்தை திசைதிருப்புவதற்காகத்தான் சிவாண்ணை அப்படி நடந்து கொண்டிருக்க வேணும்.

சிவாண்ணைக்கும் அந்த தாடிக்கார அண்ணைக்கும் அம்மா சாப்பாடு போட்டாள். அவர்கள் சாப்பிடக் கீழே குனிந்த போதெல்லாம் கழுத்தில் தொங்கிய கறுப்பு நாடாவும், குப்பியும் அசைந்தாடின. சாப்பிட்டு முடிந்தவுடன் சிவாண்ணை எதையோ எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டார். அதைத் தொட்டுப் பார்க்க இவனுக்கு எவ்வளவோ ஆசையாக இருந்தது.

"காலம் இருக்கிறது. இப்போது நீ படிக்கிறதப்பார்" என்றார் சிவாண்ணை.

சிவாண்ணைக்கும் சித்தப்பாவும் அம்மாவும் முன்பெல்லாம் இப்படித்தானே சொன்னார்கள். அப்பா வரமுதலே சிவாண்ணையும் அந்தத் தாடிக்கார அண்ணாவும் கிளம்பினார்கள். சிவாண்ணை மறையும் வரை அம்மா வீதியை வெறித்துப் பார்த்தபடியே நின்றாள். இருளில் முழுவதுமாய் உலகம் நனைந்து கிடந்தது. நாலோ ஐந்தோ நட்சத்திரங்கள் மட்டும் எங்கோ வெகுதொலைவில் தனித்துக் கிடந்தன.

கோயிலிலிருந்து வீடு திரும்பிய அப்பாவைக் கண்டதும் அம்மா விக்கி விக்கி அழுதாள். எனக்கு சிவாவை நினைக்க நினைக்க பயமாயிருக்குது தென்றாள். "சிவா மட்டுமா எத்தனை பெடியள்..."இன்னும் ஏதேதோ எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி அம்மாவை சமாளித்து விட்டா சிவாண்ணையைப் பார்த்துப் பேசக் கிடைக்காதது அப்பாவின் மனசெங்கும் நீண்ட துயராய் பெருகிக் கரைந்து வடிந்தன.

அது 1985இன் மார்கழியின் கடைசி நாட்கள். ஒரு வெள்ளிக்கிழமை திருவெம்பாவைக்காலம். விடிகாலைப் பொழுதுகளில் ஊரின் தெருக்களில் பஜனை முடிந்து வந்து கோயிலில் பூசை நடந்து கொண்டிருக்கிறது.

கோயிலின் முன்மண்டபம் முழுவதும் நிரம்பிய கூட்டம். வாதவூரரின் திருவாசகம் பக்திப் பெருங்கடலாய் பிரவாகித்தெழுகிறது. கடலையும் பொங்கலும் மூக்கைத் துளைக்கிறது.

"டேய் சின்னவா, அப்பா எங்கடா" என்றைக்குமே கோயில் பக்கம் எட்டிப் பார்க்காத சித்தப்பா கண்ணெல்லாம் கலங்கியபடி பதற்றத்துடன் நின்றார்.

கூட்டத்துக்குள் நின்ற அப்பாவை ம் இழுத்துக் கொண்டு வெளியே வந்தார் சித்தப்பா. "என்ன சித்தப்பா.." இவன் தான் முதலில் கேட்டான். "வம்மியடிச் சந்தியிலை சிவாவை சுட்டுப் போட்டுக் கிடக்காம்." கலங்கிய கண்களுடன் வாயச்சப்பிச்சப்பி சொன்னார். எதுக்குமே கலங்காத அப்பா கண்களிலிருந்து நீர் பொலபொலவென்று வழிய ஓவென்று வாய்விட்டு அழுதார்.

வம்மியடிச் சந்தியில அந்தக் கிறவல் மணலில் சிவாண்ணை குப்புறக் கிடந்தார். கழுத்திலும் முதுகிலும் இரண்டு பெரிய துவாரங்கள் வெளித்தெரிந்தன. இடது பக்க கை வெடிக்காத ஒரு தேட்டிசிக்ஸ் கிரனைட்டை பற்றிப் பிடித்திருந்தது. நீலநிற கிப்ஸ்சாரம் வெள்ளை ரீசேர்ட் இரவு முழுவதும் பெய்த மழையில் நனைந்தபடியே கிடந்தார் சிவாண்ணை.

அவருடைய நம்பிக்கையும் உறுதியும் குருதியில் உறைந்தபடி கிடந்தது. அந்தக் கிறவல் மணல் மீது வெற்றுத் தோட்டாக்களைப் போல் ஒரு அநாதைப் பிணமாய் சிவாண்ணையின் வாழ்வு முடிந்து போயிற்று...

நம்பிக்கைகளின் தொலைதல் பற்றிய கனவுகளிலேயே அப்பாவின் காலம் போனது. அம்மா மிகவும் களைத்துப் போயிருந்தாள். இவனுக்கு பள்ளிக்கூடமும் ரியுட்டறியும் கொலம்பஸின் கடற்பயணம் போல் இருந்தது. சிவாண்ணையின் இழப்பு அத்துணை கொடூரமானதுதான்.

சிவாண்ணையின் இழப்பிற்கு பின்னர் அப்பாவின் மௌனம் எல்லோரையும் தொற்றிக் கொண்டது. அப்பாவைப் போலவே வீடு முழுவதும் எந்தச் சலனமும் இன்றி அமைதியில் கிடந்தது. இவனைக் கடக்கின்ற ஒவ்வொன்றும் எரிச்சலையும் சலிப்பையுமே உண்டு பண்ணின.

அதுவும் ஒரு மாலை நேரம் தான். வானம் முழுவதும் இருண்டு கிடந்தது. பொட்டுப் பொட்டாய் தூறல்கள் விழுந்தன. மாலை நேரத்துக் குளிர்காற்று உடம்பெல்லாம் சில்லிட்டது. கதவைத் திறந்து கொண்டு சித்தப்பா உள்ளே வந்தார்.

"தம்பிராசா மாஸ்ரர்ர மகன வீட்டில வச்சுச் சுட்டுப்போட்டாங்களாம். சிவாட பொடியள் தானாம் செய்தவையாம்". பழிக்குப்பழி என்ற பெருமிதத்தோடு சித்தப்பா சொல்லிக் கொண்டிருந்தார். உள்ளுக்குள் ஒரு சொட்டுத் திருப்தி. அவரின் முகமெங்கும் பளிச்சிட்டன.

அதுவரையும் சாய்மனைக் கதிரைக்குள் கிடந்த அப்பாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. எழும்பியபடியே சித்தப்பாவைப் பார்த்தார்.

"இதொன்றும் பெருமிதப்பட வேண்டிய விஷயமல்ல. ஒவ்வொருத்தரும் வெக்கப்பட வேண்டிய விஷயங்கள். இப்படி ஒருத்தொருக்கொருத்தர் சுடுபட்டு அழிஞ்சு கொண்டு போனால் எங்கட எதிர்காலம் என்னாவது? ஒவ்வொரு வீட்டையும் சுடுகாடாக்கி விட்டு... தன் மௌனம் உடைத்து ஒரு சிங்கத்தின் தொனியில் அப்பா கர்ஜித்தார். சேட்டை எடுத்துக் கொழுவிக் கொண்டு தம்பிராசா மாஸ்ரரின் வீடு நோக்கி நடந்தார்.

உண்மை தான். இப்படி ஏன் இவர்கள் தங்களுக்குள் தாங்களே சுடுபட்டு அழிகிறார்கள். அப்படியென்றால் இந்த வாழ்க்கையை ஏன் தேர்ந்தெடுத்தார்கள். முன்புபோல் இனியும் அடிமைகளாகவே வாழ்ந்து விட்டுப் போகலாமே.

சிவாண்ணையும் தம்பிராசா மாஸ்ரரின் மகனும் இவர்களையொத்த இன்னும் நூறாயிரம் பேர்... தாய்மையின் கருவறைகளை கொத்திக் கிண்டிச் சுடுகாடாக்கி விட்டு... வெற்றுத் தோட்டங்கள் வீதிகளெங்கும் நிரம்புகின்றன.

குழம்பிக்குழம்பி எழுகின்ற ஒவ்வொரு நினைவுகளும் விஷமாய் இவனில் எழுகின்றது. மூடிய கண்களை திறக்க மனமில்லாது கிடக்கிறான். கனவுகள் இனி வராது. அழுத்திய குரூரங்களிலிருந்து மீள்வதெப்போ? ஆழப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கடலில் யார் யாரோ அமுக்குகிறார்கள். விடமுண்ட கண்டனாய் மீதி வாழ்க்கையும் இப்படியே கழிந்து போகிறது.

தினக்குரல்

நெடும் காலத்தின் பின்னொரு நாள்

ஜன சஞ்சாரமும் அன்றாட வாழ்வும் சிறிதேனும் பிசகாத ஒரு பகல் பொழுது அது. அன்று விடுமுறை நாள் என்பதாலோ என்னவோ அந்த நகரத்தின் பரபரப்பும், வேகமும், துடிப்பும், ஆர்வமும், கலகலப்பும் சற்றே அடங்கியிருந்தன.

எதிர்ப்பட்டசிக்னல் பொயின்றுகளில் நீண்ட வரிசையும் கோர்ன் சத்தமும் அடங்கி ஒன்றிரண்டு வாகனங்கள் மட்டும் வேகம் தணிந்து சிவப்பு மஞ்சள் பச்சை ஒளி பார்த்து வேகமாயும் மிக வேகமாயும் ஆமை ஓட்டங்களாகவும் நகர்ந்தன.

கமக்கட்டு இடுக்குகளில் சொருகிய பத்திரிகைகளுடனும், விரிந்த குடை நிழல்களின் கீழேயும் வீதியின் இரு மருங்கும் ஜோடி ஜோடியாயும், குடும்பமாயும், தனித்தும், ஒன்றிரண்டாய் பாதசாரிகள் நகர்ந்தனர்.

வீதியின் இரு பக்கமும் இருந்த அநேகமான கடைகள் மூடியே கிடந்தன. பத்திரிகைகளும் வாழைக்குலைகளும் ஒன்றோடொன்று முட்டிமோதி தட்டுப்படும் சில்லறைக் கடைகள், சாப்பாட்டுக் கடைகள் தவிர்ந்த எல்லாக் கடைகளும் அலுவலகங்களும் இறுக்கி மூடியே கிடந்தன.

எதையுமே அறிந்திராத அப்பாவிகளாகவே ஒவ்வொரு மனித முகங்களும் அந்தத் தெருவெங்கும் தென்பட்டன. இவர்களுக்கெல்லாம் உண்மையாகவே இந்த தேசம் பற்றிய இன்றைய நாட்கள் பற்றிய ஏதேனும் சிறிதளவேனும் கூட தெரிந்திருக்க நியாயமில்லைத் தான்.

நகரத்தின் நீள்வளைவுச் சந்தி முழுவதும் புதிதாய் முளைத்தெழுந்த சவப்பெட்டிக் கடைகள் எந்த விடுமுறையுமற்று வேகமாய் இயங்கிக் கொண்டிருந்தன. மலர்வளையத் தட்டுக்களை மீண்டும் மீண்டும் தண்ணீர் தெளித்து உயிர்ப்பித்துக் கொண்டிருந்தனர். கூடைகளில் செத்துப் போய்க்கொண்டிருக்கும் பூக்களுமாய் கடைவாசல்களை நிரப்பியிருந்தன.

அதே வளைவின் இடது பக்க மூலையிலிருந்து சவப்பெட்டிகளையும் மலர்வளையங்களையும் ஏற்றிக்கொண்டு வாகனம் ஒன்று மறைந்து கொண்டிருந்தது. இன்னும் பல நின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரத்தின் மிகப்பெரிய அந்த மருத்துவமனையின் உள்ளேயும் வெளியேயும் முற்றிப் பருத்த பெருமரங்களின் உச்சிகளிலிருந்தபடி காகங்கள் கத்திப்புரண்டன. ஒன்றையொன்று ஆவேசம் கொண்டு கொத்தின.

குஞ்சுக்காகங்களின் சொண்டுகளுக்குள் கூரிய சொண்டுகளை விட்டு அண்டங்காகங்கள் கொத்திக் கொத்தி கிழித்தன. அடர்ந்த கிளைகளுக்குள் அயர்ந்து தூங்குவதாய் ஆந்தைகள் பாசாங்கு செய்தன. ரத்தமும் சதைத்துகள்களும் எச்சில்களும் இன்னுமென்னென்னவோ மரங்களிலும் கிளைகளிலும் இலைகளிலும் தெறித்து வடிந்தன.

அந்தப்பழம்பெரும் மருத்துவமனையத் தேடி சாரைசாரையாய்க் கூட்டம் வந்தது. எல்லோரிடமும் எதையோ இழந்து கொண்டிருப்பதான அவசரமும், தவிப்பும் துயரமும், பீறிட்டு வடிந்தன கண்களில் சோபையிழந்து போன பார்வை. ஆத்திரத்தாலோ அல்லது எதையோ நினைத்தோ அடிக்கடி உதடுகளைக் கடித்தனர். எச்சில் துப்பினர்.

சில குழந்தைகள் பசியால் அழுதன. இன்னும் சில குழந்தைகள் தமது பெற்றோரைக் கேட்டழுதன. ஜனசஞ்சாரம் கூடிக் கூடி ஒரு பிரளயம் போல் எழுந்தது. ரத்தம் சொட்டச்சொட்ட அழுகுரல்களுக்கிடையே வாகனங்கள் உறுமிக் கொண்டோடின.

பன்டேஜ் துணிகளும், சேலன் போத்தல்களும், ஊசி மருந்துகளின் குறுணிக்குறுணி வெற்றுப் போத்தல்களும் உடைந்த ஊசிகளும் அறுவைச் சிகிச்சை முடிந்த கத்திகளும் ஊத்தைக் கூடைகளில் நிரம்பின. ஒடுங்கிய ஜன்னல்களுக்கும் விரிந்த பெருங்கதவுகளுக்கு வெளியேயும் அந்த மருத்துவமனையின் நாற்றம் நகரை நோக்கி மெல்ல மெல்ல நகரத் தொடங்கியது.

நகரத்தின் கட்டிடங்களிலும் கூரைகளிலும் மின்கம்பங்களிலும் இணைத்துக்கட்டிய கயிறுகளில் வெள்ளைக் கொடிகள் தொங்கின. வெள்ளைக் கொடிகளை மறைத்தும் வீறாப்புக்கொண்டும் கட்சிக்கொடிகள் பறந்தன.

எல்லாச்சுவர்களும் போஸ்டர்களால் நிரம்பியிருந்தன. சமாதானம், யுத்தம், குரூரம், காமம், விளம்பரம், அஞ்சலி எனப் பல்வேறு மொழிகள் பேசின.

குண்டுவெடிப்புகளால் சிதறுண்டு போன கட்டிடங்கள் மீண்டும் புதிதாய் முளைக்கத் தொடங்கின. வீதிகளின் மஞ்சள்கடவைகள் சிவப்பாகவேயிருந்தன. அச்சம் கொண்டேகியபடி பாடசாலைகள் மூடிக் கிடந்தன.

இராப் பொழுதுகளில் விடுதிகளையும் வீடுகளையும் முற்றுகையிட்ட காவலர்களால் கைது செய்யப்பட்டு கூட்டிவரப்பட்ட இளைஞர்கள், வயோதிபர்கள் வெற்றுடம்புகளுடன் முழங்காலில் கைபுதைத்து கூடுகளுக்குள் நெரிபட்டார்கள்.

வாங்குகளில் நைற் கவுனுடன் கூட்டிவரப்பட்ட இளம் பெண்களின் அங்கங்களை போதிமரத்துக் கண்கள் புணர்ந்து திரிந்தன. காவல் நிலையங்களுக்கு வெளியே சுட்டெரிக்கும் வெயிலில் கூட்டம் கூட்டமாய் பெண்களும் வயோதிபர்களும், சிறுவர்களும், குழந்தைகளும் நின்றனர்.

கொதிக்கும் வெயிலிலும் நாவரண்ட தாகத்திலும் குழந்தைகள் தாயின் கழுத்தைக் கட்டிப்பிடித்தபடி தொங்கின. ஆயுதம் தாங்கிய காவலர்கள் வருவதும் போவதுமாயிருந்தனர்.

பகல் நேரச் செய்திக் குறிப்புகளில் நகரத்தின் தூய்மை பற்றியும், குழந்தைகளின் ஆரோக்கியம், எதிர்காலம் பற்றியும், பெண்களின் தனித்துவம், இளைஞர்களின் விரக்திக்கு விரைவில் தீர்வெனவும் இடையிடையே பயங்கரவாதிகளிடமிருந்து சில கிராமங்களைக் கைப்பற்றியிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்தன.

காவல் நிலையங்களுக்கு முன்பாகவும் மருத்துவமனைகளுக்கு வெளியேயும் குழந்தைகள் பசியாலும் தாகத்தாலும் வீரிட்டழுதன.

நீண்ட நேர ஓட்டத்துக்குப் பின்னர் அந்த வெள்ளைநிற வான் நகரத்துக்கு தெற்கேயுள்ள இரு மருங்கும் நிரை நிரையாய் அழகுக்கு மரங்கள் வளர்க்கப்படும் வீதியான்றில் இறங்கி நகரத் தொடங்கியது.

பெரும் கனவான்களும் அரசியலாளர்களும் அந்நிய தேசங்களின் தூதர்களும் மட்டுமே வீற்றிருக்கும் நகரத்தின் தெற்குப் பகுதியொன்றின் வீதி அது. வர்ணம் பூசிமெழுகி பளிங்குக் கற்களால் வேயப்பட்டிருந்தன ஒவ்வொரு வீடுகளும். ஒவ்வொரு வீட்டின் முன்வாசல்களிலும் வெள்ளரசு மரங்கள் கிளை பரப்பி காற்றில் அசைந்தாடின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளரசு மரங்களின் கீழ் யானைத்தந்தங்களாலும் ரத்தினம், வைடூரியம் கொண்டும் பின்னப்பட்ட சாய்வுநாற்காலிகளில் அமர்ந்தபடி அவர்கள் அயர்ந்து தூங்கினர். சமாதானப் பிரியர்கள் அழகிய கிண்ணங்களில் ஒல்ட் அரக் விட்டருந்திக் கொண்டிருந்தனர். அயல்நாட்டுத் தூதுவர்கள் அறிக்கைகள் தயாரித்துக் கொண்டிருந்தனர்.

எறித்த வெயில் தணிந்து கொண்டிருந்தது. அந்த வீதியெங்கணும் நடந்து போகின்ற எந்த மனிதர்களையுமே காணமுடியாது. வெள்ளை வான்களும், பஜிரோக்களும், பீ.எம் டபிள்யூவும் மாருதியுமென ஓடிமறையும் வீதி அது. அழகுக்காக நடப்பட்ட மரங்களில் வெறுத்து வீழ்ந்து கிடக்கும் இலைகள் வீதிகளில் கொட்டிக்கிடந்தன. தூரத்தே தொங்கிக் கொண்டிருக்கிற வானமெங்கும் குறுணிக் குறுணியாய் வன்னிக் கிராமத்து கிறவல் ஒழுங்கைகளைப்போல் கோடுகள் விழுநது கிடந்தன.

நகரம் முழுவதும் ஓடிக்களைத்து எல்லாம் முடிந்து ஒரு குலுக்கலுடன் சடாரென நின்றது அந்த வெள்ளை நிறவான். இடது பக்க கண்ணாடியை முழுமையாய் மறைத்தபடி ஒரு மரக்கிளையின் இலைகள் உரஞ்சின. எந்தப்பறவையும் இருப்பதற்கு இடம் தேடிவரா இயலாமையை எண்ணிக் கலங்கியவாறே அந்தத் தெருவோர மரங்கள் நின்றன.

அந்த வெள்ளை நிறவானின் ஒரு பக்க கதவை இழுத்துத் திறந்து அவனை வெளியே எடுத்தனர். நடப்பதற்கு பலமற்று தடுமாறிய அவனின் உச்சந் தலையில் பிடித்தபடி நிலைப்படுத்தினான் ஒருவன். அப்போதும் அவன் சுழல்காற்றில் அள்ளுண்ட சருகாய் திசையற்று நிலையிழந்து தள்ளாடினான்.

வெள்ளை நிற சாந்து பூசிய பெரிய மாளிகை அது. உள்ளே மஞ்சள் நிறக்குலைகள் தாங்கிய தென்னைகளும் வெள்ளை நிறப் பூக்களைக் கொத்துக் கொத்தாய் சூடிய அலரிகளும் வெட்டி விடப்பட்ட குரோட்டன்களும் மட்டுமே சுதந்திரமாக காற்றில் அசைந்தாடின.

உச்சந் தலையில் ஒருவனும் ஒற்றைக்கையில் இன்னொருவனுமாக அவனை உள்ளே இழுத்துச் சென்றனர். வெள்ளை நிறச்சாந்து பூசிய அந்த அழகிய மாளிகையின் நான்காவது மாடியின் ஒரு அறையில் அவனை அடித்துத் தள்ளினர்.

சுவரில் முட்டிமோதி சுற்றிச்சுழன்றபடி தடாரென நிலத்தில் வீழ்ந்தான். ஒரே கும்மிருட்டாக இருந்தது. கண்களுக்குள் ஆயிரமாயிரம் மின்மினிப்பூச்சிகள் பறந்தன. செவிப்பறைகள் விறைப்புற்று அந்தரத்தில் பறப்பதாக உணர்ந்தான். நாவரண்டு போய்க்கிடந்தது. அச்சமும் பயமும் தனிமையின் துயரும் அவனை வாட்டி வதைத்தன. உடம்பு சில்லென்று குளிர்வதாயிருந்தது. மரணம் பற்றிய இறுதிநேரக் கணங்களில் உழன்றபடி தூங்கியே போனான்.

அந்த நகரத்திலுள்ள போதிசத்துவரின் எல்லாத் தேவாலயங்களிலும் விளக்குகள் பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தன. பள்ளிவாசல்களில் துஆ வேண்டி பாங்கொலிகள் முழங்கின. கோவில்களில் மணியோசை எங்கும் எதிரொலித்தது. கிறிஸ்தவ தேவாலயங்களில் வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் என்ற வார்த்தைகள் காற்றை உடைத்துக் கொண்டு எங்கும் வியாபித்தன.

நகரத்தில் சற்றே தேங்கியிருந்த அந்த அமைதி யாரோ ஓர் சமாதானப் பிரியரின் பிளவுண்ட வார்த்தைகளினால் சிதறுண்டு போனது.

ஓடிக்கொண்டிருந்த வாகனங்களிலிருந்தும் வானை முட்ட உயர்ந்து நின்ற கட்டிடங்களிலிருந்தும் குண்டுகள் வெடித்தன. எங்கும் தீ மூட்டங்களாகவே இருந்தன. வானெங்கும் கரிய புகை மேவிப்பரந்து கிடந்தன.

நகரெங்கும் மீண்டும் கலவரம் மூண்டது. சிறைச்சாலைகளை திறந்து கொண்டு கொலைக் குற்றவாளிகள் நகரத்துக்குள் நுழைந்தனர். வானொலியும் தொலைக்காட்சியும் சமாதானத்திற்கான யுத்தமென்றது.

எரியுண்ட வீடுகளிலிருந்தும் கடைகளிலிருந்தும் கட்டிடங்களிலிருந்தும் புகை கிளம்பிக் கொண்டிருந்தது. வீதிகளெங்கும் சிறுவர்களும் குழந்தைகளும் பெண்களும் அரை குறையாக எரியுண்டு கிடந்தனர்.

தென்கிழக்குத் திசையிலிருந்தபடி வெள்ளை நிறக் குதிரைகளில் துட்டகைமுனு காலத்துப் போர் வீரர்கள் ஆயிரமாயிரமென நகரத்துக்குள் நுழைந்தனர். கைகளில் குத்தீட்டியும் இடுப்புகளில் பளிச்சிடும் வாளுமென புன்னகை பூத்தவாறே நகரத்து வீதிகளில் வலம் வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடுக்கிட்டு கண் விழித்தான். உச்சந்தலையில் பிடித்து உலுப்பியபடி அதே கைகள் அவனை தூக்கியபடி நிறுத்தியது. பயமும், பசியும், களைப்பும் அவனை மீண்டும் மீண்டும் கொன்றன.

வெள்ளை நிற சாந்து பூசிய அந்த அழகிய மாளிகையின் நான்காவது மாடியின் இன்னுமோர் அறைக்குள் அவனை இழுத்துச் சென்றனர்.

கனவில் வந்த அதே காவலர்கள் அவனைச் சுற்றி நின்றனர். கைகளில் குத்தீட்டியும் பளிச்சிடும் வாளுமென அவனைப் பார்த்து முறைத்தனர். மீண்டும் கேள்விகள் கேட்டனர். "இந்த நகரத்துக்குள் நீ ஏன் நுழைந்தாய்?..."

தினக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org